விலை ரூபா 20.00



காலாவதியான அமெரிக்கா

பக்கம் 09



மீண்டும் போராட்டம்

பக்கம் 11



கொன்றவனை கொண்டாடும் தமிழன்

பக்கம் 14



காலியில் சுழல்

பக்கம் 27

www.onlineuthayan.com

பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27
கதிர் 123

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 15 புதன்கிழமை (28/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# வடக்கு மாகாணத் தேர்தலை இந்தியா உடன் வலியுறுத்தும்

## இலங்கை விடயத்தில் புதுடில்லியின் அடுத்த நகர்வு இதுதான்

கொழும்பு, மார்ச் 28

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை விரைந்து நடத்துமாறு புதுடில்லி கொழும்பிடம் வலியுறுத்தவுள்ளது. இதற்கான இராஜதந்திர நகர்வுகளில் இந்திய அரசதலைமை ஈடுபட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது. ஜெனிவாவில் இலங்கைமீதுகொண்டுவரப்பட்டுள்ளதீர்மானத்தின் நெருக்கடி நிலையில்இருந்துஇலங்கை அரசுமீள்வதற்குப் பல காத்திரமான - உறுதியான நடவடிக்கைகளை நாட்டில் மேற்கொள்ள வேண்டி உள்ளன என்று புதுடில்லி கருதுகிறது. அதனையே இலங்கையிடம் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது. எனவே இந்த வேளையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அங்கு மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகம் நடைபெறுவதற்கான வழியை ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச அழுத்தங்களில் இருந்து இலங்கை ஓரளவேனும் விடுபட முடியும் என இந்தியா இலங்கைக்கு ஆலோசனை வழங்கி உள்ளதாகத் தெரிய வருகிறது.

வடக்கில் இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்ற 04

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரி யாழ்.மாநகர சபை நேற்றுத் தீர்மானம்

### அமெரிக்கா அழுத்தத்தை புறக்கணிக்கவும் யோசனை கூறுகிறது

நல்லூர், மார்ச் 28

நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்தி யாழ்.மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் இலங்கை அரசு தானாகவே பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சபை ஆலோசனை வழங்கியுள்ளது.

சர்வதேச அனுசரணையை மட்டும் வரவேற்கும் நாம் எமது மக்களின் நலன் கருதி அமெரிக்க தீர்மானத்தின் அழுத்தங்களை நிராகரிப்போம். அதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாம் கோருகிறோம் 04

## பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

### மீண்டும் வலியுறுத்துகிறது பிரிட்டன்



லண்டன்,மார்ச் 28

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஜெர்மி பிறவுண் தெரிவித்துள்ளார்.

கூடிய விரைவில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென 04

## பரிந்துரை பற்றியே பீரிஸுடன் பேசப்படும்

### அமெரிக்கா நேற்று அறிவிப்பு

வாஷிங்ரன்,மார்ச் 28

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்தே இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் கலந்துரையாடுவதற்கு இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் எதிர்பார்த்துள்ளார். இந்தச் சந்திப்புக்கு மே 18ஆம் திகதி நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் நேற்றுத் தெரிவித்தார். 04

## விலக விரும்பினால் வெளியேறுங்கள்

### தொண்டமானுக்கு அரசு பதிலடி

கொழும்பு, மார்ச் 28

அரசிலிருந்து வெளியேற விரும்புவோர் எந்நேரமும் வெளியேறலாம். அதற்கான கதவு திறந்தே வைக்கப்பட்டுள்ளது. அரசின் இந்தக் கொள்கை, அமைச்சர் தொண்டமானுக்கு மட்டும் விதிவிலக்கல்ல - 04

## யாழ்ப்பாணத்தில் மே தினம் கூட்டமைப்பின் முடிவு விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பொது எதிர்க் கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடி ஆராய்ந்து தீர்மானமொன்றை எடுக்கவிருக்கிறது.

பொது மேதினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்க் 04

## ரூ.50 இலட்சம் பெறுமதியான விக்கிரகங்கள் முள்ளியவளை ஆலயத்தில் திருட்டு

### கும்பாபிஷேகம் நடக்கவிருந்த நிலையில் சம்பவம்

முள்ளியவளை, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை கணுக்கேணி கற்பக விநாயகர் ஆலயத்தில் சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் துணிகரமாகத் திருடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கும் 2.30 மணிக்கும் இடையில் இந்தத் திருட்டு இடம்பெற்றிருப்பதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் ப. தங்கவடிவேல் தெரிவித் துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்துத் தங்கவடிவேல் விவரித்ததாவது:

அற்புத விநாயகர் ஆலயத் 04

## மாவோயிஸ்ட்டுக்களுடன் இணைந்து இலங்கைக்குழு

### கர்நாடக அரசு கூறுகிறது

பெங்களூர், மார்ச் 28

ஆந்திராவின் மேற்குப் பகுதிக் காடுகளில் செயற்பட்டு வரும் மாவோயிஸ்ட் குழுக்களுடன் இணைந்து சிறிய இலங்கை குழுவொன்றும் செயற்பட்டு வருவதாக கர்நாடகா உள்துறை அமைச்சர் ஆர்.அசோக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திரப் பிரதேசத்தின் சிக்கமகூலர், உடுப்பி, ஷிமோகா மற்றும் தக்ஷின கன்னடம் ஆகிய பகுதிகளில் 25-30 மாவோயிஸ்ட்டுக்களுடன் இணைந்து இலங்கை குழுவொன்று செயற்பட்டு வருவதைத் தாம் அறிந்துள்ள தாகக் கர்நாடகா சட்ட சபையில் ஆர்.அசோக் கூறியுள்ளார்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அண்மையில் நக்சலைட்டுக்கள் கைப்பற்றிய மாவோயிஸ்ட்டுக்களின் ஆயுதங்களை அடுத்து இலங்கை சந்தேகநபர்கள் குறித்த தகவல் வெளிச்சத்திற்கு வந்ததாகக் கர்நாடகா சட்ட சபையில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்வத் நாரயணன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அசோக் தெரிவித்துள்ளார். இந்த அச்சுறுத்தலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கர்நாடக உள்துறை அமைச்சர் அசோக் கூறியுள்ளார். (த)

## புதுமாத்தளனில் குண்டுகள் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பெருந்தொகையான வெடி பொருள்கள் மற்றும் வெடி கருவிகள் மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவின் வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன. மி.மீ 81 ரக மோட்டார் குண்டுகள்-124, மி.மீ 81 ரக இன்சன் டயரி ரக குண்டுகள் 34. மி.மீ 81 ஸ்டொக் ரக குண்டுகள் -10 ஆர்.பீ. எல் ரக குண்டுகள் 04 ஆகியனவே மீட்கப்பட்டன. இது தவிர, புதுமாத்தளன் பிரதேசத்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மி.மீ. 60 மோட்டார் குண்டுகள் -16 கைப்பற்றப்பட்டன.

## பல்கலை ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

கல்வித் துறையின் நெருக்கடி தொடர்பான பிரச்சினைகள் குறித்து உயர் கல்வி அமைச்சுடன் பேசுவதைக் கைவிட்டு அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினர் நேற்று செவ்வாய்க் கிழமை தெரிவித்தனர். நாடளாவிய ரீதியில் எதிர்வரும் எப்ரல் 26ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறும். குறித்த தினத்தில் கொழும்பில் பொது ஆர்ப்பாட்டமும் நடைபெறும் என அந்தச் சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

## பிரதே சபை உறுப்பினர் கைது

மரக்குற்றி கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் வவுனியா செட்டிக்குளம் பிரதேச சபையின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். செட்டிகுளம், வனப்பகுதியில் சட்டவிரோதமாக மரம் வெட்டிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான குறித்த பிரதேச சபை உறுப்பினர் கடந்த 23ஆம் திகதி பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்றார். கைது செய்யப்பட்ட குறித்த நபர் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## விடைத்தாள் மீள்திருத்தத்துக்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள் திருத்துவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார். பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களின் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்திற்குச் சென்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. அதற்கான மாதிரி விண்ணப்பங்களை வெளியிட்டுள்ளதாகவும் ஒரு பாடத்திற்கான மீள் திருத்தக் கட்டணம் 150 ரூபா எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

## இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர்

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்கும் மாலைதீவுக்குமான புதிய தூதுவராக வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த இராஜதந்திரியான மிஷேல் சிஸன் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுச் சேவையில் சிரேஷ்ட நிலையிலுள்ள இவர், பக்தாத்தில் சட்ட அமுலாக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான தூதுக்குழுவின் உதவித் தலைவராக இதுவரை கடமையாற்றியவர் ஆவார்.

இலங்கைக்கான தூதுவராக சிஸன் ஈராக்கிற்கான தூதுவராக பிரெட் மக்கேக் ஆகியோரின் நியமனங்களை அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா, 'தமது புதிய பதவிகளில் இவர்கள் வழங்கவுள்ள நிபுணத்துவ சேவையினால் எமது நாடு பெரும் நன்மையடையும்' என கூறினார். (த)

# இலங்கை மீதான தீர்மானம் அரசியல் நோக்கமுடையது

### ரஷ்யத் தூதுவர் இப்படிச் சொல்கிறார்

புதுடில்லி, மார்ச் 28


ஐ. நா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மீதான தீர்மானம் சபையின் நன்மதிப்பிற்குக் ஏற்பட்ட களங்கமாகவே ரஷ்யா கருதுகின்றது என இந்தியாவுக்கான ரஷ்யத் தூதுவர் அலெக்ஸான்டர் கடாகின் தெரிவித்துள்ளார்.

நாடுகளின் அடிப்படையில் ஏன் திடீரென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏதேனும் ஒரு நாட்டின் மீது மற்றுமொரு நாடு அழுத்தங்களை பிரயோகிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஏதேனும் ஒரு நாட்டின் மீது மற்றமொரு நாடு அழுத்தங்களை பிரயோகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.**



அதேவேளை, இலங்கையின் சகவாழ்வுக்கு, சர்வதேச தலையீடுகள் மூலம் அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடாது என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் விளடீமீர் மிகாயலோவ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்க இலங்கை அரசுக்கு, ரஷ்யா பெரும் உதவிகளை வழங்கியது. இந்த நிலையில், இலங்கையில் தேசிய ரீதியாக சகவாழ்வை ஏற்படுத்த இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். இதன்போது, இலங்கையின் கோரிக்கைக்கு அமைய, ரஷ்யா நட்பு ரீதியான உதவிகளை வழங்கும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் உரிமை இலங்கைக்கே உள்ளது. அவ்வாறான விசாரணையின் போது, இராணுவத் தலையீடுகள் இருக்கக் கூடாது. அத்துடன் மனித உரிமை மீறல் என்ற விடயம் அரசியல் மயப்படுத்தப்படக் கூடாது எனவும் ரஷ்யத் தூதுவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த)

## பொறிமுறை ஒன்று கையாளப்பட வேண்டும்

கொழும்பு,மார்ச் 28

ஐ.நா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்த பொறிமுறை ஒன்று கையாளப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மனித உரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இலங்கை அரசு அரசியல் செயற்திட்டமாக மாற்றியுள்ளது. இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரதிபலனைப் பொது மக்கள் அனுபவிக்க நேரிடும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (த)

## ஜெனிவா பயணம் செய்ய பணம் பெற்றீர்களா?

### அரச தரப்பு சட்டத்தரணி சந்தியா பிரகீத்திடம் கேள்வி

கொழும்பு,மார்ச் 28

அரச தரப்புச் சட்டத்தரணி தனக்கு அழுத்தம் கொடுப்பதாகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்நெலிகொட விசனம் தெரிவித்துள்ளார்.

ஹோமாகம நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, சட்டத்தரணி தம்மைத் தகாத வார்த்தைகளினால் திட்டியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஹோமாகம நீதிமன்றில் நடைபெற்றது.

ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்வுகளுக்கு சென்றமை தொடர்பில் குறுக்குக் கேள்விகளைக் கேட்டதாகச் சந்தியா தெரிவித்துள்ளார். ஜெனிவா பயணத்திற்கும், வழக்கு விசாரணைகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஜெனிவா பயணத்திற்கும், வழக்கு விசாரணைகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.**

எனினும், பணம் பெற்றுக் கொண்டீர்களா? யார் அனுசரணை வழங்கினார்கள்? போன்ற தேவையற்ற கேள்விகளை அரச தரப்பு சட்டத்தரணி எழுப்பியதாகச் சந்தியா குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகச் சட்டத்தரணி, தம் மீது குற்றம் சுமத்தியதாக அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். (த)

## ரூ.45 கோடி பெறுமதியான சாதனை கேக்



*45 கோடி ரூபா பெறுமதியான கேக் ஒன்றை அஹுங்கல்ல, ஹெரிடன்ஸ் ஹோட்டலின் பிரதான சமையற்காரரான திமுது குமாரசிங்க தயாரித்துள்ளார். நீல மாணிக்கக் கற்கள் 10, தங்க நகைகள் 10, 10 வகையான சுவைகளைக் கொண்ட சொக்லேட்டுக்கள் உள்ளடக்கிய வகையில் இந்தக் கேக் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*கப்பல் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கேக், மோட்டார் ஷெல் ஒன்றின் மேல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த கேக்கைப் பார்வையிடுவதற்காக இலங்கை - இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் அணி திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## ஐ.தே.க. இன்று கண்டியில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச் 28

எரிபொருள் விலையேற்றம் மற்றும் விலைவாசி அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட பொது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி இன்று புதன்கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 அளவில் ஏற்பாடாகியுள்ள மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், நவ சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, ஐக்கிய சோஷலிச கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, நவ சிஹல உறுமய தலைவர் சரத் மனமேத்துர உள்ளிட்டோருடன் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் அமைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

## பீரிஸ் பதவி விலக வேண்டும்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 28

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பதவி விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் ராஜதந்திர உறவுகளில் பெரியளவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பின்னடைவுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் ஜீ.எல்.பீரிஸ் பொறுப்புச் சொல்ல வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, அமைச்சர் பீரிஸ் தமது பதவியை விட்டு விலக வேண்டுமென சஜித் கோரியுள்ளார்.

அரசு உரிய முறையில் வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணாமையே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## மானிய விலையில் இலங்கைக்கு வியட்நாமிலிருந்து எரிபொருள்

கொழும்பு,மார்ச் 28

மானிய விலை அடிப்படையில் வியட்நாமில் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக வியட்நாம் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்கீழ், ஆறு மாதங்களுக்கு மானிய விலையின் அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

**ஓமானில் இருந்தும் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.**

இதேவேளை, ஓமானில் இருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (த)

## சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச் 28

கோட்டே ரஜமகா விகாரையில் இரு பௌத்த பிக்குகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு ஆதரவாக முன்னிலையான சட்டத்தரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்றுக் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக சட்டத்தரணிகள் ஆர்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள், மாளிகாகந்தை, கோட்டை ஆகிய நீதிமன்றங்களின் சட்டத் தரணிகள் உட்பட பல நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் இதில் பங்கேற்றனர்.

சட்டத்தைப் பாதுகாப்பது மக்கள் உரிமை, சட்டத்தரணிகளுக்கு உள்ள உரிமைகளைப் பாதுகாப்போம் போன்ற கோஷங்களை அவர்கள் அங்கு எழுப்பியபடியே பேரணியாகச் சென்றனர்.

சட்டத்தரணியான சுமித் சில்வா மீது தாக்குதல் நடத்தியமைக்கு அவர்கள் தங்கள் கண்டனத்தையும் வெளிப்படுத்தினர். சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்வதில் பொலிஸார் காட்டும் அக்கறை இன்மைக்கு அவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 250 க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் பங்கேற்றனர். (த)

# வடமராட்சி மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

## இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்கக் கோரி

*வடமராட்சி, மார்ச் 28*

***இந்தியமீனவர்கள்வட கடலில்இழுவைப்படகுகளில் அத்துமீறி மீன்பிடிப்பதையும் இதனால் மீனவர்களின் பெறுமதிமிக்க வலை, உபகரணங்களைச் சேதப்படுத்துவதையும், கடல் வளத்தை அழிப்பதையும் கண்டித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.***



வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் சமாசத்தின் தொண்டமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான ஆயிரக்கணக்கான மீனவர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். சொற்ப தொகைப் பெண்களும் இந்தப் பேரணியில் பங்கேற்றனர். அத்துடன் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் தொழில் புரியும் மீனவர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் கடல்தொழிலாளர் கூட்டுறவுக் கட்டடத்தின் முன்னால் சமாசச் செயலாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பேரணியும், முனையில் புனித அந்தோனியார் தேவாலயம் முன்னால் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. ஜோன் மவுலிஸ் அடிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பேரணியும், 10 மணியளவில் கொட்டடி முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் ஒன்றாக இணைந்து கொண்டன. அங்கிருந்து முதலாம் குறுக்குத் தெரு, மத்திய பஸ் நிலையம், பிரதான வீதி ஊடாக 10.40 மணிக்கு பேரணி பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எம்.தவரட்ணம், வடமராட்சி வடக்கு கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் ச.அருள்தாஸ், செயலாளர் த.சந்திரதாஸ், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் என்.தெய்வேந்திரம் ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியில்பங்குகொண்ட மீனவர்கள் கோஷங்களை எழுப்பியும், சுலோக அட்டைகளை ஏந்தியவாறும்சென்று கொண்டிருந்தனர். பிரதேச செயலக வாசலைச்சென்றடைந்த பேரணியை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், உதவி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆகியோர் வரவேற்றனர். சமாசத் தலைவரும், செயலாளரும் ஒன்றிணைந்து மகஜர் ஒன்றை பிரதேச செயலரிடம் கையளித்தனர். மகஜரைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலர் அரச அதிபர் ஊடாக உரியவர்களுக்குத்தாமதமின்றி அனுப்பி வைப்பதாகக் கூறினார்.

'உலக நாடுகளுக்குச் சவால்விடும் இலங்கை அரசு, இழுவைப் படகு ஊடுருவலில் இந்தியாவிடம் மௌனம் சாதிப்பது எதற்காக?' 'நாம் சாகும் போது தீக்குளித்த இந்தியாவே நாம் வாழும் போது எம்மை சுரண்டிப்பிழைப்பதும் நீதான்', 'இந்திய அரசே இழுவைப் படகுகள் ஊடுருவல்களை உடன்நிறுத்து' ஆகிய கோஷங்களை பேரணியில் கலந்து கொண்ட மீனவர்கள் எழுப்பினார்கள்.

இந்திய மீனவர்களின் ஊடுருவல்களைக் கண்டித்து நேற்றைய பேரணியுடன், நேற்று முன்தினம் தொழில் புறக்கணிப்பினையும் வடமராட்சி மீனவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

நேற்றைய பேரணிக்கு பருத்தித்துறை பொலிஸார் போதிய பாதுகாப்பு வழங்கியதுடன் பேரணிதடையின்றிச் செல்ல பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டனர். (த-8)

## தாய்க்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 28

சட்டவிரோத கருக்கலைப்பு நிலையத்தில் குழந்தையைப் பிரசவித்த தாய் யாழ். நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ். போதனா வைத்திய சாலைக்குப் பின்புறமாக ரயில் பாதையை அண்மித்துள்ள வீடொன்றில் குறித்த சட்டவிரோத கருக்கலைப்பு நிலையம் இயங்கி வந்தது. அங்கு குழந்தையைப் பிரசவித்த தாய் ஒருவர் அதிக இரத்தப் போக்குக் காரணமாக பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது பொலிஸாரால் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அதன்போதே 41 வயதான பிரஸ்தாப தாயை 50 ஆயிரம் ரூபா ஆட் பிணையில் மன்று விடுவித்தது.

இதேவேளை, சட்டவிரோத கருக்கலைப்பு நிலையத்தில் அவர் குழந்தைஒன்றை பிரசவித்திருந்தார். எனினும் அந்தக்குழந்தையுடன் குறித்த நிலையத்தை நடத்தி வந்த நாட்டு வைத்தியர் தலைமறைவாகிவிட்டார். அவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. குழந்தையும் மீட்கப்படவில்லை. (ங-4)

# இந்தியத் தூதருக்கு மனு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 28

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டினால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிக்கு மகஜர் கையளிப்பதனைத் தவிர்த்துக்கொண்டதாகத் தெரிய வருகிறது.

மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்களினால் விரக்தியுற்ற வடமராட்சி வடக்கு மீனவர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்னாவுக்கான மனுவை யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தியிடம் அவர்கள் கையளித்துள்ளனர் .

அதன் பிரதிகளை ஜனாதிபதி, யாழ். மாவட்ட அரச அதிபர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியத்தூதரக அதிகாரி, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர், வட பிராந்தியக் கடற்படை தளபதி ஆகியோருக்கு நேரில் மனு கையளிப்பது என வடமராட்சி வடக்கு மீனவர்கள் ஏற்கனவே தீர்மானித்திருந்தனர்.

இதன் பிரகாரம் மகஜர் இந்தியத் துணை அதிகாரி தவிர்ந்த அனைவருக்கும் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள. இந்திய துணைத் தூதரக அதிகாரிக்கு மகஜர் கையளிக்கும் தீர்மானம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீடு காரணமாக இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது .

இந்த விடயம் தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வி.ஆர்.அருள்தாஸைக் கேட்ட போது,

இந்திய துணைத் தூதரக அதிகாரிக்கு மகஜர் கொடுத்து என்ன பிரயோசனம் என நினைத்தே அதனைத் தவிர்த்துக் கொண்டோம். இந்திய துணைத் தூதரக அதிகாரிக்கும் மகஜர் கொடுப்பது என்று முதலில் நாம் தீர்மானித்திருந்தோம். பின்னர் எமது தீர்மானத்தில் மாற்றத்தை செய்தோம் என்றார். (த-3)

# புதிய தனியார் பஸ் நிலையம் முனீஸ்வரன் வீதியில் அமையும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் தரிப்பதற்கான தனியார் பஸ் நிலையம் அமைப்பதற்கான காணியை யாழ். மாநகர சபை வழங்கவுள்ளது. முனீஸ்வரன் வீதி பழைய றீகல் தியேட்டருக்கு இடைப்பட்ட காணியும் வற்றாக்குளமும் இதற்காக வழங்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

தூர இடங்களுக்கான தனியார் பஸ் நிலையம் அமைப்பது தொடர்பாக நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை யாழ். மாநகரசபை முதல்வர் தலைமையில் தனியார் பஸ் ஊழியர்கள், படை அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

யாழ். மாநகரசபை மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கட்டடத்தில் பயணிகளுக்கான இருக்கைகள் மற்றும் பயணத்துக்குத் தேவையானபொருள்களைக் கொண்டதாக இரண்டு கடைகள், ஆண், பெண்களுக்கான மலசலகூட வசதிகள், சாரதி மற்றும் பஸ் ஊழியர்கள் 25 பேர் தங்கக் கூடியதாக ஓய்வு அறைகள் ஆகியவற்றைக் கொண்டதாக இந்த பஸ் நிலையம் அமையும் என நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

எனினும் கட்டடத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டதால் ஒருவரைபடத்தைத் தயாரித்து மீண்டும் அது பற்றி ஆலோசிப்பதாகவும் பஸ் உரிமையாளர்கள் கூட்டத்துக்கு சமுகமளிக்கும் பட்சத்திலேயே சரியான முடிவை மேற்கொள்ள முடியும் எனவும் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்களையும் அழைத்து முடிவு செய்யப்படும் என முதல்வர் தெரிவித்தார். (த-7)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சோமசுந்தரம்

புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல. 127, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சோமசுந்தரம் (26.03.2012) திங்கட்கிழமை சிவகதியடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களாகிய சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சதாசிவம், நாகம்மா, கமலம் மற்றும் முருகேசு ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவபாக்கியம், குருசாமி, சோமசுந்தரம் சிவரட்ணம், பாலலோசினி, சண்முகநாதன் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற குகேசன் (Sri Rangan Trading Company - 4 th Cross Street - Colombo) மற்றும் ஜெகதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), மஞ்சுளா (கொழும்பு), ராதிகா (தாவடி), சுகா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், கலைமதி, சுமதி, சறிதரன், மகேந்திரன், ஸ்ரீபிரபா ஆகியோரின் அன்பு மாமனும் வேணுகா, அபிரா, கிரிஷாந், சானுஜன், லக்ஷாயினி, ஜதுஷன், விந்துஜா, இந்துசன், றொசாந்தன், திசாந்தன், நிருசிகன், ரக்ஷிகா, உமேஸ்ராம் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, இராசலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, சிவராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை காலை 9 மணிக்கு 127, அரசடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**127, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.**

(16127- 45-7-6-9)

**தகவல்:
குடும்பத்தினர்**

## ஜெனிவா தீர்மானம்; அமைச்சரவைக் கூட்டம்

### இன்று விரிவாக ஆராய்வு

கொழும்பு, மார்ச் 28

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அமுலாக்கம் தொடர்பில் அமைச்சரவை இன்று விரிவாக ஆராயுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாத் தீர்மானத்திற்குப் பின்னர் அது தொடர்பில் நாட்டில் பல்வேறு மட்டங்களில் கடும் விமர்சனங்களும், எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன. இந்நிலையில், இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூடும் அமைச்சரவை, இந்த விடயங்களைத் தீவிரமாக ஆராய்ந்து கூட்டுத் தீர்மானமொன்றை எடுக்குமென அரசதரப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டுமெனவும் அரசு அறிவித்திருக்கிறது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக செயற்பட்ட நாடுகள், குறிப்பாக இந்தியா, இலங்கை தொடர்பில் செயற்பட்ட விதம் என்பன பற்றி இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படுமென அரசதரப்பு வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (சி)

## தெரிவுக்குழு விடயம் தவறு அரசு பக்கமே

### சாடுகிறார் சுரேஷ் எம்.பி.

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் விடயத்தை அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீறியுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தெரிவுக்குழு அமைப்பதற்கு முன்னர், தனது முன்மொழிவுகளை அறிவித்து ஒரு பொது நிலைப்பாட்டை எடுப்பதற்கு பேச்சுவார்த்தையின் போது அரசு ஒப்புக்கொண்டிருந்தது.

இதன் போது நாம் முன்வைத்த பிரதான விடயங்களில் பொது உடன்பாடு எட்டப்பட்ட பின் நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவோம் எனக் கூறியிருந்தோம். இந்த விடயங்கள் கூட்டறிக்கையில் பதியப்பட்டுள்ளன.

எனினும் அரசு தனது வாக்குறுதியை மறந்து விட்டு தீர்வுக்கு கூட்டமைப்பே தடையாக இருப்பதாகத் திரிவுபடுத்திக் கூறுகிறது.

எட்டப்பட்ட உடன்பாட்டை மதித்து நடவுங்கள். அப்போது தான் எம்மால் நகர முடியும் - என்றார். (ங-10)

## பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

01↘ வும்குறிப்பிட்டுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானம் மூலம், இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் உலக நாடுகள் காட்டி வரும் கரிசனை தெளிவாகின்றது எனவும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது எனவும் மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பில் பிரிட்டன் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.(த)

## வடக்கு மாகாணத் தேர்தலை இந்தியா உடன் வலியுறுத்தும்

01↘ மையால் அங்குள்ள மக்களும் சினம் அடைந்துள்ளனர். எனவே வடக்கில் தேர்தலை நடத்தி மாகாண சபை நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்பதன் மூலம் மக்கள் தற்காலிகமாக வேனும் இராணுவ நெருக்குவாரங்களில் இருந்து மீள முடியும் என இந்தியா இலங்கையிடம் சுட்டிக் காட்டவுள்ளதாகவும் ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தப் பொருத்தமான சூழல் உள்ளதால் அதனை விரைவில் நடத்துமாறு புதுடில்லி கொழும்பிடம் பகிரங்கமான கோரிக்கை ஒன்றை முன்வைக்க ஆயத்தமாகி வருவதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக இந்திய அரசின் பிரதிநிதிகள் இலங்கை அரச தலைமையை நேரில் சந்தித்து இது தொடர்பில் வலியுறுத்துவர் என ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் கூறின. (உ-த)

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரி யாழ்.மாநகர சபை நேற்றுத் தீர்மானம்

01↘ எனத் தெரிவிக்கும் தீர்மானம் இரண்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாகப் 10 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் கிடைத்தன.

யாழ்.மாநகர சபையின் மாசி மாதத்திற்கான கூட்டம் நேற்று நடைபெற்றது. முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது . கூட்டத்தில் தீர்மானத்துக்கான வரைபை உறுப்பினர் கிளபோடாசிஸ் பிரேரித்தார் மாநகர சபையின் ஆளும் கட்சி எதிரணி உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துகளைத் தெரிவித்தனர்.

புலம்பெயர்ந்த மக்களுக்கு இந்த நாட்டைப் பற்றி அக்கறை இல்லாமல் இருக்கும். சில முஸ்லிம் நாடுகளில் அமெரிக்கா மூக்கை நுழைத்து நாட்டை சின்னாபின்னப்படுத்தியுள்ளது. மனித குலத்துக்கு எதிரான நாடான அமெரிக்காவின் தீர்மானத்தை நாங்கள் கண்டிக்கிறோம் என எம்.ரமீஸ் தெரிவித்தார்.

கூட்டமைப்பு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பேசுகையில் 'நல்லிணக்கத்திற்கு தடையாக இங்கே பேரினவாதம் தான் இருக்கிறது. அவர்கள் திட்டமிட்டு எம்மை அடக்குகிறார்கள். எமக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். கல்வி மொழி உட்பட அனைத்து நிலைகளிலும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். கல்வி மொழி உட்பட அனைத்து நிலைகளிலும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறை வேற்ற அரசு முன்வரவில்லை.

இங்கே இன்னமும் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனர். இராணுவம் எல்லா இடங்களையும் ஆக்கிரமித்துள்ளது. அனாவசியமாக புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு வருகின்றன. நல்லிணக்கம் எப்படி வரும்?. அதற்கு அரசு தயாராக இல்லை.'' என்றார்.

மாநகர சபை உறுப்பினர் மு.றெமீடியஸ், அ.பரஞ்சோதி, எஸ்.விஜயகாந், முஸ்தபா உட்படப் பலர் தீர்மானத்துக்கு எதிராகவும் ஆதரவாகவும் உரையாற்றினார்கள்.

முன்னாதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக எதிரணியினர் தமது கருத்துகளைக் கூற முற்பட்டபோது கூட்டத்தை அரைமணி நேரம் ஒத்திவைத்து வெளியேறப்போவதாகக் கூறிய யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யேகேஸ்வரி பற்குணராஜா சபையை விட்டு வெளியேறித் தனது அலுவலகத்துக்குச் சென்றார். ஆளும் கட்சி உறுப்பினர்களும் சபையில் இருந்து வெளியேறிச் சென்றனர். எனினும் எதிரணியினர் தாங்கள் வெளியேறப் போவதில்லை எனக் கூறித் தமது இருக்கைகளிலேயே அமர்ந்திருந்தனர். அரை மணி நேரத்தின் பின் சபைக்கு வந்த முதல்வர் விவாதத்துக்கு அனுமதியளித்ததை அடுத்துக் கூட்டம் நடைபெற்றது. (உ-7)

## பரிந்துரை பற்றியே பீரிஸுடன் பேசப்படும்

01↘ அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜெனிவா தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாது என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த விக்ரோரியா நுலன்ட் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்குத் தேவையான உறுதியான நடவடிக்கையை இலங்கை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையை இந்தத் தீர்மானத்தின் மூலம் முன்னோக்கி நகர்த்த முடியும், என்று அமெரிக்கா நம்புகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைத் தீர்மானம் இலங்கையைக் கேட்டுக் கொண்டுள்ளது. இலங்கையை முன்னோக்கி நகர்த்த முடியும் என்று நாம் நம்புகிறோம். நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். - என்றார். (த)

## யாழ்ப்பாணத்தில் மே தினம் கூட்டமைப்பின் முடிவு விரைவில்

01↘ கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பிரமுகர்களான மனோ கணேசன், சிறிதுங்க ஜயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ண, திஸ்ஸ அத்தநாயக்க, ஜயலத் ஜயவர்தன, லக்ஷ்மன் கிரியெல்ல, தயா கமகே, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பொது மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்பு கலந்துகொள்வது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது எனவும், வெகுவிரைவில் இது தொடர்பில் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்திருக்கிறார்.

''ஐக்கியதேசியக் கட்சியினால் நடத்தப்படும் பொது மேதினக் கூட்டத்தில் தமிழ்க்கூட்டமைப்பு கலந்து கொள்வது குறித்து மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. எனவே, அவர்களுடன் பேசி ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டியுள்ளது'' என்று இந்தக் கூட்டத்தில் சம்பந்தன் எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பொது எதிர்க்கட்சிகள் நடத்தும் இந்தக் கூட்டத்திற்கு கூட்டமைப்பின் பங்களிப்பும் இருக்குமாயின் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்குமென இங்கு கருத்து வெளியிட்ட ஐ.தே.க. தலைவர், கூட்டமைப்பு ஆராய்ந்து சாதகமான ஒரு தீர்மானத்தை எடுக்குமாறு கேட்டிருக்கிறாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## விலக விரும்பினால் வெளியேறுங்கள்

01↘ என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் என அறிய முடிகின்றது.

தொண்டமான் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளதால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து இ.தொ.கா. வெளியேறும் எனத் தகவல்கள் கசிந்து, அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறான அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார்.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச் சின் கீழ் இயங்கும் தேசிய கால்நடைகள் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் ஒருவரின் நியமனம் தொடர்பில் எழுந்த முரண்பாட்டையடுத்து அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தனது பதவியை இராஜினமா செய்தார்.

பணிப்பாளர் நியமன விவகாரத்தால் ஜனாதிபதிக்கும் அமைச்சர் தொண்டமானுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது என்றும், இதனையடுத்தே தொண்டமான் இவ்வாறானதொரு முடிவில் இறங்கியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தொண்டமானின் இந்த அறிவிப்பையடுத்து, அவரை சமாதானப்படுத்தும் நோக்கில் சிரேஷ்ட அமைச்சர்களில் சிலர் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியுடன் சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்துரையாடும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர், ''பலவந்தமாக எவரையும் தாங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவைப்பாடு எமக்குக் கிடையாது. தொண்டமான் அரசிலிருந்து வெளியேற விரும்பினால் வெளியேறட்டும். அதில் எமக்கு எதுவித ஆட்சேபணையுமில்லை. வெளியேறுவதற்கு கதவு திறந்தே வைக்கப்பட்டுள்ளது.

''தொண்டமான் என்னிடம் இராஜினாமாக் கடிதம் சமர்ப்பிக்கவில்லை. நான் தான் ஜனாதிபதி. அப்படியானால் அவர் வேறு எவரிடமாவது அதைச் சமர்ப்பித்திருப்பார். இதற்கு முன்னரும் பல தடவைகள் அவர் இந்தப் பல்லவியைப் பாடியுள்ளார். ஆனால், சொன்னதைச் செய்யவில்லை. எனவே, அரசிலிலிருந்து வெளியேற விரும்புவோர் தாராளமாக வெளியேறலாம்'' என்றும் குறிப்பிட்டுள்ளார் என அறிய முடிகின்றது.

## ரூ.50 இலட்சம் பெறுமதியான விக்கிரகங்கள் முள்ளியவளை ஆலயத்தில் திருட்டு

01↘ தின் கும்பாபிஷேக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதனை முன்னிட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தெய்வ விக்கிரகங்கள் அனைத்தும் ஓரிடத்தில்-வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலைவேளை இனந்தெரியாதவர்களால் ஆலயக் கதவு உடைக்கப்பட்டு 10 விக்கிரகங்கள் சூறையாடப்பட்டுள்ளன. ஐம்பொன்னாலான இந்த விக்கிரங்களின் பெறுமதி சுமார் 50 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

135 கிலோ நிறையுடைய பஞ்சமுகப் பிள்ளையார் விக்கிரகம், 60 கிலோ நிறையுடைய நடேசர் விக்கிரகம், 60 கிலோ நிறையான உற்சவ மூர்த்தியான பிள்ளையார் விக்கிரகம், 40 கிலோ நிறையான சிவன் விக்கிரகம் இதே நிறையுடைய அம்மன் மற்றும் கௌரியம்மன் விக்கிரகங்கள், 35 கிலோ நிறையுடைய சண்டேஸ்வரர், வள்ளி, தெய்வயானை விக்கிரகங்கள், 45 கிலோ நிறையுடைய முருகன் விக்கிரகம் ஆகியனவே களவாடப்பட்டுள்ளன என்றார் அவர்.

வாகனம் வந்து சென்றதற்கான தடயங்களும் ஆலயச் சூழலில் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்துக்கு அருகில் இராணுவக் காவலரண்கள் உள்ள நிலையில் இரவு வேளையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது அதிர்ச்சியாக உள்ளது என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாகத் தண்ணீரூற்றுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

முல்லைத்தீவிலுள்ள உயர் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். அத்துடன் வவுனியாவிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டதோடு அங்கு காணப்பட்ட தடயங்களையும் சேகரித்துச் சென்றனர்.

இதனிடையே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இரும்பு சேகரிப்பவர்கள் ஆலயச் சுற்றாடலில் நடமாடியதை சிலர் அவதானித்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

விக்கிரகங்கள் திருடப்பட்ட சம்பவத்தால் ஆலயத்தில் இடம்பெறவிருந்த கும்பாபிஷேக நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள குமரபுரம் முருகன் ஆலயத்திலிருந்த சுவாமி வீதியுலா வரும் ஆட்டுக்கடா வாகனம் அண்மையில் திருட்டுப் போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-6-433)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இன்னும் பல நெருக்கடிகளுக்கு அத்திபாரம் இடுகின்ற போக்கில்...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பது குறித்து அது அஞ்சவில்லை. எமது நாட்டுக்கு எதிராக விடுக்கப்பட்ட சவாலை, எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவே உள்ளது. அது தொடர்பில் சமரசத்துக்கு இடமில்லை. இலங்கையின் நலனும் நலமுமே அரசின் இலக்குகள். எந்த வகையான விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை.

அரசாங்கத்தின் சார்பில் அதன் நிலைப்பாட்டை, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு விவரித்திருக்கிறார்.

ஜெனிவாப் பிரேரணை குறித்த சகல எதிர்கால நடவடிக்கைகளின் போதும், இலங்கையர்களினதும், இலங்கையினதும் வருங்கால நலனே பிரதான குறிக்கோளாக அமையும். குறிப்பிட்ட தீர்மானம் எந்த வகையிலும் எங்கள் நாட்டைக் கட்டுப்படுத்தாது--

எங்கள் தேசத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட தீர்வுகள் திட்டமிட்டவாறு தொடர்ந்து செயலாக்கப்படும்--

ஜெனிவாப் பிரேரணை, ஐ.நா.பாதுகாப்புச் சபையுடன் எந்த வகையிலும் தொடர்புடையது அல்ல. பொருளாதாரத் தடை குறித்ததும் அல்ல-- என்றும் அமைச்சர் பீரிஸ் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் விஸ்தாரமாக விவரித்தார்.

அமைச்சர் அத்தோடு நிறுத்தவில்லை. அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவில் எந்த வகையிலும் தொய்வுண்டாகாது. இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்கு அமெரிக்காவில் பெரும் சந்தை வாய்ப்பு உண்டு. அதில் தளர்வு உண்டாகாது. அது மட்டுமன்றி, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பும் உண்டு என்பதனையும் அமைச்சர் பீரிஸ் தொட்டுக்காட்டி உள்ளார்.

ஜெனிவா மாநாட்டில் பங்குபற்றித் திரும்பியுள்ள அரச பிரதானிகளில் ஒருவரான சபை முதல்வரும் நீர்பாசனத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்தும் விசேடமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கைக் குடியரசின் அரசமைப்பின் பிரகாரம், தனியே ஒரு விடயத்தை, குறிக்கோளை, காரணத்தை மக்களிடம் முன்வைத்தே சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியும். ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பல விடயங்கள் குறித்துச் சிபார்சுகளை வழங்கியுள்ளது.--

ஆகையால் பலர் கூறுவது போன்று, கருத்துச் சொல்வது போன்று, நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரதான சிபார்சுகளை சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியும் நிறைவேற்ற முடியாது.--

வெளியார் எவரினதும் நிர்ப்பந்தம் கருதியோ அல்லது அழுத்தத்தின் நிமித்தமோ, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அரசால் ஒரே முறையில் நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது--

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும். நாட்டில் வாழும் பல்லின மக்களிடையே நல்லிணக்கம் தேவை. அதனை அரசு மறுக்கவில்லை. ஆனால் சர்வதேச அழுத்தங்கள் ஊடாகவோ மறைமுக முயற்சிகள் ஊடாகவோ அதனை நிறைவேற்றும் செயற்பாடுகளுக்கு, முயற்சிகளுக்கு அரசு ஆதரவளிக்காது; இடங்கொடுக்காது--

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தம்மபதமாகவோ, பைபிளாகவோ அரசாங்கம் கருதப்போவதில்லை- என்றும் அமெரிக்காவின் முகத்தில் அறைந்தது போன்று, அமைச்சர் சிறிபால டி. சில்வா அழுத்திக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் சார்பில், அமைச்சர்கள் தெரிவித்த கருத்துக்கள் நடைமுறையில் எவ்வாறு அமையும் என்பதனையும், இருந்திருந்தாற்போன்று அவற்றில் மாற்றங்களும், முன்னுக்குப் பின்னரான முரன்படு நிலைப்பாடுகளும் தோன்றுமென்றும் எதிர்பார்ப்பது தவறன்று.

ஜெனிவா மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது குறித்து அரசாங்கம்-அமைச்சர்கள்-அதிருப்தி கொண்டுள்ளது என்பதனை வெளிப்படுத்தினர். அதில் அமெரிக்கா மீது காட்டப்பட்ட காரம் உறைக்கவில்லை. அயல்நாடு என்பதால் தமது வெப்பியாரத்தை, பருத்த பரிமாணத்தில் சொல்லில் வடிக்கவில்லை. அதனால் இந்தியா மீது உள்ளூர்ந்த ஆத்திரமும் வெறுப்பும் இலங்கைக்கு அறவே இல்லை என்று எவரும் கருதிவிட முடியாது!

இந்தியாவைப் பொறுத்தவரையில், தென்மாநிலங்களில் ஜெனிவாப் பிரேரணைக்கு இருந்த ஆதரவைக் கண்டு அஞ்சியும், தனது எதிர்காலத் தேர்தல் வெற்றிகள் கருதியும் -

பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதால் தமிழகத்தில் உண்டாகக்கூடிய வன்செயல்கள் மற்றும் உயிரிழப்புகள் போன்ற எதிர்மறை விளைவுகளைத் தவிர்க்கவுமே - தீர்மானத்தை ஆதரிக்க முடிவு செய்தது என்றால், அது தப்பன்று.

அதேவேளை, அதனைவிடவும் அமெரிக்காவின் ஜெனிவாப் பிரேரணையை ஆதரிக்க வேண்டிய கட்டாய தேவையும் இந்தியாவுக்கு இருந்தது. அமெரிக்காவின் பிரேரணையின் பக்கம் சாராமல், நடுவு நிலைமை வகித்து வாக்களிப்பில் பங்கு பற்றாது இருப்பினும் கூட, வேண்டாத ஒன்றுக்கு அமெரிக்காவைப் பகைப்பதாகிவிடும். அதனூடு தென்னாசியாவில் சீனச்செல்வாக்கு, இப்போதுள்ள சமன்பாட்டைத் தேய்த்துவிடும் என்பதனையும் மனதில் போட்டுக் கொண்டே, இந்தியா இறுதி வேளையில், தீர்மானத்தை ஆரத்தழுவி வரவேற்றது.

மொத்தத்தில் இந்தியாவின் முடிவு இலங்கைக்குப் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது. ஆனால் அதனைப் பெரிது படுத்தி அயல் நாடான, வல்லரசாக மாறிக்கொண்டிருக்கும் உபகண்ட நாட்டைப் பகைத்துக் கொள்வதற்கு இலங்கை விரும்பவில்லை என்பது அமைச்சர்களின் அடக்கி வாசிப்பின் மூலம், புலப்படுத்தப்பட்டுள்ளது.

எது எப்படியோ, தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு இன்னும் நெடுங்காலம் சென்றாலும் தூசி தட்டித்தானும் பார்க்குமா, அவற்றில், தான் முக்கியமானவை என்று கருதும் அம்சங்களையேனும் செயற்படுத்த முன்வருமா என்பது சந்தேகமே. வழமை போன்று தான் நினைப்பதை மட்டுமே செயற்படுத்திக் காலத்தை வாங்கி, பெரும்பான்மை இன மக்களைத் தன்பக்கம் சேர்த்து, அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் வழமையான, பழைய பழக்கப்பட்ட உத்தியையே கையிலெடுக்குமா என்பது சில வாரங்களில் தெரிந்துவிடும்.

நாட்டு மக்களுக்குத் ''தண்ணி காட்டுவது'' போன்று, சர்வதேசத்தையும் ஏய்க்காட்ட எத்தனித்தால் இன்னும் பல தலையீடுகள், தலையிடிகள், அடிக்கடி வரலாம். யார் அறிவார்?

# அனுமதிக்கப்பட்ட இடங்களிலேயே இனி எரிபொருள் நிலையங்கள்

## இடத் தெரிவு தொடர்பில் ஆய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28

நாடெங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

திரட்டப்பட்ட விவரங்களைக் கொண்டு மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் ஆய்வுகள் இடம் பெற்று வருகின்றன . அதில் எங்கெங்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான இடைவெளி என்பன தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. அதன் பிரகாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கான இடத்தெரிவின் போது புதிய நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது .

இனிவரும் காலத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்படும் போது அது எரிபொருள் பாவனையாளர்களின் தேவையைத். திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்காகவே மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வு இடம்பெற்று வருகிறது. ஆய்வின் முடிவில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு அந்தந்த இடங்களிலேயே நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது.

வடபகுதியில் தற்போது 58 எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 37 நிலையங்கள் இயங்கி வருகின்றன. (த-3)

# 300 மில்லியன் செலவில் 33 வீதிகள் புனரமைப்பு

நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 33 வீதிகள் 300 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாவட்டப் பொறியியலாளர் எஸ். றெஜிபதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்களில் முதற்கட்டமாக 34 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட வீதி புனரமைப்புக்காக 33 வீதிகளுக்கு 300 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

'நெல்சிப்' திட்டத்தினால் வழங்கப்படும் நிதியில் 47 வீதம் வீதிகள் புனரமைப்புச் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாகச் செப்பனிடப்படாத வீதிகள் இந்த வருடம் திருத்தியமைக்கப்படும். வீதிகள் புனரமைக்கப்பட்ட பின்னர் எஞ்சிய நிதியைக் கொண்டு கட்டடங்கள், சிறுவர் பூங்கா, சந்தை ஆகியன அமைக்கப்படுவதற்கு ஒதுக்கப்படும். வீதிப் புனரமைப்பைக் கைவிடுவது சாத்தியம் அற்ற செயல் - என்றார். (த-13)

# பட்டமளிப்புக்கு போக்குவரத்து வசதி

யாழ்ப்பாணம், மார்ச் 28

தேசிய கல்வி நிறுவகத்தில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் பட்டம் பெறச் செல்பவர்களுக்கான விசேட போக்குவரத்து சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்விமானி மற்றும் ஏனைய பயிற்சி நெறிகளைப் பூத்தி செய்து பட்டமளிப்பு விழாவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வடமராட்சி வலய ஆலோசகர் தெ.புவனேந்திரனுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த போக்குவரத்துச் சேவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து வடமராட்சி ஊடாக போக்குவரத்துச் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-253)

# 8000 வாகனங்களுக்கு 3 மாதங்களுக்குள் வரி அறவீடு

சாவகச்சேரி, மார்ச் 28

வாகன வரி அறவிடுவதற்கு தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் வாகனப் பிரிவு நிர்ணயித்த காலத்துக்கு 15 தினங்களுக்கு முன்னதாக இலக்கைத் தாண்டி சாதனை படைத்துள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் இவ்வருடம் பாவனையில் உள்ள வாகனங்கள் உட்பட 8 ஆயிரம் வாகனங்களிடமிருந்து மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் வரி அறவிட பிரதேச செயலக மோட்டார் வாகனப் பிரிவினரால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பொது மக்கள் வரியினை செலுத்துவதற்கு வசதியாக வேலை நாள்களுடன் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களிலும் இந்தப் பிரிவை இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாரத்தில் மூன்று தினங்கள் பிரதேசத்தில் மின்தடை ஏற்பட்டிருந்த போதிலும் அந்த நாள்களில் மின் பிறப்பாக்கி மூலம் வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டதால் மார்ச் பத்தாம் திகதி குறித்த இலக்கான 8ஆயிரம் வாகனங்களிடமிருந்து வரி அறவிடப்பட்டன. இந்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைத் தாண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது வாகன உரிமை மாற்றம் தொடர்பான பணிகளும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

**வரியினை செலுத்துவதற்கு வசதியாக வேலை நாள்களுடன் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களிலும் திறக்க ஏற்பாடு**

# தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளுக்கு சிங்களத்தில் அழைப்புக் கடிதங்கள்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விசனம்

அம்பாறை, மார்ச் 28

இலங்கை அதிபர் சேவையின் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு தமிழ் மொழி மூலப் பரீட்சார்த் திகளுக்குத் தொடர்ந்தும் சிங்கள மொழியில் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் சார்பில் அதன் தேசியத் தலைவர் எம். அனஸ் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய 29 பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழ்மொழிக்கு நிர்வாக அந்தஸ்து. மேலும் 42 பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழ்மொழியுடன் இரு மொழி நிர்வாக உரிமைக்கு தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டுக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் முன்மொழிவு.

அரசகரும மொழிக்கொள்கையை நாடுபூராகவும் அமுல்படுத்த 2009.09.25 ஆம் திகதி நிதியமைச்சரான ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சர்களின் அமைச்சரவைத் தீர்மானம் அரசரும மொழியை சகல திணைக்களங்களிலும் அமுல்படுத்த 2009.11.25 ஆம் திகதிய 1620/27 இலக்கச் சுற்றறிக்கை. 2012, மும்மொழி ஆண்டாகப் பிரகடனம் என எண்ணி குறைந்த சட்ட ஏற்பாடுகள் . ஆனால் ஆன பயன் ஒன்றுமில்லை

கல்வி அமைச்சின் பிரமாணக் குறிப்பை மீறிய செயற்பாட்டினால் ஏற்பட்ட அநீதிக்குச் சட்டத்தின் உதவியை நாடியோருக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய கல்வி அமைச்சில் கடந்த 10 ஆம் திகதி முதல் நடத்தப்பட்டு வரும் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கூட தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளுக்கு தனிச் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 24, 26 ஆம் திகதிகளில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய, 82,113 புள்ளிகளுக்குமேல் பெற்று நேர்முகப் பரீட்சையில் திருப்தியடையாதவர்களிடமிருந்து சத்தியக் கடதாசி மூலம் விவரம் கோரிய கல்வி அமைச்சு ஐந்து கருமபீடங்களினூடாக சான்றிதழ்களை பரிசீலிக்கும் நேர்முகப்பரீட்சைகளை தற்போது நடத்திவருகிறது.

இதன் போது கோரப்பட்ட 9 ஆவணங்களில் ஒன்றான, 'பிரதிபல லேபனைய' என்பதன் மூலம் கோரப்பட்ட ஆவணம் என்ன என்பதை சரியாக விளங்கிக் கொள்ளாத தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சையின் போது ஏற்பட்ட அசௌகரியங்கள், சிரமங்கள் பற்றித் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டிய போதிலும் கல்வி அமைச்சு தொடர்ந்து கடிதங்களை சிங்கள மொழியிலேயே அனுப்பி வருகிறது.

நாட்டின் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பை ஏற்று கல்வி அமைச்சுடன் இணைந்து மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தப் போவதாகக் கூறி வரும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இலங்கை அதிபர் சேவையின் ஆள் சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளுக்கு தொடர்ந்தும் சிங்கள மொழியல் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதையிட்டு கவனம் செலுத்த வேண்டும் என்றுள்ளது. (த-30)

## நிவாரணம் வழுங்குமாறு கோரிக்கை

**குஞ்சுக்குளம் உவரடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் 400 ஏக்கர் வயல் நிலங்கள் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.**

அக்கராயன்,மார்ச் 28

குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் கிராமம் தற்போது முழுமையாக உவரடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் இங்கு அமைந்துள்ள 400 ஏக்கர் வயல் நிலங்கள் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. இதனால் இங்கு வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளதுடன் தமது அன்றாட உணவுக்கே அல்லல்படுகின்றனர்.

எனவே தமக்கு வேறு இடத்தில் வயல் நிலங்களை வழங்குமாறும் தமது வாழ்வாதாரத்துக்கான நிவாரண உதவிகளை வழங்குமாறும் இவர்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

## நடமாடும் சேவை

கிளிநொச்சி,மார்ச் 28

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவையொன்று இடம்பெற்றுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் பெருமளவு மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர்.

இங்கு காணிவிடயங்கள், பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் ஆகிய சேவைகள் இடம்பெற்றன.

கடந்த காலத்தில் நிகழ்ந்த இடப்பெயர்வுகளின் போது மக்கள் தமது ஆவணங்களைத் தொலைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# 650 ஏக்கரில் சிறுபோகம்

## கல்மடுக்குளத்தின் கீழ்

கிளிநொச்சி,மார்ச் 28

கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு சுமார் 650 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி கல்மடுக் குளம் புனரமைக்கப்பட்டதன் பின்னர் இவ்வாண்டு சுமார் 650 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்மடுக்குளம் புனரமைக்கப்பட்டுக் கடந்த 11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதையடுத்து இவ்வாண்டு சிறுபோகச் செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணியளவில் புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

**அத்துமீறிய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்படும். அத்துமீறிய பயிர்ச்செய்கை, அழிக்கப்படுவதுடன் நீர்வரி இடாப்பில் பெயர் நீக்கம் செய்யப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இந்தக் கூட்டத்தில் புளியம் பொக்கணைப் பகுதியில் 75 ஏக்கரும், நாகேந்திரபுரம் பகுதியில் 40 ஏக்கரும், தர்மபுரம் பகுதியில் 80 ஏக்கரும், கண்டாவளைப் பகுதியில் 350 ஏக்கரும், கல்மடுப் பகுதியில் 90 ஏக்கரும் என மொத்தம் சுமார் 650 ஏக்கர் சிறுபோகச் செய்கைக்கெனத் தெரிவுசெய்யப்பட் டுள்ளது.

ஆரம்ப நீர்விநியோகத் திகதியாக எதிர்வரும் முதலாம் திகதியும், இறுதி நீர் விநியோகத் திகதியாக ஜூலை மாதம் 31 ஆம் திகதியும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அத்துமீறிய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்படும். மேலும் அத்துமீறிய பயிர்ச்செய்கை அழிக்கப்படுவதுடன் நீர்வரி இடாப்பில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்படுமெனவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது. (க-6)

மீளக்குடியமர்த்தப்படாத நிலையில்

# வவுனியா முகாம்களில் இன்னும் 5,600 பேர்

வவுனியா,மார்ச் 28

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இன்னமும் சுமார் 5 ஆயிரத்து 600 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்கள் குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்குள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படலாம் என வவுனியா அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்த நிலையில் 45 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த 22 இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பின்னர் படிப்படியாக விடுவிக்கப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

போர் இடம்பெற்று மூன்று வருடங்களை எட்டும் நிலையில் இன்னமும் வவுனியாவிலுள்ள 2 இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 600 பேர் விடுவிக்கப்படாமல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

''புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த மக்கள் அங்குள்ள மிதிவெடிகள் அகற்றும் பணி நிறைவடைந்தவுடன் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இன்னமும் இரண்டு மாதங்களுக்குள் இவர்களை மீளக்குடியமர்த்த முடியும்'' என அரச அதிபர் மேலும் கூறினார். (ஒ-03)

# சுயதொழில் உதவிகள்

வவுனியா,மார்ச் 28

வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தால் (நிஸ்கோ) சுய தொழில் புரிவோருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிஸ்கோ அமைப்பினால் நெடுங்கேணி, ஒலுமடு, கற்குளம், வேலங்குளம் போன்ற பகுதிகளில் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக அழகுக் கலைப் பயிற்சி, தையல் அலங்காரம், வீட்டு மின்சுற்று இணைப்பு, அலுமினியப் பொருள்கள் இணைத்தல், மேசன் தொழில் ஆகிய தொழில்களுக்கான பயிற்சி நெறிகள் இடம்பெற்று வந்தன.

இந்தச் சுயதொழில் பயிற்சியை நிறைவு செய்த 100 இளைஞர், யுவதிகளுக்கே இவ்வாறு சுயதொழில் முயற்சியை மேம்படுத்தும் வகையில் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன என்று வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திருமதி பி.சறோசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி நெடுங்கேணியில் இடம்பெற்றது.

**பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு 30 தையல் இயந்திரங்கள், வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள், அலுமினிய உபகரணத் தொகுதி என்பன வழங்கப்பட்டன.**

நிஸ்கோ முகாமையாளர் திருமதி சறோசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை இளைஞர் சேவை மன்றத்தின் பொது முகாமையாளர் வீரக்கோன், இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், டி.ஆர். சி. நிறுவன உயரதிகாரிகள், மாவட்ட இணைப்பாளர்கள், செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு 30 தையல் இயந்திரங்கள், வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள், அலுமினிய உபகரணத் தொகுதி என்பன வழங்கப்பட்டன. (க-400)



கரடிப்போக்கு - உருத்திரபுரம் வீதியில் பொதுமக்கள் வீதியின் மறுபக்கம் செல்வதில் இடையூறான வகையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் டிப்பர் வாகனங்கள். (405)

# ஆனையிறவு நீரேரியில் இறால் பிடிக்க 11 ஆம் திகதி முதல் அனுமதி

கிளிநொச்சி,மார்ச் 28

ஆனையிறவுக் கடல் நீரேரியில் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனையிறவுக் கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கான திகதியை நிர்ணயிப்பதற்கான கூட்டம் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் நெக்டா நிறுவனத்தினால் வளர்ப்புச் செய்யப்பட்ட இறால்களையும் இயற்கையாக முதிர்ச்சியடைந்த இறால்களையும் அறுவடைசெய்வது தொடர்பாக ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் முதலாவது இறால் பிடிப்பதற்கான திகதி எதிர்வரும் 11 ஆம் திகதி என நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு மாறாக இந்தத் திகதிக்கு முன்னர் இறால்களைப் பிடிப்போரின் தொழில் உரிமங்கள் பறிமுதல் செய்யப்படும்.

அத்துடன் இவர்களுக்கு எதிராகப் பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (க-6)

# நவீன முறைகள் மூலம் விவசாய தன்னிறைவு

## கிளி.மேலதிக அரச அதிபர் வலியுறுத்து

அக்கராயன், மார்ச் 28

விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு நெல் உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீநிவாசன்.

அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயிகள் பாரம்பரிய முறைகளிலிருந்து விடுபட்டு நவீன முறைகளுக்குத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். நவீன முறைகளைப் பயன்படுத்துவதால் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன் சந்தை வாய்ப்புக்கள், உற்பத்தியின் தன்மை ஆகியவற்றையும் அவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விவசாய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இந்த மாவட்டத்தின் பெருமையை விவசாயிகள் நிலைநாட்ட வேண்டும். அத்துடன் தமது வாழ்வாதாரத்தையும் உயர்த்திக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# வவுனியா வடக்கு நெடுங்கேணியில் கடந்தாண்டு 40 குளங்கள் புனரமைப்பு

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் நீண்ட காலத்தின் பின்னர் 40 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சிறிய குளங்கள் கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைப்புக்கள் எவையும் இன்றிச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன. கடந்த ஆண்டு பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் அரசின் நிதியுதவியுடன் பொது மக்களின் பங்களிப்புக்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் நாற்பது குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

**இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.**

இது தொடர்பாக நெடுங்கேணிப் பிரதேச செயலர் க.பரந்தாமன் கருத்துத் தெரிவிக்கும் போது; மாமடுப் பகுதியில் நான்கு குளங்களும், மாறாஇலுப்பைப் பகுதியில் இரண்டு குளங்களும், கற்குளம் பகுதியில் ஒரு குளமும், மருதோடையில் இரண்டு, மன்னகுளத்தில் இரண்டு, கனகராயன் குளம் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நான்கு, புளியங்குளம் வடக்குத் தெற்குப் பகுதிகளில் ஐந்து, சின்னடம்பனில் மூன்று, பரந்தன் பகுதியில் நான்கு, ஆனந்தர் புளியங்குளம் பகுதியில் இரண்டு, நெடுங்கேணி தெற்கில் மூன்று, குளவிசுட்டான் பகுதியில் மூன்று, ஒலுமடுப் பகுதியில் மூன்று, பட்டிக்குடியிருப்புப் பகுதியில் ஐந்து, ஊஞ்சல் கட்டிப் பகுதியில் ஒன்று, நயினாமடுப்பகுதியில் ஐந்து என 40 குளங்கள் கடந்த ஆண்டு புனரமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு சில குளங்களின் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவையாவும் உலக உணவுத்திட்டம் யு.என்.டி.பி, சேவாலங்கா, நெக்கோட், என்றிப், றப் போன்ற நிறுவனங்களினால் புனரமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள குளங்கள் புனரமைக்கப்பட்டமையால் இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் நெற்செய்கையை மேற்கொள்ளமுடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

# வலி.வடக்கு பாதுகாப்பு வேலி உயர் நீதிமன்றின் கவனத்துக்கு

## அடுத்த விசாரணையின்போது ஆதாரம் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஒட்டகப்புலத்திலிருந்து வயாவிளான் வரையிலான பகுதியில் இராணுவத்தினர் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பில், உயர் நீதிமன்றில் ஏற்கனவே உள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணையின் போது உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

**நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பில், உயர்நீதிமன்றத்தின் அடுத்த கட்ட வழக்கு விசாரணையின்போது கவனத்துக்குக் கொண்டுவருவோம்.**

ஒட்டகப்புலத்திலிருந்து வயாவிளான்வரையிலானபகுதியில் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் இராணுவத்தினரால் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பில் மேற்கொண்டு எவ்வாறான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கவுள்ளது என்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நேரடியாகச் சென்று நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்படும் இடங்களைப் பார்வையிட்டேன். அந்தப் பகுதிகள் தனியாருக்குரியவை. எனவே அந்தப் பகுதி மக்களிடம் அவர்களின் காணி உறுதிகளைக் கோரியுள்ளோம்.

மேலும் நாங்கள் உயர் நீதிமன்றத்தில் முன்னர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மீதான வழக்கு இடம்பெற்று வருகின்றது. இதில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பிலேயே வலி. வடக்குப் பகுதியில் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பில், உயர்நீதிமன்றத்தில் அடுத்த கட்ட வழக்கு விசாரணையின்போது கவனத்துக்குக் கொண்டுவருவோம். ஆதாரங்களையும் சமர்ப்பிப்போம் - என்றார். (த-5)

# நூலக அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

வடமராட்சி, மார்ச் 28

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்றை வல்வெட்டித்துறை நகரசபை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது இந்த ஆண்டுக்கான நூலகங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி, அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்படுவதுடன், மாணவர்கள், பெற்றோர்களிடையே வாசிப்பு, எழுத்துத்துறைகளை ஊக்குவிப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படும்.

நகரப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துரையாடலில் கலந்து கொள்வார்கள். (த-8)

# புகையிலை அறுவடை

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை வேகமாக நடைபெற்று வருகிறது. இருமாதங்களில் புகையிலை அறுவடை பூர்த்தியடையும்.

அறுவடை செய்யப்படும் ஒரு புகையிலைக் கன்று நூறு ரூபா தொடக்கம் 60 ரூபா வரை விலை போகின்றது. சொந்தமாகப் புகையிலையை உலர்த்தி, பதப்படுத்தி, சந்தைப்படுத்தும் விவசாயிகளைத் தவிர, பச்சைப் புகையிலையை விலைக்கு வாங்கி உலர்த்தி, பதப்படுத்தி, சந்தைப்படுத்தும் வியாபாரிகள் புகையிலையின் தரத்துக்கேற்ப விலைகளை நிர்ணயம் செய்து விவசாயிகளிடம் புகையிலையைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆகக் குறைந்த தரத்தில் உள்ள புகையிலை 100 ரூபாவும்அதிசிறந்ததரப்புகையிலை 160 ரூபாவாகவும், சாதாரண நிலைப்புகையிலை 130 ரூபா தொடக்கம் 140ரூபா வரையில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது. (த-8)

# அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடம் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள கடை ஒன்றில் யாழ். மாநகர சபையின் அங்கீகாரமின்றிக் கட்டப்பட்ட கட்டடத்தின் பாவனையை நிறுத்துமாறும் அதனை அகற்றுமாறும் யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2009 நவம்பர் 17 ஆம் திகதி குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக யாழ்.மாநகரசபை வழக்குத் தாக்கல் செய்திருந்தது. விசாரணையின் போது அங்கீகாரமின்றிக் கட்டிய கட்டடத்தை அகற்றுமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். இது தொடர்பான வழக்குத் தொடர்ந்து நடைபெறுகிறது. (த-4)

# சிறு தொழில் வலைகளை அறுக்கும் விசைப் படகுகள்

## கடல்தொழில் திணைக்களத்திடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 28

குடாக்கடலில் சிறுவலைகள் மூலம் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வலைகள் விசைப் படகுகளினால் அறுத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று அந்த மீனவர்கள் யாழ். மாவட்டக் கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

**கல்லடிக்கும் பள்ளிக் குடாவுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் தொழில் செய்யும் குருநகர் மீனவர்களின் வலைகளே இவ்வாறு அறுத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன**

கல்லடிக்கும் பள்ளிக் குடாவுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் தொழில் செய்யும் குருநகர் மீனவர்களின் வலைகளே இவ்வாறு அறுத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

தமது அறக்கொட்டியான் வலைகள் இவ்வாறு அறுத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளதால் தமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

தமது பகுதிகளைச் சேர்ந்த விசைப் படகுகளே இந்த வலைகளை அறுத்துச் சேதப்படுத்தியதாக அவர்கள் கடல்தொழில் நீரியல் வளப் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் சிறு தொழில் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தம்மிடம் தெரிவித்ததாகக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார். நாச்சிக்குடாக் கடல் பகுதியிலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் கூறினார். (த-17)

# முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்புப் படி இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அதிக வியாபாரம் மேற்கொள்ளும் முகாமையாளர்களுக்கான ஊக்குவிப்பு இதுவரைவழங்கப்படவில்லை என்று பணியாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

கிளை நிலையங்களில் அதிக வியாபாரம் மேற்கொள்ளும் முகாமையாளர் மற்றும் விற்பனையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்திருந்தார்.

ஆணையாளரின் அறிவிப்பின்படி சங்கங்கள் இதுவரை இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை எனவும் அவற்றை உடன் வழங்கி உதவுமாறும் பணியாளர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சில சங்கங்கள் மட்டுமே கிளைகளில் அதிக வியாபாரம் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# கழிவகற்றும் தினங்கள் பிரதேச சபை அறிவிப்பு

நல்லூர் உப அலுவலகப் பகுதியில் குப்பைகள் அகற்றும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் இதற்கான ஒத்துழைப்பை ஊழியர்களுக்கு வழங்குமாறும் நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

குப்பைகள் அகற்றப்படும் தினங்களையும் பிரதேச சபை அறிவித்துள்ளது.

திங்கட்கிழமைகளில் அம்மன் வீதி, அரசடி ஒழுங்கை, கெனடி வீதி, இராமலிங்கம் வீதி, ஆடியபாதம் வீதி, சந்தை ஆகிய இடங்களில் கழிவுகள் அகற்றப்படும்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பலாலி வீதி, பரமேஸ்வராக் கல்லூரி வீதி, பணிக்கர் லேன், சைவப் பாடசாலை ஒழுங்கை, மாரியம்மன் வீதி, நாவலடி லேன், தாளையடி லேன், பிள்ளையார் வீதி, சந்தை ஆகிய இடங்களிலும் - புதன், ஞாயிற்றுக்கிழமைகளில் கலாசாலை வீதி, கலா சாலை வீதி குறுக்குத் தெருக்கள், கலாசாலை வீதி வடக்கு 1ஆம் ஒழுங்கை, கேணியடி ஒழுங்கை, பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதி, இராஜ வீதி, சந்தை ஆகிய இடங்களிலும் -

வியாழக்கிழமைகளில் முக்குறுணிப்பிள்ளையார் கோயில் வீதி, புதிய செங்குந்தா வீதி, ஆடியபாதம் வீதி, சந்தை ஆகிய இடங்களிலும், சனிக்கிழமை முருகன் வீதி, பாரதி புலம் வீதி, சந்தை ஆகிய இடங்களிலும் கழிவு அகற்றும் செயற்பாடுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# வீதியில் சைக்கிள் நிறுத்தத் தடை

திருநெல்வேலி பொதுச் சந்தையின் கீழ்ப்பகுதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் சிலர் அதனை உதாசீனம் செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் வீதியோரங்களில் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்துகின்றனர். இதனால் வீதி விபத்துக்கள், போக்குவரத்துப் பாதிப்புக்கள் ஏற்படுவதால் சந்தைக்கு வரும் அனைத்து நுகர்வோரும் தமது சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை அதற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்தி வைக்குமாறு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (த-7)

# சுகாதாரமற்ற நிலையில் மூன்று உணவகங்கள்

## நீதிமன்றத்தில் வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொக்குவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று உணவகங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உடல் நலத்துக்கு ஒவ்வாத நிலையில் உணவு தயாரிப்பில் ஈடுபட்டதாகப் பொதுச் சுகாதாரப் பகுதியினரால் அவை கண்டறியப்பட்ட நிலையிலேயே மூன்று உணவகங்களுக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவிலில் இரண்டு உணவகங்களும், திருநெல்வேலியில் ஓர் உணவகமும் இதில் அடங்குகின்றன. கொக்குவில் மற்றும் நல்லூர் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போதே இந்த மூன்று உணவகங்களுக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (த-3)

# 10 ஆயிரம் அபராதம்

சட்ட விரோதமாக சாராயம் விற்பனை செய்த பெண்ணுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. வேலணையில் வைத்து சாராயம் விற்பனை செய்தபோதே அவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். (த-4)

# தேசியத் தரம் வாய்ந்த மைதானத்தை வல்வெட்டித்துறையில் அமைக்க முடிவு

## பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோருகிறது நகரசபை

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சி, வல்வெட்டித்துறைக்கென தேசிய ரீதியில் தரம் வாய்ந்த பொது விளையாட்டரங்கம் ஒன்றை அமைப்பதற்குக் காணியை அன்பளிப்பாக அல்லது சகாய விலையில் பெற்றுக் கொள்வதற்காகப் பொது மக்களிடம் நிதி உதவியை வல்வெட்டித்துறை நகர சபை கோரியுள்ளது.

வல்வெட்டித்துறைக்கெனத் தேசிய ரீதியில் தரம் வாய்ந்த பொது விளையாட்டரங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் தீர்மானத்தைச் செயற்படுத்தும் வகையில்-

தற்பொழுது நெற்கொழு அமைந்துள்ள காணியை விளையாட்டரங்கத்துக்காக அன்பளிப்பாக அல்லது சகாய விலையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும், பொது அமைப்புக்களும், புலம்பெயர் உறவுகளும் பிரதேச வேறுபாடுகளின்றி இதற்கான நிலப்பரப்பைப் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை வழங்க முன்வருமாறு வல்வெட்டித்துறை நகரபிதா ந.அனந்தராஜ் அழைப்பு விடுத்துள்ளார். வல்வெட்டித்துறை நகரசபையில் இதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கான நிதிவளம் இல்லாத நிலையில் எமது உறவுகள் இதற்குக் கைகொடுக்க முன்வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

வல்வை நகரசபையால் இதற்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் மட்டுமே நிதி உதவிகளைச் செய்யுமாறு நகரபிதா மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை, வல்வை நகரசபையால் அமைக்கப்படவுள்ள நவீன விளையாட்டரங்கத்தை நகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டுமல்லாது வடமாகாணப் பாடசாலைகளும் விளையாட்டுக்கழகங்களும் பயன்படுத்திப் பயன்பெற இருப்பதால் அந்தப் பிரதேசத்தில் உள்ள தமது நிலப்பரப்புகளை எவரேனும் அன்பளிப்பாகவழங்குவதற்குமுன்வந்தால் அவற்றை நன்றியுடன் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (த-8)

# கிழக்கு காணி ஆணையாளர் நீதிமன்ற உத்தரவை மீறினார்

### காணிப் பதிவு வழக்கில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 28

வடக்கு-கிழக்கில் காணிகளைப் பதிவு செய்வது தொடர்பாக மேல் முறையீட்டு நீதிமன்றினால் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அதனை மீறிச் செயற்பட்டுள்ளதாக நீதிமன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டதையடுத்து மனு மீதான விசாரணை ஜூலை 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு காணி அமைச்சு மாவட்டச் செயலகங்களுக்குச் சுற்றறிக்கை மூலம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேல் முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார்.

காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையை உடன் ரத்துச் செய்யுமாறும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப்பதிவு நடவடிக்கைகளை நிறுத்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார்.

எந்தக் காரணமுமின்றி இரண்டு மாதங்களுக்குள் காணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று காணி ஆணையாளர் நாயகம் உத்தரவிட்டுள்ள அதேவேளை, அவ்வாறு பதிவு செய்யப்படாவிடின் அதன் விளைவு என்ன என்பதைக் காணி ஆணையாளர் நாயகம் குறிப்பிடவில்லை என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம் நவம்பர் 9 ஆம் திகதி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேல் நீதிமன்றம் ஜனவரி 19 ஆம் திகதி வரை இந்தச் சுற்றறிக்கை தொடர்பான அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதித்தது.

ஜனவரி 19 ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த சர்ச்சைக்குரிய சுற்றறிக்கையை வாபஸ் பெறுவதாக, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் நீதிமன்றுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மனு மீதான விசாரனையை மார்ச் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், வழக்கைத் தொடர்வதா இல்லையா என்பதை அன்றைய தினம் மன்றுக்கு அறிவிக்குமாறு மனுதாரருக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் நீதியரசர்கள் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் திபாலி விஜயசுந்தர ஆகியோர் முன்னிலையில் மனு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரரினால், நீதிமன்றம் தடை உத்தரவினைப் பிறப்பித்திருக்கும் சூழ்நிலையிலும் கிழக்கு மாகாணத்தில் மாகாணக் காணி ஆணையாளரினால் குழுக்கள் அமைக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் எதிராளிகள் தரப்பில் தமக்குத் தெரியாதெனவும் இதனை விசாரித்தே மன்றுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து, மனு மீதான் விசாரனையை ஜூலை மாதம் 12 ஆம் திகதிக்கு நீதியரசர்கள் ஒத்தி வைத்தனர். (ந-5)

# 6,622 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை

### இரண்டாம் கட்டமாக விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 6 ஆயிரத்து 622 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டச் சமுர்த்தி உதவி ஆணையாளர் இ.சிவஸ்ரீ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ். மாவட்டத்தில் மின்சார இணைப்பு இல்லாத 41ஆயிரத்து 603 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை தேவைப்படுவதாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. முதல் கட்டமாக 22 ஆயிரத்து 134 பேருக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டது.

இதன் பின்னர் தற்போது இரண்டாம் கட்டமாக 6 ஆயிரத்து 622 முத்திரைகள் வழங்கப்படவுள்ளன. இவை இன்னமும் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. விரைவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

**முதல் கட்டமாக 22 ஆயிரத்து 134 பேருக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டது.**

வழங்கப்படும் மண்ணெண்ணெய் முத்திரை ஒவ்வொன்றும் 6 மாத காலத்துக்குரியவையாகும். ஒரு மாதத்துக்கு 200 ரூபா வீதமே அவை வழங்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் இன்னும் 12 ஆயிரத்து 847 குடும்பங்களுக்கு முத்திரை வழங்கப்பட வேண்டியுள்ளது - என்றார். (த-5)

# யாழ்.-கொழும்பு சேவையில் 50 அனுமதியற்ற பஸ்கள்

கொழும்பு, மார்ச் 28

கொழும்பு-யாழ். பஸ் போக்குவரத்து மார்க்கத்தில் வழி அனுமதிப்பத்திரங்கள் இல்லாத 50 க்கும் மேற்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்தப் பயண மார்க்கத்துக்கான வழி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடைமுறை நியாயமற்றது எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த வழி அனுமதிப் பத்திரங்களுக்காக ஐந்து ஆண்டுகளுக்கு கட்டணங்கள் செலுத்தப்பட்டாலும் இறுதியில் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காமல் போவதால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் நடைமுறை நியாயமற்றது எனக் கூறுவதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளரான அஞ்ஞன இந்திரஜித் தெரிவித்தார்.

கொழும்பு-யாழ்ப்பாணம் பயண மார்க்கத்துக்கு 5 ஆண்டுகளுக்குக் கேள்வி கோரப்பட்டு வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றுக்கு ஒரு வருடத்துக்கு 7 லட்சம் ரூபா வீதம் 35 லட்சம் ரூபாவைச் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்தக் கட்டணத்துக்காக மாதாந்தம் 60 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை அனுமதிக் கோரிக்கைகள் குறைவடைந்துள்ளதாகக் கூறும் அவர், ஒரு நாள் இலாபத் தொகையாக மிஞ்சும் 6 ஆயிரம் ரூபா பஸ்களுக்கான ரயர்களின் செலவினங்களுக்குக்கூடப் போதுமானதாக இல்லை எனவும் கூறினார்.

ஏனைய பயண மார்க்கங்களுக்கான அனுமதிப் பத்திரத்தை 3ஆயிரம் ரூபா செலுத்திப் பெறத்தக்க வாய்ப்பிருக்கையில், யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் உரிமையாளர்களுக்கு வருடமொன்றுக்கு ஏழு லட்சம் ரூபா செலுத்த வேண்டி உள்ளமை நியாயமற்றதே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-22)

# குருநகரில் கடலட்டை பிடித்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 28

சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்த குருநகரைச் சேர்ந்த 5 பேர் பிடிபட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநகர் மீன்பிடிப் படகில் சட்டவிரோதமாக கடல் அட்டை பிடிப்பதில் 5 பேர் ஈடுபட்டிருந்தார்கள். கடற்படையினர் தகவல் தந்ததன் அடிப்படையில் திணைக்கள உத்தியோகத்தர்களினால் இவர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இரவு வேளை கடற்றொழிலில் ஈடுபட்டு முற்பகல் 10.30 மணியளவில் கரைக்கு வந்த போதே இவர்கள் பிடிக்கப்பட்டனர்.

இழுவைப்படகு மற்றும் சட்டவிரோதமாகக் கடல் அட்டை பிடித்தனர் ஆகிய குற்றங்கள் இவர்கள் மீது பதியப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (த-13)

# மணலில் சிக்கி மாணவியின் கால் முறிந்தது

சாவகச்சேரி, மார்ச் 28

வீட்டு வளவில் பறிக்கப்பட்டிருந்த மணல் குவியலில் விளையாடிய பாடசாலை மாணவி மணலில் கால் தடுக்கி வீழ்ந்ததில் கால் முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இடம் பெற்றது.

தனங்கிளப்பைச் சேர்ந்த ஆதி வனஜா (வயது12) என்னும் மாணவி கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதானா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

# கிராமங்கள் தோறும் 'கொலைக்களம்'

சென்னை, மார்ச் 28

தமிழகத்தின் கிராமங்கள் தோறும் இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படம் திரையிடப்படுகின்றது.

இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படம் போர்க்குற்றம், மனித உரிமை மீறல், இனப்படுகொலை செய்ததற்கான ஆதாரங்கள் என்பவற்றை தெட்டத் தெளிவாகப் பன்னாட்டு சமூகத்துக்கு எடுத்துக் காட்டியது.

இதனைப் பார்த்த மனித உரிமை ஆர்வலர்கள் கொதித்தெழுந்து, இலங்கையைப் போர்க்குற்றவாளியாக பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். அதன் முதற்படியாக ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானமும் நிறைவேறியது.

**போர்க்குற்ற ஆவணங்கள் அடங்கிய இலங்கையின் கொலைக்களம் தமிழகத்தில் திரையிடப்பட்டு வருகின்றது.**

இந்தநிலையில், சனல் 4 வெளியிட்ட போர்க்குற்ற ஆவணங்கள் அடங்கிய இலங்கையின் கொலைக் களம் என்ற ஆவணப்படத்தின் பகுதி1, பகுதி 2 என்பன தமிழகத்தின் கிராமங்கள் தோறும் பல்வேறு அமைப்புகள் மூலமாகத் திரையிடப்பட்டு வருகின்றன. (வ)

## ஊர்காவற்றுறை வடக்கு வீதியை புனரமைக்க கோரிக்கை

ஊர்காவற்றுறை, மார்ச் 28

ஊர்காவற்றுறைக்கும் அராலிச் சந்திக்கும் இடையில் உள்ள வடக்கு வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள், சாரதிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியானது 3 மாதங் களுக்கு ஒரு தடவை செப்பனிடப்பட்டும் எந்த வித பயனுமில்லை. இந்த வீதி தரமான கலவைகள் கொண்டு செப்பனிடப்படாததாலேயே குறுகிய காலத்திலே பழுதடைந்து விடுகிறது என இந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, சரவணை போன்ற பிரதேசங்களின் பிரதான வீதியே இவ்வாறு குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (ந-325)

# மிகுதிப் பணம் கொடுப்பதில் பஸ் நடத்துநர்கள் முறைகேடு

### பயணிகள் விசனம்

தென்மராட்சி, மார்ச் 28

யாழ்-கொடிகாமம் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மற்றும் இ.போ.ச. பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கு அநேகமான நடத்துநர்கள் மிகுதிப் பணம் கொடுப்பதில்லை. அதனால் மாதாந்தம் பெருமளவான பணத்தை நடத்துநர்களிடம் இழக்க வேண்டியிருப்பதாக பாதிக்கப்பட்ட பயணிகள் முறைப்பாடு கூறுகின்றனர்.

மீசாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று வரும் பயணிகள் அதிகளவாக நாளாந் தம் 10 ரூபாயை மிகுதிப் பணமாக நடத்துநர்களிடம் இழக்கின்றனர். இதனால் சிலர் நடத்துநர்களுடன் வாக்கு வாதத்திலும் ஈடுபடுகின்றனர்.

மீசாலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல 35 ரூபா அறவிடப்படுகிறது. தாள்களாகப் பணம் கொடுத்தால் மிகுதி ஐந்து ரூபா திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் சில்லறைப்பணம் வைத்திருந்தாலும் அதனைக் கொடுப்பதில்லை. இதனால் யாழ்ப்பாணம் சென்று வர 10 ரூபாவை மேலதிகமாகப் பயணிகளிடமிருந்து வாங்குகின்றனர்.

கைதடியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 23 ரூபா அறவிடப்படுகின்றது. ஆனால் மிகுதி இரண்டு ரூபா திருப்பிக் கொடுப்பதில்லை. தவிர தாள் காசுகள் கொடுக்கும் போது மூன்று ரூபா சில்லறை இல்லையா என்பதற்குப் பதிலாக 5 ரூபா சில்லறை தாருங்கள் என்று கேட்டு வாங்குகின்றனர். மிகுதி கொடுக்கப்படுவ தில்லை. இதனால் ஒரு நாளைக்கு யாழ்ப்பாணம் சென்று திரும்புபவர்களிடமிருந்து நான்கு ரூபாவை நடத்துநர்கள் 'கொள்ளை'யடித்து விடுகின்றனர்.

விலை அதிகரிப்பதற்கு முன்னர் கைதடியிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்களுக்கு 19 ரூபா பணம் அறவிடப்பட்டது. அதன் போது ஒரு ரூபா திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. அதனால் முன்னர் இரண்டு ரூபாவை மிகுதிப் பணமாக இழந்து வந்தனர்.

ஒரு சிலர் மாத்திரமே மிகுதிப்பணத்தை நேர்மையாக திருப்பிக் கொடுக்கின்றனர். சில நடத்துநர்கள் சில்லறைப் பணம் வைத்திருந்தாலும் மிகுதிப் பணத்தைக் கொடுப்பதில்லை. இதனால் பெரும்பாலான பயணிகள் நாளாந்தம் திட்டியவாறு செல்கிறனர். வேறு பயணிகள் நடத்துநர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுகின்றனர்.


எனவே நடத்துநர்கள் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட தொகையை மட்டும் அறவிட வேண்டும். மிகுதிப் பணத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என பயணிகள் கோருகின்றனர்.

இதே போல் ஏனைய சில இடங்களுக்கான போக்குவரத்திலும் இந்தக்குறைபாடு நிலவுவதாக பயணிகள் சுட்டிக் காட்டுகின்றனர். பயணிகளும் இயன்றளவு சில்லறைப் பணத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் ஏனைய பயணிகள் சுட்டிக் காட்டுகின்றனர். எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மிகுதிப் பணத்தைக் கொடுக்காமல் இருக்கும் நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயணிகள் கோருகின்றனர். (ந-4)

# காலாவதியாகி விட்டது அமெரிக்க அதிகாரம்

## ஆப்கன் மாநாட்டில் ஈரான் ஜனாதிபதி பேச்சு அவரது உரையின் போது வெளியேறினார் பிளேக்

**ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படை யினர்கள் உடனடியாக வெளி யேற வேண்டுமென குறிப் பிட்ட அமஹதி நெஜாத், அவர்களின் இராணுவ செல வீனங்களை, ஆப்கன் பொருளாதாரத்தின் மீட்சிக்கு வழங் கலாம் எனவும் கூறியுள்ளார்.**



காபூல், மார்ச் 28

அனைத்து உல கத்திற்குமான அமெரிக்காவின் அதிகார கொள்கைகளுக்கான காலம் கடந்துள்ளதாக ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாத் தெரிவித்துள் ளார்.

அத்துடன் பாகிஸ்தானுடனான மேற்குலக நாடுகளின் உறவுகளின் ஸ்திரமற்ற நிலை தொடர்ந்தும் உயர்வடையும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற பிராந்திய மாநாட்டில் உரையாற்றும் போது ஈரான் ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார் என்று ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படையினர் உடனடியாக வெளியேற வேண்டுமெனக் குறிப்பிட்ட அஹமதி நிஜாத், அவர்களின் இராணுவ செலவினங்களை, ஆப்கன் பொருளாதாரத்தின் மீட்சிக்கு வழங்கலாம். நேட்டோ மற்றும் அமெ ரிக்கா ஆகியன அதன் கொள் கைகளில் மாற்றத்தை ஏற் படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜங்கச் செயலாளர் ரொபேட் ஓபிளேக்கும், குறித்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். எனினும் அஹமதி நிஜாத்தின் உரை ஆரம்பித்ததை அடுத்து குறித்த மாநாட்டில் இருந்து வெளியேறிய அவர், ஈரான் ஜனாதிபதியின் உரை நிறைவடைந்த பின்னர் மீண்டும் மாநாட்டில் கலந்து கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

(ந)

## 12 நாடுகளுக்குப் பொருளாதாரத் தடை

வொஷிங்டன்,மார்ச் 28

ஈரானிடம் இருந்து தொடர்ந்து எரிபொருள்களை இறக்குமதி செய்து வரும் 12 நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என அந்நாட்டின் மீது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் குற்றச்சாட்டுக்கள் தெரிவித்து வருகின்றன. இதனால் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானிமிடருந்து எரிபொருள் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உட்பட 12 நாடுகள் மீது வரும் ஜூன் மாதத்துக்குள் பொருளாதாரத் தடை விதிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் முடிவு செய்து உள்ளார்.

இது தொடர்பாக ஹிலாரி விரைவில் அறிவிப்பு வெளியிடுவார் என்று தெரிவித்தார்.

## ஸ்கொட்லாந்தில் சுட்டெரிக்கும் வெயில்

ஸ்கொட்லாந்தில் 47 ஆண்டுகளுக்குப் பின் தற்போது ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான வெயிலால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அபெர்டீன்ஷயரில் உள்ள ஃபைவ் கேஸலில் அதிக பட்ச வெப்பமாகப் 22.8 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. இதற்கு முன்பு 1965ஆம் ஆண்டு மார்ச் மாதம் அதிக பட்சமாக 22.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவியது. அதை விட அதிக பட்சமாக இந்த வருட வெயில் ஸ்கொட்லாந்தை மிகவும் சிரமப்படுத்தி யுள்ளது.

பிரிட்டன் முழுவதும்வெயிலில் கடுமையாக உள்ளது. ஏனைய நாடுகளில் இந்த அளவிற்கு அதிகபடியான வெப்பம் பதிவாகவில்லை. காற்று மண்டல ஆய்வுமையமான கிளேர் ஆஸ்டினில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த ஆண்டில் வெப்பம் அதிகரித்துள்ளது.

மேற்கு லண்டனில் கியூ கொர்டன்ஸில் உள்ள அதிக பட்ச வெப்பநிலை 14.1 டிகிரி செல்சியஸாகவும் ஞனிக்கிழமை 19.6 டிகிரி அதிகரித்திருந்தது. வெயிலின் கொடுமை தாங்காத பிரிட்டின் மக்கள் வார இறுதிநாள்களில் கடற்கரையை நாடிச் செல்கின்றனர். வேறு கடற்கரைகளிலும் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது.

# எகிப்தில் மீண்டும் கலவரம்

எகிப்தில் போர்ட்சேட் கால்பந்து மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கலவரத்தில் கலவரக்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் 13 வயது சிறுவன் உயிரிழந்தான். மேலும் 18 பேர் காயம் அடைந்தனர்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் கடந்த மாதம் முதலாம் திகதி கால்பந்துப் போட்டி நடை பெற்றுக்கொண்டிருந்த போது ரசிகர்களி டையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறி யது. அதில் 74 பேர் கொல்லப்பட்டனர். இந்த கலவரத்துக்கு காரணமாக ஆபிரிக்கா கண்டத்தின் மிகப் பெரிய கால்பந்து அணி யான மாஸ்ரி கிளப், 2 ஆண்டுகள் விளை யாடக் கூடாது என எகிப்து கால்பந்துக் கழகம் தடை விதித்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் எகிப்தில் போர்ட்சேட் மைதானத்தில் கால்பந்தாட்டம் நடந்தது. அதில் 'மாஸ்ரி கிளப்' அணி மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தி ரசிகர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதன்போது போர்ட் சேட் கால்பந்து மைதானத்துக்குத் தீவைக்கப்பட்டது. ரசிகர்கள் உயிர் தப்பினால் போதும் என வெளியேறினர்.

இதற்கிடையே பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசி கலவரத்தை ஒருவாறு அடக்கினர்.

## அமெ.விஞ்ஞானிக்கு 13 ஆண்டு சிறை

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் விண்வெளி மற்றும் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை இஸ்ரேலுக்கு விற்க முயன்றார் எனக் கைது செய்யப்பட்ட முன்னாள் நாசா விண்வெளி விஞ்ஞானிக்கு நீதிமன்றம் 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவார்ட் நெள சட்டே, விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் விஞ்ஞானியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாசா விண்வெளி ஆய்வு மற்றும் பாதுகாப்பு குறித்த தகவல்களை சேகரித்து இஸ்ரேல் நாட்டுக்கு விற்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

# அணு ஆயுதங்கள் ஏராளம் ஒப்புக்கொள்கிறார் ஒபாமா

சியோல்,மார்ச்28

தேவைக்கு அதிகமாகவே அணு ஆயுதங்கள் உள்ளன என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

தென்கொரியத் தலைநகர் சியோலில், அணுசக்தி பாதுகாப்பு மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட 53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாநாடு தொடங்குவதற்கு முன்னர் அதிபர் ஒபாமா, ''எங்களிடம் தேவைக்கு அதிகமாகவே அணு ஆயுதங்கள் உள்ளன. 1,500 அணு ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இது தவிர அணுகுண்டு பொருத்



தப்பட்ட 5 ஆயிரம் ஏவுகணைகள் உள்ளன. எனவே, தான், அணு ஆயுதங்களைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். இந்த விஷயத்தில், ரஷ்யாவுடன் இணைந்து செயற்பட உள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் நல்ல பலன் அளித்து வருகின்றன'' என்று கூறினார்.

## பிரேதப் பெட்டியை தயார்செய்து வைத்திருக்கும் அமெரிக்க முதியவர்



அமெரிக்காவில் தனது இறப்பின் பின் தனக்குரிய பிரேதப் பெட்டியைத் தானே தயார் செய்து வைத்துள்ளார் முதியவர் ஒருவர்.

அமெரிக்காவில் உள்ள புளோரிடா பகுதியில் வசிப்பவர் பரெட் குயின்ரிட். தற்போது 89 வயதாகும் அவர் தபால் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

பண்டைக்கால எகிப்திய கலாசாரத்தால் ஈர்க்கப்பட்ட அவர் 10 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்துக்கு சுற்றுப்பயணம் செய்து பல்வேறு இடங்களைப் பார்வையிட்டார். அங்குள்ள நல்லடக்கம் செய்யும் முறைகள் அவருக்கு பிடித்து விட்டதால் தன்னுடைய மறைவுக்குப் பின் அதைப் பின்பற்றத் தீர்மானித்தார்.

அதன் படி அவர் தனக்கு தானே பிரேதப் பெட்டியை உருவாக்கினார். பழங்கால எகிப்திய புத்தகத்தை வாங்கி அதில் கூறப்பட்டிருந்த முறைகளைப் பின்பற்றி அதைச் செய்து முடித்தார்.

7 அடி நீளம் கொண்ட அந்தப் பெட்டியின் மீது பல வர்ணப் படங்களைத் தீட்டி வைத்துள்ளார். தற்போது இந்தப் பெட் டிக்குள் எப்போது அடங்கப் போகிறோம் என்ற ஆதங்கத்துடன் வாழ்நாளை அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

## பதவி விலகத் தயாராகிறார் கிலானி

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு வழக்கை எதிர்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி, இந்த வழக்கில் தனக்கு சாதகமற்ற தீர்ப்பு வழங்கப்பட்டால் பதவியிலிருந்து ராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார் என்று பாகிஸ்தான் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் அரசின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அவர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டார் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிவ் அலி சர்தாரிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையை மீள ஆரம்பிக்குமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதை ஏற்றுக்கொள்வதற்கு பிரதமர் கிலானியின் அரசு மறுத்ததால் பிரதமர் கிலானிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நடைபெறுகின்றது.

# நேட்டோ வாகனங்களை அனுமதித்தால் அமைச்சர்களின் தலைகள் உருளும்

## பாகிஸ்தானுக்கு தலிபான் அச்சுறுத்தல்

"நேட்டோ வாகனங்களை அனுமதித்தால் பாகிஸ்தான் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைக் கொலை செய்வோம்'' எனத் தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

அமெரிக்கா உளவுத் துறை ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 26 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகளுக்கு தேவையான எரிபொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் பாகிஸ்தான் வழியாக வாகனங்கள் மூலம் எடுத்து செல்லப்படுகின்றன.

தற்போது அந்த வழியாக அவற்றைக் கொண்டு செல்ல பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. இந்த நிலையில் தற்போது அமெரிக்காவுடனான உறவை பாகிஸ்தான் மீண்டும் புதுப்பித்து வருகிறது. எனவே நேட்டோ படைகளுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லும் வீதியை மீண்டும் திறந்து விட அது முடிவு செய்துள்ளது. இதற்குத் தலிபான் தீவிர வாதிகள் கடும் எதிர்ப்பு தெரி வித்துள்ளனர்.

நேட்டோ படைகளுக்கு பொருள்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு மீண் டும் வழி விட்டால் அரசு கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்படும் நாடாளுமன்ற அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ந)

# இணைந்தன துருவங்கள்

## வடகொரியாவுக்கு வலுக்கிறது எதிர்ப்பு

வொஷிங்டன்,மார்ச் 28

வடகொரியா திட்டமிட்டவாறு ரொக்கெட் ஏவும் நடவடிக்கையை முன்னெடுக்குமானால், அதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளின்போது, ஒருங்கிணைந்து பதில் நடவடிக்கைகளை முன்னெடுக்க அமெரிக்காவும் சீனாவும் இணக்கம் கண்டுள்ளன என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.



விண்வெளியில் செய்மதி ஒன்றை சேர்ப்பதற்காகத் தான் ராக்கெட்டை ஏவவுள்ளதாக வடகொரியா கூறிவருகிறது.

விண்வெளியில் செய்மதி ஒன்றை சேர்ப்பதற்காகத் தான் ரொக்கெட்டை ஏவவுள்ளதாக வடகொரியா கூறிவருகிறது.

ஆனால், வடகொரியாவின் திட்டம் ஐ.நா. தீர்மானங்களுக்கு முரணானது என்றும் அதுவே ஏவுகணைப் பரீட்சார்த்த நடவடிக்கையாக அமைந்துவிடும் என்றும் அமெரிக்கா வாதிட்டு வருகிறது.

தென்கொரியாவில் நடக்கும் அணுப்பாதுகாப்பு மாநாட்டை முன்னிட்டு அங்கு சென்றுள்ள அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் சீன அதிபர் ஹூ ஜின்டாவோவும் சந்தித்துப் பேசியுள்ளனர். இதன்போது, வடகொரியாவின் இந்த அறிவிப்புக் குறித்து சீனா தன் கவலையை வெளிப்படுத்தும் எனச் சீன ஜனாதிபதி கூறியதாக அமெரிக்க வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் சீனா முன்னரே இந்தக் கவலையை வெளியிட்டுள்ளது. இருப்பினும் வடகொரியாவின் போக்கில் மாற்றம் எதுவும் இல்லை. அதனால் இவ்வாறான செய்திகளை அனுப்புவதைக் காட்டிலும் கடுமையான நிலைப்பாடுகளை சீனா எடுக்க வேண்டியிருக்கிறது என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, வடகொரியாவிடம் சீனா கடுமையாக நடந்து கொள்ளவில்லை என்று ஒபாமா விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வழிக்கு வருகிறது ஜப்பான்

## அணுசக்திப் பயன்பாட்டைக் கைவிட முடிவு



ஜப்பான், அணுசக்திப் பயன்பாட்டைக் கைவிட்டு விடுவது என்ற கட்டத்தை சற்று நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது.

புக்குஷிமா பிரச்சினைக்குப் பின்னர் தற்காலிகமாக வேனும் இந்த முடிவை எடுக்க ஜப்பான் முன்வந்திருக்கிறது.

அங்கு நாடு முழுவதிலுமுள்ள 54 அணு உலைகளில் ஒன்றுதான் தற்போது இயங்குகிறது. ஓர் அணுமின் நிலையம் முழுமையாக இழுத்து மூடப்பட்டுவிட்டது.

அங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் பின்னரும், அணு உலைகள் இயங்குவதற்கு உள்ளூர் மக்கள் அனுமதிக்கவில்லை என்பது தான் இங்குள்ள சங்கதி.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் சுனாமி தாக்கியதில் புக்குஷிமா அணு உலைகள் உருகிப்போன . சம்பவம் நடக்க முன்னர் வரை, ஜப்பான் அதன் மின்சாரத் தேவையில் மூன்றில் ஒரு பங்கை அணுசக்தி மூலம்தான் பெற்றுக்கொண்டது.

இப்போது ஜப்பானின் காஷிவசாக்கி- கரிவா மின் ஆலையை மூடிவிட்ட பின்னர் அங்கு ஓர் உலை மட்டும்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அதுவும் கூட வரும் மே மாதம் செயலிழக்கச் செய்யப்படும்.

அணுச் சக்தியின் பாதுகாப்புத் தொடர்பில் எந்தளவுக்கு நம்பிக்கை வைக்கமுடியும் என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

ஒவ்வொரு 13 மாதங்களுக்கும் ஒருமுறை மேற்கொள்ளப்படும் வழமையான கண்காணிப்பு அல்லது பழுது பார்க்கும் நடவடிக்கைகளின்போதுகூட உலைகளை இயங்கவிடுவதற்கு உள்ளூர் மக்கள் தயாரில்லை.

# பிரான்ஸ் நாட்டவருக்கும் தலிபான்கள் பயிற்சி

இஸ்லாமாபாத்,மார்ச் 28

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 12 இற்கு மேற்பட்ட முஸ்லிம் இன மக்களுக்கு தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் தீவிரவாதப் பயிற்சி அளித்து வருகின்றனர் என பாகிஸ்தானின் உளவுப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரான்ஸில் நடைபெற்ற பள்ளிக்குழந்தைகளின் மீதான தாக்குதல் இதற்கு ஒரு சிறு உதாரணமாகும் எனத் தெரி வித்த அவர் மேலும் கூறியதாவது: -

கடந்த மூன்றாடுகளில் மட்டும் சுமார் 80இற்கு மேற்பட்ட பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் இன மக்களுக்குத் தலிபான் தீவிரவாதிகள் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் தீவிரவாதப் பயிற்சி அளித்து வந்துள்ளனர். இவற்றில் பிரான்ஸ் நாட்டுத் தளபதியாக விளங்கியவர் அபு தரீக் என்பவர் . இவரின் ஆணைப்படி ஐந்து பேர் கொண்ட குழுவினர் கடந்த ஆண்டு ஜனவரியில் பிரான்ஸ் நாட்டில் சில பணிகளைச் செய்து முடிக்கும்படி அனுப்பப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அதிபர் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய அதிபர் நிகோலஸ் சர்கோஸி தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந)

**O/L பெறுபேறுகளில் சாதனை படைத்துவரும் நிறுவனத்தில் ஆரம்பமாகிறது**

**O/L DAY CLASSES**

காலை 8.00 - பி.ப. 1.00 வரை

அனுமதிகள் வழங்கப்படுகின்றன -அதிபர்

**The Express Institute**
Irupalai, Kopay.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 30.03.2012 பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**குறிப்பு:** எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு:**

நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944.
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.0776225944.
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, 0778996085.
(16102)(6,7,12)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.

சம்பளம்:- ரூபா 10,000/=

தொடர்பு: 021-7900637

**காணவில்லை**

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள சக்தி மிகு வேம்படி அம்மன் ஆலய பூசகரின் சைக்கிள் 26.03.2012 அன்று சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தபோது காணாமல் போய்விட்டது. இதனைத் திருடியவர்களோ அல்லது தவறுதலாக எடுத்தவர்களோ தயவு செய்து ஒப்படைத்து அம்மனின் அருளைப் பெறுங்கள்.

க.ரஜாம்பரம்(பூசகர்)

(சி/2966) (6,9,12)

**முருகன் திருமண சேவை**

பதிவு இல: VSW/J/BR/790/1/99

எம்மிடம் ஆண், பெண் உயர் இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த பொறியியலாளர், கணக்காளர் உட்பட பல தரப்பட்ட படிப்பு, பதவிகளை வகிப்பவர்களது குறிப்புக்கள் உண்டு. அத்துடன் லண்டன் PR உள்ள பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமற்ற 76½ பாவமுடைய மணமகனுக்கும் மணப்பெண்தேவை.

தொடர்பு : செ. விசயரட்ணம்
நவாலி கிழக்கு,
மானிப்பாய்
T.P.NO : 021 7914647

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 27 |
| 06 | 02 |
| 1961 | 2012 |

### அமரர் இராசையா ஜெயகோபால்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் - 1 யாழ்.பல்கலைக்கழகம் - விஞ்ஞானபீடம்)

கடந்த 27.02.2012 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் நேரில் வந்தும், தொலைத்தொடர்புமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (28.03.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோலிபுரம் மேற்கு,
சுழிபுரம் (16100)(6-9-8) குடும்பத்தினர்

**வீடு விற்பனைக்கு**

262/2, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை எனும் விலாசத்தில் உள்ள 3½ பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
077 3266253, 021 51 00029.

**கோழிக் குஞ்சு விநியோகம்**

BAHIRAHA NO -1 புறொயிலர் குஞ்சுகள் (28.03.2012) விநியோகிக்கப்படும் விலை 105/= ரூபா மட்டுமே பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

றாஜீவ், நவாலி வீதி,
ஆனைக்கோட்டை
T.P.NO : 077 6090926

## மரண அறிவித்தல்

### பர்னாந்து மைக்கல் ஞானம்மா (மணி)



யாழ். மத்தியூஸ் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் ஞானம்மா (மணி) கடந்த (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் - மேரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பர்னாந்து மைக்கல் அவர்களின் அன்பு மனைவியும், செல்வராசா, அன்ரன், லீலியற், புளோறன்ஸ், லெஸ்லி, இயேசு (ஜேர்மனி), ராஜன் (ஜேர்மனி), யூஜின் (டோகா) ஞானேஸ், தவம் (கனடா), மெலானி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தங்கமணி, ராசா, செல்லக்கிளி, றொபேட், தேவி, மாலா (ஜேர்மனி), றோசா, சுமதி (கனடா), பயஸ் (பிரான்ஸ்) ஆகி யோரின் மாமியும், காலஞ்சென்ற அருளம்மா மற்றும் துரைராசா, வேவி, றூபி, காலஞ்சென்ற ராசதுரை, வேவிராசா மற்றும் தங்கராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.03.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி கல்வாரி பூரண சுவிஷேஷ சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.41/13, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
ர.றொபேட் (மருமகன்)

(16119) (45 -7 -9)

# தனித் தெலுங்கானா கோரி மீண்டும் போராட்டம் தீவிரம்

## முழுநாள் கடை அடைப்பு, இருவர் தீக்குளித்ததால் பதற்றம்



ஹைதராபாத், மார்ச்.28

ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக்கோரி மீண்டும் போராட்டம் வலுத்துள்ளது. கோரிக்கையை வலியுறுத்தி நேற்று முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்கக் கோரி தெலுங்கானாப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக போராட்டம் இடம் பெற்று வருகின்றது. இந்த நிலையில் வாரங்கல் மாவட்டம் அஸ்வராப் பகுதியைச் சேர்ந்த எம்.பி.ஏ. மாணவர் போஜ்ய நாயக் தனித் தெலுங்கானாவுக்காக தீக்குளித்து உயிரிழந்தார்.

இதனால் வாரங்கல் மாவட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. இதனால் அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப் பட்டனர். இந்தப் பதற்றம் தணிவதற்குள் அதே மாவட்டத்தில் உள்ள திம்மம் பேட்டையைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி ராஜமவுளி அங்குள்ள பெற்றோல் நிலையம் அருகே தனித்தெலுங்கானாவுக்காக தீக்குளித்து உயிரிழந்தார்.

அவர் தீக்குளித்தபோது ஜெய் தெலுங்கானா என்று கோஷமிட்டார் எனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். தெலுங்கானா பகுதியில் 2 நாளில் தனிமாநில கோரிக்கையை வலியுறுத்தி 2 பேர் உயிரிழந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தனிமாநில கோரிக்கையை வலியுறுத்தி தெலுங்கானாவில் நேற்று முழுகடை அடைப்புப் போராட்டத்துக் அழைப்பு விடுக்கப்பட்டிருந்து. வாரங்கல், நிஜாமாபாத், கரீம்நகர், மெதக், ஹைதராபாத் உள்பட 10 மாவட்டங்களில் பஸ்கள் ஓடவில்லை. அனைத்துப் பகுதிகளிலும் கடைகள் அடைக்கப்பட்டன. தியேட்டர்கள் மூடப்பட்டன.

பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டன. பள்ளிகளுக்கு பரீட்சை நடப்பதால் அவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டன. முழு கடை அடைப்பையொட்டி வாரங்கல், கரீம் நகர், ஹைதராபாத், மெதக் உள்பட பல்வேறு முக்கிய நகரங்களில் ஏராளமான பொலி ஸார் குவிக்கப்பட்டனர். அவர்கள் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

### இந்திரா, ராஜீவ் சிலைகள் உடைப்பு

தெலுங்கானா போராட்டக்காரர்கள் தலைவர்களின் சிலைகளை உடைத்து வீதி மறியலில் ஈடுபட்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தீக்குளித்து இறந்த ராஜமவுலியின் உடல் நேற்று முன்தினம் மாலை வாரங்கலில் உள்ள அவரது சொந்த கிராமத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இறுதிச் சடங்கில் தெலுங்கானாவைச் சேர்ந்த பேரவை உறுப்பினர்கள் 22 பேர், டிஆர்.எஸ்., பா.ஜ., தெலுங்கு தேசம், மாணவர் சங்கத்தினர், ஓட்டோ சங்கத்தினர் மற்றும் தெலுங்கானா கூட்டுக் குழுவினர் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு இடையே இறுதி ஊர்வலம் நடை பெற்றது.

ஆனால் வழியில் இருந்த இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி மற்றும் வை.எஸ். ஆர். சிலைகளை அடித்து நொறுக்கியபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. (வ)

# மாவோக்களின் கண்ணிக்கு படையினர் 19 பேர் உயிரிழப்பு

## மராட்டிய மாநிலத்தில் அதிர்ச்சி

மும்பை, மார்ச்.28

மராட்டிய மாநிலத்தில் கட்சி ரோலி மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுகளின் கண்ணிவெடியில் சிக்கி 16 மத்திய துணைப் பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளனர்.

192 ஆவது பட்டாலியன் துணைப் பாதுகாப்புப் படையினரை ஏற்றிச் சென்ற பஸ்ஸை இலக்கு வைத்து மாவோயிஸ்ட்டுகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.


ஒரிசா மாநிலம் கந்தமால் - கஞ்சம் மாவட்ட எல்லையில் 2 இத்தாலியர்களை அண்மையில் கடத்திச் சென்று ஒருவரை மட்டும் விடுவித்துள்ளனர்.

ஒரிசா - ஆந்திர மாநில எல்லையில் கோரபுட் மற் றும் மல்காங்கி மாவட்டங்களில் கடந்த ஒருவார காலமாக மாவோயிஸ்ட்டுகள் தாக்குதலை நடத்தி வருகின்றனர். மேலும் ஆளும் கட்சிப் பேரவை உறுப்பினர் ஜிஹாஹிகாவையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் ஆந்திரம் மற்றும் சத்தீஸ்கருக்கு இடைப் பட்ட கட்சிரோலி மாவட்டத்தில் இத்தகைய தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு சத்தீஸ்கர் மாவட்டத்தில் தண்டேவடா வனப்பகுதியில் மாவோயிஸ்ட்டுகள் நடத்திய மிகப் பெரும் தாக்குதலில் மத்திய துணைப் படையினர் 76 பேர் கொல்லப்பட்டதே மிகப்பெரிய தாக்குதலாகக் கருதப்படுகிறது. (வ)

# கன்னியாகுமரியில் 25 கடைகள் தீக்கிரை



கன்னியாகுமரி மாவட்டம், காந்தி மண்டபம் அருகே நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 25 கடைகள் எரிந்து நாசமாகின.

கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகே பார்க் வியூ பஜாரில் பகவதி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான 29 கடைகள் உள்ளன. இதில் கோ.ஒப்டெக்ஸ் உள்ளிட்ட பல்வேறு கடைகள் இயங்குகின்றன. நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் ஒரு கடையில் ஏற்பட்ட தீ காற்றின் வேகம் காரணமாக பக்கத்துக் கடைகளுக்கும் பரவத் தொடங்கியது.

சில கடைகளில் ஊழியர்கள் தங்கியிருந்ததால் அவர்கள் அலறியடித்து வெறியேறி தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனர். கன்னியாகுமரி, நாகர்கோவில் உள்ளிட்ட மாவட்டத்தின் ஒன்பது தீயணைப்பு வாகனங்களில் வந்த 60 தீயணைப்புப் படையினர் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அவர்களின் தீவிர முயற்சி காரணமாக பகவதியம்மன் கோயிலுக்குத் தீ பரவாமல் தடுக்கப்பட்டது. இதில் 25 கடைகள் நாசமானதால் பல லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது. தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. தீ விபத்துக்கு அனுதாபம் தெரிவித்து கன்னியாகுமரியில் நேற்றுமுன்தினம் கடைகள், விடுதிகள் அடைக்கப் பட்டிருந்தன. (வ)

# திபெத்திய இளைஞன் டில்லியில் தீக்குளிப்பு

*சீனப் பிரதமரின் வருகையைக் கண்டித்து*



சீனப்பிரதமரின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில் இந்திய நாடாளுமன்ற முன்றிலில் திபெத்திய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் தீக்குளித்துள்ளார்.

மாநாடொன்றில் கலந்து கொள்ளும் முகமாக இவ்வார இறுதியில் சீன பிரதமர் ஹூ ஜிண்டா இந்தியாவுக்கு வருகை தரத் திட்டமிட்டுள்ளார்.

இந்தநிலையில் திபெத் மீது சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், சீனப் பிரதமரின் வருகையை எதிர்த்தும் நேற்றுமுன்தினம் டில்லி நாடாளுமன்றம் முன்பாக பல நூற்றுக்கணக்கான திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது ஜேஸி என்ற இளைஞர் தன் மீது தீயை பற்ற வைத்துக்கொண்டுள்ளார்.

நீரூற்றி தீயை அணைக்க கடும் முயற்சி மேற்கொண்ட அயலவர்கள், உடனடியாக அந்த இளைஞரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும் சுமார் இரு நிமிடங்களுக்கு அவர் தீயுடன் நடந்துவந்ததால், 98% உடல் பகுதிகளில் தீக் காயம் ஏற்பட்டிருப்பதாகவும், தோல் பகுதி மோசமாக கருகி யுள்ளதாகவும்,அவர் தொடர்ந்து ஆபத்தான நிலையிலேயே இருப்பதாக வும் மருத்துவ மனை தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டு திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்த 27 வயதான ஜேஷி, கடந்த இருவருடங்களாக டில்லியிலேயே வசித்து வந்துள்ளார். அவருடைய தன்னிச்சையான திடீரென மேற்கொண்ட இந்தச் செயற்பாடு, மிகுந்த அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை திபெத்துக்கு சீனா சுதந்திரம் கொடுக்கும் வரை சீனா இதைத்தான் எதிர்கொள்ளும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மற்றுமொரு திபெத்தியர் தெரிவித்தார். (வ)

# கனிமொழியின் மனுவுக்கு பதிலளிக்க சி.பி.ஐ.க்கு உத்தரவு

டில்லி, மார்ச்28

2ஜி ஊழல் வழக்கில் தன் மீதான குற்றச்சாட்டுகளை ரத்து செய்யக் கோரி தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்குமாறு மத்திய புலனாய்வுத்துறைக்கு டில்லி உயர்நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் தனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லையென்றும், அது அரசு கொள்கைப்படிதான் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும் கனிமொழி கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்திருந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். மேலும் கலைஞர் தொலைக்காட்சியில் தான் செயல்படாத பங்குதாரராக மட்டுமே இருந்ததாக கனிமொழி தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

எனவே 2ஜி ஊழல் வழக்கில் தன்மீதான குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதால் குற்றச்சாட்டுகளை ரத்துச் செய்ய வேண்டும் என்று அவர் கோரியிருந்தார். (வ)

# கை, கால்களை சங்கிலியால் பிணைத்து புதுச்சேரியில் இளைஞன் நடை பயணம்

இலங்கைத் தமிழர்களுக்காக காலில் சங்கிலி கட்டிக் கொண்டு, சிலுவை சுமந்தபடி புதுச்சேரியில் ஒருவர் நேற்று முன்தினம் நடை பயணம் மேற்கொண்டார். இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரி நெல்லித்தோப்பைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவரே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

சிலுவை போன்ற மரக் கட்டையை ஏந்தி, கைமற்றும் கால்களைச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டு, கடற்கரை காந்தி சிலை அருகிலிருந்து,நேற்று முன்தினம் காலை நடைபயணத்தைத் ஆரம்பித்தார் ரவீந்திரன். வழக்கமாக கோரிக்கை மனுக்களை முதல்வர், அமைச்சர்கள், அதிகாரிகளிடம் கொடுப்பதைத் தான் கேள்விப்பட்டிருப்போம்.

## ஈழத்தமிழரின் அவலத்தை வெளிக்கொணரும் நோக்கில்



ஆனால் ரவீந்திரன், இலங்கைத் தமிழர்களுக்குப் போதுமான பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் கோரிக்கை மனுவைப் புதுச்சேரியில் முக்கியமான இடங்களில் நிறுவப்பட்டுள்ள மறைந்த தலைவர்களின் சிலைகள் முன் வைத்தபடி (ஒட்டி விட்டு) சென்றார்.

காந்தி சிலையிடம் மனு அளித்து விட்டு புறப்பட்ட ரவீந்திரன், நேரு, அண்ணா, ராஜீவ், இந்திரா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களின் சிலை இருக்கும் பகுதிகளுக்குச் சென்று, அங்கு மனுவைச் சமர்ப்பித்து விட்டுச் சென்றார்.

இதுகுறித்து ரவீந்திரனிடம் கேட்ட போது:

''நாட்டில் உள்ள பல தலைவர்கள் பிரச்சினைகளை காதில் வாங்காமல் சிலையாய் நிற்கின்றனர். இதனால், தற்போது சிலையாய் உள்ள தலைவர்களிடம் மனு கொடுக்கிறேன்'' என்று தெரிவித்தார்.

* இலங்கையில் வாழும் தமிழர்களை தமிழராக மட்டும் பார்க்காமல் மனிதர்களாகவும் பார்க்க வேண்டும்.
* ஈழத்தமிழரின் துயரங்கள் உலகறிய வேண்டும்.

இவையே ரவீந்திரனின் நூதனப் போராட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# இந்தியா, சீனாவுக்கு வேண்டாம் எங்களுக்கு வேலை தாருங்கள்

### தொழிற்சங்கம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 28

ரயில் பாதைகளை புனரமைக்கும் பணிகளை இந்தியா மற்றும் சீனாவுக்கு வழங்காது அப்பணிகளை ரயில் பணியாளர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளுமாறு ரயில் பணியாளர்களின் தொழிற் சங்கங்கள் அரசுக்கு கோரிக்கையொன்றை விடுத்துள்ளன.


ரயில் பணியாளர்களால் சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுமானால் கிலோமீற்றர் ஒன்றுக்கு 500 லட்சங்கள் வரையிலேயே செலவாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இந்திய நிறுவனத்தினால் அந்தச் செயற்பாடு தொடர்பாக ஒரு கிலோ மீற்றருக்கு 2000 லட்சம் ரூபாவும், சீன நிறுவனத்தினால் அப்பணியை முடிப்பது தொடர்பாக ஒரு கிலோ மீற்றருக்கு 2500 லட்சம் ரூபாவும் செலவழிக்கப்படுவதாக ரயில் சேவை தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

மேலும் ரயில் பாதைகள் நிறுவுவதற்கு இலங்கை அரசு இந்தியா மற்றும் சீனாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் காரணமாக ரயில் திணைக்களத்துக்கு பல பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்படுவதாகவும் ரயில் பணியாளர்களின் பொது சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரான சுமதி பால மானவடு தெரிவித்தார்.

இதனிடையே கொழும்பு -மாத்தறை கரையோர ரயில் மார்க்கமும் வடக்கு ரயில் மார்க்கத்தின் ஒரு தொகுதியும் ரயில்வே திணைக்களத்தின் பணியாளர்களால் இதற்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ளமை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தற்போது, வடக்கின் புதிய ரயில் மார்க்கத்தை அமைக்கும் பணிகள் இந்திய நிறுவனங்களிடமும் தெற்கின் ஒருசில புதிய ரயில் மார்க்கங்களை அமைக்கும் பணிகள் சீன நிறுவனங்களிடமும் வழங்கப்பட்டுள்ளன. (எ-22)



இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய **வீதியில்** அம்பலவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு**வர் பலி**யானதுடன், 18 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 14 பேர் **தற்போது** கஹவத்தை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். **இந்நிலையி**ல், படுகாயமடைந்தவர்கள் இரத்தினபுரி பொது மருத்துவமனைக்கு மாற்ற**ப்பட்**டுள்ளனர். எம்பிலிப்பிட்டிய - இரத்தினபுரி வீதியில் பயணித்த தனியார் பஸ் **ஒன்று** கட்டுப்பாட்டை இழந்து 3 பாரவூர்திகளுடன் மோதி மதிலொன்றையும் உடை**த்துக்கொண்**டு சென்று நின்றது. (எ)

## போதைவஸ்து பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 28

போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கு அமைய அடுத்த மாதத்தில் பல திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றும் புகைத்தல் தொடர்பான சட்டங்களில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் சபையின் இயக்குநர் லேஷா டி சில்வா தெரிவித்தார். தற்போதைய சட்டத்திற்கு அமைய பொது இடங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

புதிய சட்ட திருத்தத்துக்கு அமைய வீதியில் நடந்து செல்லும் போதுகூட புகைத்தல் தடைசெய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐ.தே.க.வின் பொறுப்புகள் தொடர்பில் ஆலோசனை

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களுக்கு கட்சியின் செயற்பாடுகள், பொறுப்புகள் என்னவென்பது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கண்டியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் அடிப்படைப் பொறுப்புகளை இனங்கண்டு அதன் தலைவர்கள் செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளை ஆராய்ந்து எதிர்க்கட்சி என்ற வகையில் மேற்கொள்ள வேண்டிய விடயங்களை ஆராயவேண்டும். கட்சிக்குள் முரண்பாடு கொள்வதில் எந்தவித பயனும் இல்லை.

முறையான தீர்வுகளை எட்டுவதே காலத்தின் தேவையாக இருப்பதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன, இந்த முறை மே தின நிகழ்வுகளை கொழும்பில் நடத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டங்களை யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு ஒன்றிணைந்த மே தினமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவர்களின் இந்தத் தீர்மானம் காரணமாக கட்சி ஆதரவாளர்கள் பல மிழப்பதாக மைத்திரி குணரட்ன குறிப்பிட்டுள்ளார். (எ)

## 25 வயதுக்கு குறைந்தோரின் 75 வீத திருமணம் தோல்வி

25 வயதிற்கும் குறைந்தவர்கள் செய்து கொள்ளும் திருமணத்தில் 75 சதவீதம் தோல்வியில் முடிவடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியானதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குடும்ப வாழ்க்கை தோல்வியில் முடிவடைவதற்கு காரணம் 25 வயதிற்கும் குறைந்து திருணம் செய்து கொள்வதே என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கிராமப் பகுதிகளிலேயே இவ்வாறான திருமணங்கள் அதிகம் இடம்பெறுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிரந்தரத் தொழில் இல்லாத ஒருவருக்கு இவ்வாறு திருமணம் செய்து வைப்பதால் சிறிது காலத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு குடும்ப வாழ்க்கை தோல்வியில் சென்று முடிகிறது. மேலும் கல்வி அறிவு குறைவும் குடும்ப வாழ்க்கைத் தோல்விக்கு ஒரு காரணமாகிறது. இதேவேளை, காதல் திருமணங்கள் 30 சதவீதம் தோல்வியில் முடிவடைவதாகவும் சுகாதார அமைச்சின் ஆய்வு தெரிவிக்கின்றது. (எ)

## கடத்தப்பட்ட ஆளும் கட்சி உறுப்பினர் 2 மணி நேரத்தில் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் மாகாண கவுன்சிலரும், தற்போதைய இலங்கை சுதந்திரக் கட்சியின் உறுப்பினருமான சாகர சேனரத்ன கடத்தி விடுவிக்கப்பட்ட சம்பவம் நேற்றும் முன்தினம் கோட்டே பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோட்டே ராஜ மஹா விகாரையின் அருகில் வைத்து வானில் வந்த இனந் தெரியாத கும்பலால் இவர் கடத்தப்பட்டார். அதனை தொடர்ந்து விரைவான தேடுதல் நடவடிக்கையை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டனர்.

**அவர் கடத்தப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கும் பன்னர் ஜா—எல நகரப் பகுதியில் இருந்து தனது குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு தான் விடுவிக்கப்பட்டதை அறிவித்தார்.**

கடத்தப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கும் பன்னர் ஜா-எல நகரப் பகுதியில் இருந்து தனது குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு தான் விடுவிக்கப்பட்டதை அறிவித்தார் சேனரத்ன. இவர் தபால் துறை அமைச்சரான ஜீவன் குமாரண துங்கவின் நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குடிதண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

கொழும்பு, மார்ச் 28

குடிதண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வடிகாலமைப்புச் சபை பொது மக்களைக் கோரியுள்ளது.

தற்போது காணப்படுகின்ற வரட்சியான கால நிலை காரணமாக, குடிதண்ணீரை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் உள்ள மக்கள் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. (எ)

## மட்டக்களப்பு கிரான்குளப் பகுதியில் இரு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளாயின

### 10 இற்கும் மேற்பட்டோர் காயம்

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளப் பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு பஸ்களிலும் பயணம் செய்த சுமார் 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து ஆரையம்பதி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை தனியார் பஸ் முந்திச்செல்லமுற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு - கல்முனை வீதியில் பஸ் சாரதிகளின் கவனயீனம் காரணமாக விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயணிகளைப்பற்றி கவனத்தில் கொள்ளாமல் தங்களது வருவாய்க்காக சில தனியார் சாரதிகளும் சில இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகளும் போக்குவரத்து விதிமுறைகளை மீறிச் செயற்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

## 91 ஆயிரம் மில்லியன் ரூபா செலுத்தவேண்டும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடந்த வருடம் மட்டும் அரச நிறுவனங்கள் 91,000 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இவற்றில் இலங்கை மின்சார சபை மட்டும் 72,000 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் 53,000 மில்லியன் மக்கள் வங்கியிடமிருந்து 2.5 சத வீத வருடாந்த வட்டி அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ளது.

## பிரபல நடிகர் வீட்டின் மாடியில் கஞ்சாசெடிகள்

கொழும்பு, மார்ச் 28

பிரபல நடிகர் ஒருவரின் மூன்று மாடிகள் கொண்ட வீட்டின் மொட்டை மாடியில் கஞ்சா செடிகள் வளர்க்கப் பட்டதனையடுத்து அந்த நடிகரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மகரகம நகரிலுள்ள அவரது வீட்டை முற்றுகையிட்ட பொலிஸாரே அவரைக் கைது செய்துள்ளனர்.

நடிப்புத்துறையில் அரச விருது பெற்ற இந்த நடிகர், அரச கலாசார விழாவிலும் விருது பெற்றவராவார்.

**இவர் தனது வீட்டின் மொட்டை மாடியில் பூச்சாடிகளில் கஞ்சா செடிகள் வளர்த்து வந்துள்ளார்.**

**இவர் தனது வீட்டின் மொட்டை மாடியில் பூச்சாடிகளில் கஞ்சா செடிகள் வளர்த்து வந்துள்ளார்.**

தான் இதனை வளர்த்தது தனது மருந்துவத் தேவைக்கே என அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (எ)

## குறிக்கோள்

①

"உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்றால், நல்லதொரு குறிக்கோளை உருவாக்கிக் கொள்ளுங்கள்."

இதைப்படித்தவுடன் சற்று வியப்பாக இருக்கலாம். அதாவது குறிக்கோளை அடைய தன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் குறிக்கோள் தன்னம்பிக்கையை வளர்க்குமா? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம்.

ஆமாம்! குறிக்கோள் உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும் என்பதற்கு எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. அதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

இடுப்புக்குக் கீழே முழுவதும் உணர்வற்றுப் போன பின்பும் ஜோனி என்ற பெண் மிகச் சிறந்த ஓவியராகப் பெயரெடுத்தார். 'பெரிய ஓவியராக வேண்டும்' என்று ஜோனியிடம் தோன்றிய குறிக்கோளே அவருக்குத் தன்னம்பிக்கையைக் கொடுத்தது.

கைகளை இழந்தவர்கள் பலருக்கு 'எழுத வேண்டும்' என்ற குறிக்கோள் இருப்பதாலேயே, அவர்கள் கால்களால் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

தவழ்ந்து கொண்டிருக்கும் சிறு குழந்தையினுள் தோன்றும் 'எழுந்து நடக்க வேண்டும்' என்ற குறிக்கோள் அல்லது உந்துதலே, அந்தக் குழந்தையினுள் எழுந்து நடக்கும் தன்னம்பிக்கையைத் தருகிறது.

உயர்ந்த குறிக்கோள் கொண்டவர்கள் ஒருபோதும் தன்னம்பிக்கையை இழப்பதில்லை. குறிக்கோள் ஒரு தூண்டுகோலாக அமர்ந்து தன்னம்பிக்கைச் சுடரைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருக்கும்.

உங்கள் குறிக்கோள் ஒரு சக்தி வாய்ந்த காந்தம் போன்றது. அது உங்களுக்குள் சிதறிக் கிடக்கும் சிறு சிறு நம்பிக்கைகளை எல்லாம் பெரிய தன்னம்பிக்கையாக மாற்றித் தருகிறது.

இனி, 'குறிக்கோளை எப்படித் தேர்ந்தெடுப்பது?' என்ற கேள்விக்கு வாருங்கள்.

நீங்கள் செய்கின்ற செயல்களில் அதிகத் திறமையோடும், ஆர்வத்தோடும் செய்ய முடியும் என்று நீங்கள் உறுதியாக நம்புகிற ஒன்றை உங்கள் குறிக்கோளாகத் தேர்ந்தெடுங்கள்!

எதற்காக இதைக் குறிப்பிடுகிறோம் என்றால், இயலாத ஒன்றையோ, அடுத்தவர் செய்கிறார் என்ற ஒன்றையோ உங்கள் குறிக்கோளாகத் தேர்ந்தெடுத்தால் அது பாதி வழியிலேயே உங்களைச் சலிப்பூட்டுவதாகவும் தளர்வுறச் செய்வதாகவும் அமைந்துவிட வாய்ப்புண்டு.

ஆத்மார்த்தமாக நீங்கள் சாதிக்க முடியும் என்று ஒன்றை உங்கள் குறிக்கோளாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் குறிக்கோள் உங்களை மட்டும் சார்ந்ததாக இருப்பதை விட, அது பிறருக்கும் பயன்படும்படி இருந்தால் உங்கள் தன்னம்பிக்கை இன்னும் அதிகரிக்கும் என்பது உண்மை.

அவ்வாறு உங்கள் மகத்தான குறிக்கோளைத் தேர்ந்தெடுக்கும்போதுதான் உங்கள் தன்னம்பிக்கை வளரும். அந்தக் குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகளில் உங்களால் தொடர்ந்து ஈடுபட முடியும்.

ஓர் இளைஞருக்கு இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம். அவர் முதன் முதலாக ஒரு கவிதைப் போட்டியில் கலந்துகொண்டார். அந்தப் போட்டியில் அவர் நான்காவது இடத்தையே பெற்றார். ஆனால் பின்னாளில், நாடறிந்த கவிஞனாகப் போற்றப்பட்டார். முதல் மூன்று பரிசுகளை வென்றவர்கள் எங்கே போனார்கள்? என்பது யாருக்கும் தெரியாது. அவர் கவிஞர் கண்ணதாசன்!

உங்கள் இலக்கு மகத்தானதாக இருக்கும்போது இடையில் தோன்றும் சிறு சிறு தோல்விகளோ, சறுக்கல்களோ உங்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பமாக அமையும். அவை உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும். நிச்சயம் உங்களுக்கு எந்தவித சோர்வையும் தந்துவிட முடியாது.

இங்கிலாந்தைச் சேர்ந்த பெஞ்சமின் டிஸ்ரேலி என்னும் இலக்கியவாதிக்கு, அந்த நாட்டின் பிரதம மந்திரியாவது லட்சியமாக இருந்தது. ஒருமுறை அவரது மனைவி, ஏதோவொரு காரணத்துக்காக அவரைக் கடிந்து கொண்டார்.

அப்போது டிஸ்ரேலி தனது மனைவியிடம் 'அன்பே! நீ இங்கிலாந்தின் வருங்காலப் பிரதம மந்திரியின் மனைவி என்பதை மறந்துவிட்டுப் புலம்புகிறாய்!' என்று கூறினார். இத்தனைக்கும் அந்த நேரத்தில் டிஸ்ரேலி, அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட இல்லை.

ஆனால் பின்னாளில் தான் சொன்னது போலவே, அந்த நாட்டின் பிரதமராக மாறினார். இதுதான் குறிக்கோள் தந்த தன்னம்பிக்கை. ஒருவேளை டிஸ்ரேலியால் பிரதமராக வர இயலவில்லை என்றாலும் அவர் ஒரு சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராகவேனும் நிச்சயம் வந்திருப்பார்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# நிதிசார் நிபுணத்துவ அறிவு எதிர்காலத்தில் அனைவருக்கும் அவசியம்

### இலங்கை மத்திய வங்கி இணைப்பாளர் தெரிவிப்பு

**எதிர்காலத்தில் சகல குடிமக்களும் நிதிசார் நிபுணத்துவம் உடையவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நிதிசார் நிபுணத்துவ அறிவு உள்ளவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேல்நிலைபடுத்திக் கொள்வதோடு பொருளாதார மேம்பாட்டையும் விருத்தி செய்ய முடியும்.**

அச்சுவேலி, மார்ச் 28

எதிர்காலத்தில் சகல பிரஜைகளும் நிதிசார் நிபுணத்துவம் உடையவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நிதிசார் நிபுணத்துவ அறிவு உள்ளவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேல்நிலைப் படுத்திக் கொள்வதோடு பொருளாதார மேம்பாட்டையும் விருத்தி செய்ய முடியும். இந்த வகையில் இலங்கை மத்திய வங்கி கிராமிய மட்டத்தில் நிதிசார் நிபுணத்துவ செயற்பாடுகளை நடத்தி வருகின்றது என இலங்கை மத்திய வங்கி இணைப்பாளர் எஸ்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

அச்சுவேலி இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கான நிதிசார் நிபுணத்துவம் தொடர்பாகப் பயிற்சிக் கருத்தரங்கு அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஸ்ரீ பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

இலங்கையில் 90 வீதமான மக்கள் கல்வி அறிவு உள்ளவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் என்ற வகையில் தென்னாசியாவில் கல்வித்தர விகிதம் கூடிய நாடு என்ற பெருமையை இலங்கை பெறுகின்றது. ஆனால் இலங்கையில் 40 வீதத்தினரே வங்கிகளின் சேவையை பெறுகின்றனர். இதில் மிகக் குறைந்த வீதத்தினரே வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுத் தமது வாழ்வாதாரத்தை தொழில்முயற்சியை பெருக்கிக் கொள்கின்றனர். பெரும்பாலானவர்கள் தமது தேவைகளுக்காக வங்கிகளுக்குச் செல்வதற்கு தயங்குகின்றனர். இது அச்சுவேலியைப் பொறுத்தவரையில் மாறுபட்ட வீதத்தில் உள்ளது.

மூனிதன் தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் நிதானமான பொருளாதார அபிவிருத்திக்கும் நிதிசார் நிபுணத்துவம் உள்ளவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நிதிசார் நிபுணத்துவம் இல்லாதவர்கள் எதிர்காலத்தில் தமது பொருளாதார சவால்களை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இலங்கை மத்திய வங்கி கிராமிய மட்ட நிதிசார் நிபுணத்துவ பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

தமிழ்மொழி மூலம் நடைபெறும் முதலாவது பயிற்சிக் கருத்தரங்கு அச்சுவேலியில் நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் (அபிவிருத்திப்பிரிவு) டபிள்யூ. ஏ.சி.திசேரா, மத்திய வங்கியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ். திருவாகரன், வாழ்வாதார கடன் அதிகாரி எஸ். சிவநாதன் ஆகியோர் பயிற்சிக் கருத்தரங்கை நடத்தினர். நிதிசார் நிபுணத்துவம் தொடர்பான நூலும் இலவசமாக வழங்கப்பட்டது. (எ-11)



காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய திண்ணபுரம் அந்தாதி நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் இடம்பெற்றபோது சமூக சேவையாளரும் தொழிலதிபருமான சண்முகம் சிவஞானம் நூலின் முதற் பிரதியை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (250)

## பொதுக்கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்

ஆவரங்கால் கிழக்கு ஊற்று மொழிகள் சங்க அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும் கடந்த 16 ஆம் திகதி ஆவரங்கால் கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில், ஆவரங்கால் கிழக்கு கிராம அலுவலர் கு.கதிரமலைநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம்: தலைவர் - சி.குணரத்தினம் (அரச அனுமதி பெற்ற மொழி பெயர்ப்பாளர்), செயலாளர் - நா.சிவஞானம் (ஓய்வு நிலை அதிபர்), பொருளாளர் - திருமதி க.சுரேகா, உபதலைவர் - செ.தவ ராசசிங்கம் (ஜே.பி), உபசெய லாளர் - திருமதி ஜெ.சங்கீதா, செயற்குழு உறுப்பினர்களாக சோ.இராசலிங்கம் த.சகிலதாஸ், செல்வி சு.விருந்தா, செல்வி நா.சுவீதினி. (எ)

## சிறுவர் சித்திரப் போட்டி

வடமராட்சி வலயத்திலுள்ள பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று கோட்டங்களினது கோட்ட மட்ட சிறுவர் சித்திரப் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. மருதங்கேணி கோட்ட மட்ட சிறுவர் சித்திரப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

கரவெட்டி கோட்டமட்ட சித்திரப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பருத்தித்துறை கோட்டமட்ட சிறுவர் சித்திரப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (எ-190)

## இடமாற்றம்

பளை, மார்ச் 28

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.முகுந்தன் கண்டாவளை பிரதேச உதவி அரச அதிபராகவும், கண்டாவளைப் பிரதேச உதவி அரச அதிபர் சி.சத்தியசீலன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ-9)

## கௌரவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 28

யாழ்.மாவட்ட காசநோய் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி செ.யமுனானந்தா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவரது சேவைக்காகப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

உலக காசநோய் ஒழிப்பு தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் இந்த மாதம் நடத்தப்பட்டது. இந்த காசநோய் விழிப்புச் செயற்பாட்டு நிகழ்விலேயே யமுனானந்தா கௌரவிக்கப்பட்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி த.குகதாசன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.சிவராணி, சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். பிரதேச ஆரம்ப சுகாதாரக் குழுக்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ். மாவட்டத்தில் காசநோய் தடுப்பு நடவடிக்கையில் நீண்ட காலமாகச் சிறந்த பணியாற்றியமைக்காக வைத்தியகலாநிதி செ.யமுனானந்தாவுக்கு தென்மராட்சி பிரதேச மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-9)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இல்லாமல் போய்விட்ட சமூகப் பாதுகாப்பு

போர் முடிந்த பின்னர் வடக்கில் எது அதிகரித்திருக்கிறதோ இல்லையோ கொள்ளை, களவு, போதைப் பாவனை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எல்லாமும் அதிகரித்திருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த கணுக்கேணியில் கடந்த சனிக்கிழமை அதிகாலையில் பெரும் களவு இடம்பெற்றுள்ளது. அங்கிருந்த ஐம்பொன் சிலைகளைச் சிலர் திருடிச் சென்றிருக்கிறார்கள். அவற்றின் மதிப்பு 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் இத்தகைய களவைப் பற்றி ஒருவர்கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது. அப்போதும் அந்த மாவட்டத்தில் வறுமையும் துன்பமும் தாண்டவமாடின. பொருளாதாரத் தடைகளையும் வருமானத்துக்கு வழியில்லாத நிலையையும் மக்கள் எதிர்கொண்டபோதும் கொள்ளையிடுவதற்கோ திருடுவதற்கோ அங்கே எவருக்கும் துணிவு இருக்கவில்லை. ஏனெனில் நிர்வாகம் நேர் சீராக இருந்தது. எப்படித் திருடினாலும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் [அது நடந்ததோ இல்லையோ] என்ற நம்பிக்கையும் பயமும் இருந்தது. போர் சிதைத்துப் போன மிக முக்கிய விடயங்களில் தமிழ் மக்களின் இந்த சமூகப் பாதுகாப்பு முக்கியமானது.

மூன்று வருடங்களின் முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நேரடியாகவும் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லாத – இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் – தமிழ்ப் பகுதிகளில் நிழலாகவும் இந்தச் சமூகப் பாதுகாப்புப் படிந்திருந்தது. அவர்களின் நீதி நிர்வாகப் பரிபாலனம் சரி பிழை என்பதற்கு அப்பால் புலிகள் மீதிருந்த பயம் மற்றும் அவர்களின் புலன் விசாரணையின் மீதிருந்த நம்பிக்கை என்பன மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பை வழங்கியிருந்தன.

அப்போதும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சம்பவங்கள் இடம்பெறத்தான் செய்தன. உலகம் முழுவதும் குற்றங்களை அடியோடு ஒழித்துவிட முடியாது என்ற நியதியின்பாற்பட்டது அது. ஆனால், இன்றோ தமிழ்ப் பகுதிகளில் இலங்கை நாட்டின் சட்டமும் நீதியும் முழுமையாகப் பரிபாலனம் நடத்துகின்றன. அதுவும் தவிர தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு எனக் கூறிக்கொண்டு, நாட்டின் ஏனைய எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மேலாக சொற்ப அளவில் தமிழர்களையும் உள்ளடக்கிய பொலிஸாரும் கடமையில் இருக்கிறார்கள். ஆனால் சமூகப் பாதுகாப்புக் கேள்விக் குறியாகிவிட்டது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் எந்தப் பயமும் நம்பிக்கையும் சமூகக் குற்றங்களைக் குறைத்தனவோ அது இல்லாமல் போனமை முக்கிய காரணம். எப்படிக் குற்றம் செய்தாலும் இலங்கைப் பொலிஸார் தம்மைக் கண்டறியவோ பிடிக்கவோ போவதில்லை என்ற குற்றவாளிகளின் நம்பிக்கை மற்றொரு காரணம். அப்படியே பிடித்தாலும் பணம் மற்றும் அரசியல் செல்வாக்கின் மூலமும் சட்டத்திலுள்ள ஓட்டைகளையும் பணத்துக்காக எதையும் பேசும் சட்டத்தரணிகளையும் கொண்டு எப்படியும் தண்டனையில் இருந்து தப்பிவிட முடியும் என்ற பயமின்மை மற்றொரு காரணம்.

எல்லாவற்றுக்கும் மேலாக சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸார் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடந்துகொள்கிறார்கள் என்ற மக்களின் நம்பிக்கை மிகப் பெரிய காரணம். இவற்றை நிவர்த்தி செய்யாதவரைக்கும் மூன்றாண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமை திரும்பப்போவதில்லை. தமிழ் மக்களின் சமூகப் பாதுகாப்பு கேள்வியாகவே தொடரப்போகிறது.

# கொன்றவனையும் கொண்டாடுவான் தமிழன்

■ செந்தூரி

நிற வேற்றுமையில் அவர்களுக்கும் எங்களுக்கும் ஏணி கட்டினாலும் எட்டப்போவதேயில்லை. எம்மை நூற்றாண்டுகளுக்கு மேலாய் அடக்கியாண்ட அதிகாரத் திமிரை இன்னமும் கொஞ்சம் மிச்சம் வைத்து கீழ்ப் பார்வை பார்த்து இமைகளை சுருக்கிப் பேசும் உடல்மொழிக்குரியவர்கள் தோல் வர்ணம் மட்டுமின்றி, தமது வாழ்க்கை முறையில்கூட, தூய்மை கலந்த வெண்மை மிடுக்கைக் கவனிப்பவர்கள் என்ற தன்மிதப்பை கொண்ட ஐரோப்பியர்களின் கண்களிலும்கூடக் கொஞ்சமும் பொய் கலவாத கண்ணீர்த் துளிகளை வரவழைத்த காட்சிகள் அகலத் திரைகளில் ''சாவின் பயங்கரத்தை'' இலவச விநியோகம் செய்து கொண்டிருக்கின்றன.

ஈழத் தமிழனின் கொடூர இறுதி நிமிடங்கள், கொஞ்சமும் சம்பந்தமே இல்லாத வேற்றினத்தவன் மனதையும் கரைத்துருக்கி, விழிவழியே ஒழுகுகின்ற நீர்த்துளிகளின் சாட்சியோடு, உலகத்தின் நீதித்தட்டுகளின் முன் இலங்கையின் ஆட்சியாளர்களை தோலுரித்துக் கொண்டிருந்தன.

தன் மாமனை, தனது அண்ணனை, தனது தங்கையை உயிரற்ற உடல்களான பின்னும், ''மனிதாபிமானத்தை மறுகரத்தில் ஏந்தியவர்கள்'' கால்களால் எத்தி விளையாடுவதை உலகிடம் காட்சிப்படுத்திவிட்டு, இலங்கைத் தமிழன் - ஈழத் தமிழன் - தீவிர வேலைப்பளுவோடு எங்கிருந்தான்?

அதே, ''மனிதாபிமானச் சூரர்களின்'' மறுகரத்தில் கொலையாயுதங்கள் தாங்கிய சாகசக் கண்காட்சி வெளியில், சிங்கள மங்கையரின் வீரதீரங்களுக்கு விசிலடித்தபடி நின்றிருந்தான் யாழ்ப்பாணத்துத் தமிழன்.

ஆட்சியாளர்களின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவோ, அரச அதிகாரிகள் மற்றும் அரச அலுவலர்களின் கட்டாய வருகையை வேண்டி விரும்பி நிரப்புவதாகவோ, தமிழனின் கவனத்தை இன்னொரு இலக்குக்கு ஈர்ப்பதாகவோ எண்ணற்ற நோக்கங்களைக் கொண்ட தேவைகள் இந்தக் கண்காட்சிக்கு நிறையவே இருந்திருக்கின்றன.

அதுவும் இலங்கை இராணுவ ஆளணியினரின் 'தொழில் நுட்ப', 'உடல்நுட்ப', 'போரியல் நுட்ப' சாகசங்களை வெளிப்படுத்தும் 'காலத் தேவை'யும், 'இடத்தேவை'யும், 'பொருள்தேவை'யும்கூட இன்னொரு 'நோக்கத்தை' பூடகமாகக் கொண்டதே!

''போர்க் குற்றங்களின் எய்து கருவிகளாக நின்று, மனித குலத்துக்கு எதிரான நாகரிகமற்ற இழி செயல்கள் மூலம் தமது மேலதிகாரிகளின் சொல்லசைவுகளை செயற்படுத்திய, ஆயுதப்படை உறுப்பினர்களைப் பற்றிய கதாநாயக விம்பம் ஒன்றை, இலகுவில் எடுபடுகின்ற இயல்புக்குரிய தமிழ் இளசுகள் மத்தியில் தாராளமயமாக்குவது அதில் ஒன்று.

படையினரைச் சூழலிடமாகக் கொண்டு திரும்புகின்ற போர்க்குற்ற விசாரணைகள், மனிதவுரிமைக் குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றின் மூலம் பெரும்பான்மைச் சமூக மக்கள் மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்ப்பலைகளைச் சமாளிக்கும் விதமாக, ''கொடுமைகளுக்கு ஆளானவர்கள்'' என உலகினரால் பரிதாபத்துடன் நோக்கப்படுகின்ற தமிழ்ச் சமூக மக்கள் பெருந்திரளாகக் கூடி கைதட்டி ஆரவாரிக்கும் மாயத்தை மறுத்தான் எறிவதாக ஒருபோதும் கொள்ள முடியாது.

நிச்சயமாக எதிர்வுகூற முடியாத நல்லெண்ணமில்லாத உள்ளெண்ணமொன்றை அகம் வைத்துப் புறமொன்று காட்டிய இந்தக் கண்கட்டு வித்தைக்குள் விழுந்ததற்கு ''பிரவேசம் இலவசம்'' என்கிற ஒற்றைக் காரணத்தை மட்டும் சொல்லி ஒதுங்கிவிட முடியுமா?

''பொழுது போக்குத்தானே'' என்பதாய் அலட்சிய பதில்களில் ஏதோவொன்றை மறுமொழிக்கும் கண்காட்சி பார்வையாளர்கள் ஒருவருக்காவது, கொள்கையளவிலாவது ''கொன்றவனின் முற்றம் இது'' ''விலை கொடுத்தாலும் விழி திறந்து பாரோம்'' என்கிற சுரணை முடிச்சுகளில் ஒன்றுகூட சுண்டித் தடுக்காத மர்மம்தான் என்ன?

''வெற்றுப் பார்வைகளால், பார்த்துவிட்டு வருவதால், என்ன வீரம் குறைந்தது?'' என வினாவும் இன்னுமொரு வகைக்குரியவர்களின் பின்னால், ''பள்ளிப்பாலகர்களாக'', ''பருவ விடலையர்களாக'' அழைத்து வரப்படுகின்ற, உண்மை முகமறியாத நாளைய விதைகளின் ஆழ் எண்ணங்களில் விஷத்துளி வீழ்வதை எப்படி அனுமதித்தோம்?

இதே ஆயுதப் படையினரின் அட்டகாசங்களை அனுபவித்திராத, ஆனால் சிறிதளவான வாய்மொழி அறிவினை செவிவழியாக மட்டுமே கொண்டுள்ள 96 இற்கு பிறகானவர்களே இன்றைய பதின்ம வயதினர்.

யாழ்ப்பாண இடம் பெயர்வின் போது கைக்குழந்தைகளாக, மீண்டு வந்த இதே பிள்ளைகளின் கிட்டத்தட்டவான அரை/முழுச் சொகுசு வாழ்க்கை முறையானது, ''விடுதலைப் போராட்டம்'', ''தமிழ்த் தேசிய உணர்வு'', ''இனவிசுவாசம்'' போன்றவற்றிற்கு இடமளிக்கச் சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவே.

இந்த வகையிலான, மந்தமான கடந்த கால அரசியல் அறிவினைக் கொண்டவர்களிடம், பார்வைப் புலங்களின் மூலம் ஊட்டப்படுகின்ற அரச ஆயுதச் சார்புச் சிந்தனைகள், அவர்களை தேசியப் பாதுகாப்புப் படை உறுப்பினர்களாகவோ, பொலிஸ் தேர்வு விருப்ப நாடிகளாகவோ, முப்படை அங்கத்தவர்களாகவோ வெகு சுலபத்தில் மாற்றி விடும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லைத் தானே?

''பழிவாங்கும் இன்னுமொரு இளமினத்தை வளர்த்துவிடக்கூடாது'' என்கின்ற சமத்துவ மிதப்பெண்ணம், குறிதவறிப் போய் கற்ற பாடங்களையும், பெற்ற காயங்களையும் வெகு சீக்கிரம் மறந்து போகின்ற மரத்த அடிமைச் சமூகமொன்று உருவாவதற்கு இடமளிக்கலாமா?

வன்னி மண்ணில் வாழும் சாட்சிகளாக, இன்னமும் தம் இறுதிக் கணங்களை மிக அருகில் கண்டு திரும்பிய மறுபிறவிக்குரிய அதிசயங்களாக, உயிர் சுமந்து திரியும் ஊமை மனிதர்களை அங்கமாகக் கொண்ட அதே சமூகம் தான், தன் னிருப்பைக் கேள்விக் குறியாக்கியவனின் வெடிபொருள்களை வேடிக்கை பார்க்க, எள்ளிடுவதற்கு இடமின்றி முண்டியடித்த பெருமைக்குரியவர்கள் என்பதை எந்தச் சொற்களால் விவரிக்க?

அங்கே சாகசக் குழுவில் அங்கம் வகித்த பெரும்பான்மை இன இளைஞனின் மனக்குமுறல்களில் ஒலித்த, ''இவர்களைத்தானே நேற்று கைகளைப் பிணைத்து, மண்டியிட்டிருத்தி பின் தலை சிதறச் சுட்டோம், எப்படி இன்று இங்கே....?'' என்ற கற்பனைகளையாவது மொழிபெயர்க்கும் மனவலு ஏன் குன்றிப் போனது எம்மிடம்?

அம்மணச் சாவின் அவலங்களைத் தான், விடுவோமே! முகமாலை முதல் மாவிலாறு வரை என்னினம் பீடுகொண்டு வீற்றிருத்த நாளில், ஊடறுக்க நினைத்து உலகப் படைக் குழுமங்களை ஒட்டுமொத்தமாய் இதய பூமிக்குள் இறக்கி இயந்திரக் குழல்களோடு அரச இயந்திரம், அப்பாவிகள் மீது அவலத்தை ஏவிவிட்ட நாள்களில், பலாலியிலிருந்து அணி வகுத்துப் புறப்பட்ட ஆயுதம் தாங்கிய வாகனத் தொடரணிகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் ஏற்பாடுகளை எப்படி மறப்போம்?

அவசர நோயாளிகளை, கர்ப்பிணிப் பெண்களை, தாங்கிய அவசர வாகனங்களுக்குக்கூட வழிவிடாத, பாதைத் தடைகளை எம் வீதிகளின் குறுக்கே ஏற்படுத்தி, பல மணிக்கணக்கில், எம் கடிகார முட்களை இறுக்கிப் பிடித்து நிறுத்தி இயல்பு வாழ்க்கையின் மீது வலிந்த இறுக்கத்தை ஏற்படுத்தியதையும் மறந்தோமே?

எம் மக்களால் அணுகக்கூட, ஏன் எட்டிப்பார்க்கக்கூட தடைவிதிக்கப்பட்ட கனரக வாகனங்களும் கந்தகம் கக்கும் அழிவாயுதங்களும், முகம் மறைத்த அதிபயங்கர வீரர்களும் இன்று மட்டும் காட்சிப் பொருள்களாக எம்முன் நிறுத்தப்பட்டபோது, என்னினிய தமிழினம் எல்லாவற்றையும் மறந்து மன்னித்தருளிய பெருமை எப்படிச் சாத்தியம்?

''பற்றியெரிவான்கள்'', ''நாசமறுப்பான்கள்'', ''குறுக்கால போவாங்கள்'', என்று 'கொன்வே' நேரங்களில் அடிவயிற்றுச் சாபங்களால் தூற்றிய அதே நாவுகள், ''இதுவன்றோ சாகசம்'', ''என்ன புதுமை'' என்று வியந்து போற்றிய வேடிக்கை, இங்குதானே - இங்கு மட்டும்தானே - நடந்தது.

பல்கலைக்கழகத்தின் சகல பீடத்து மாணவர்களும் கடும் வியர்வை சிந்தி உருவாக்கிய புதுமைகளால் நிரப்பப்பட்ட கல்விக் கண்காட்சிக்கு எம் பிள்ளைகளை அழைத்துப் போகும் ஆர்வம், எப்போதும் ஏதாவதொரு நொண்டிச் சாட்டுகளால் முடமாக்கி வீழ்த்தப்பட்டதே போயொழிந்த நாள்களின் கதை.

அறிவுப் பசி தீர்க்கும் பாடவிதானத்தை தழுவிய காட்சி மன்றங்கள் மீதும், பொருண்மியப் புதுமைகளை விதைக்கும் உற்பத்திப் பொருள்காட்சிகள் மீதும், ஏற்படுத்த முடியாத ''இழுவை'', ''பிரவேசம் இலவசம்'' என திறந்து விடப்பட்ட ''ரெஜிமெண்ட்'' பனர்களினால் சாத்தியமானது எப்படியென்பது, இலகுவில் பதிலளித்துவிட முடியாத எம் முன்னாலுள்ள கேள்வி.

வீழ்ந்ததுகூட வலிக்கவில்லையடா, வீழ்த்தப்பட்ட வஞ்சகத்தையும், வீழ்த்தியென்னினத்தை மீளாத் துயரத்தினுள் ஆழ்த்தியவனின் அற்பத்தையும், நாமே ஆராதிக்கும் அழகினைப் பார்த்தபோதுதான் நெஞ்சம் வெடித்ததடா.

''விதியே! விதியே! என் செய்யத் துணிந்தாய் என் தமிழ்ச்சாதியை?'' என்று வெறுவாய் புலம்புவதை விட வேறென்ன வழி எனக்கு? ✱

# கல்முனையின் அபிவிருத்திக்கு...

நானா

கல்முனையைச் சேர்ந்தவர்கள் தம்மை எங்காவது அறிமுகப்படுத்தப் போனால், அவர்களிடம் முதலில் கேட்கப்படுவது "நீங்கள் அஷ்ரப்பின் ஊரா?'' என்றுதான்.

''நீங்கள் அஷ்ரப்பின் ஊரா?'' என்பதில் பல அர்த்தங்கள் தொக்கி நிற்கின்றன. அஷ்ரப்பால் கல்முனை பெருமைப்பட்டது என்பது ஒன்று. மற்றது அஷ்ரப்பின் பிரதேசம் நன்கு அபிவிருத்தி கண்டிருக்கும் என்பது.

கல்முனைத் தொகுதியை பலர் ஆட்சி செய்தார்கள்; செய்து கொண்டுமிருக்கிறார்கள். எம்.எஸ்.காரியப்பர், எம்.சி.அஹமது, ஏ.ஆர்.எம்.மன்சூர், எம்.எச்.எம்.அஷ்ரப், பேரியல் அஷ்ரப், ரவூப் ஹக்கீம், மயோன் முஸ்தபா, எச்.எம்.எம்.ஹரீஸ் என அந்தப் பட்டியல் நீண்டது.

மேற்படி கல்முனை ஆட்சியாளர் பட்டியலிலுள்ள முதல் நான்கு பேரும் தனித்து நின்று கல்முனையை ஆட்சி செய்தவர்கள். கல்முனையின் அசைக்க முடியாத ராஜாவாக முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூர் ஒரு காலத்தில் திகழ்ந்தார். வர்த்தக, வாணிப, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராகவும் கோலோச்சினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சியில் மிகப்பெரும் செல்வாக்குமிக்க அமைச்சராக விளங்கியவர் மன்சூர். பிரேமதாசவின் நம்பிக்கைக்குரிய பிரமுகர். மன்சூர் நினைத்தால் எதுவும் நடக்கும். என்றெல்லாம் அவரை அன்றும் விளித்தார்கள்; இன்றும் சிலர் விளிக்கிறார்கள்.

கல்முனை தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்கு அயராது பாடுபட்ட ஓர் உன்னத மனிதன் அவர் என்று கூறுவது ஒருபோதும் பொய்யாகாது. தமிழ் சமூகத்தினரால் உயர் கௌரவத்தில் வைத்துப் பார்க்கப்பட்டவர். அவரது அரசியல் ஆட்சியில் பகைமையும் இருக்கவில்லை; எதிர்ப்பு அரசியல் செய்ய எவரும் இருக்கவுமில்லை; அவரது அரசியல் செயற்பாடுகளுக்கு தமிழ் மக்களும் எதிர்ப்புக் காட்டவுமில்லை.

ஆனால், அவரின் கோட்டையாகத் திகழ்ந்த கல்முனை நகரையும், கல்முனைத் தொகுதியையும் இப்போது பாருங்கள்..... அவருக்குப் பின்னர் எந்தவொரு முன்னேற்றத்தையும் காணாத கல்முனையைத்தான் இன்று நீங்கள் பார்க்க



முடியும்.

கல்முனையில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியவர் மன்சூர்தான். பொது நூலகம், பஸ் நிலையம், வைத்தியசாலை, தொழில் வாய்ப்பு என்றெல்லாம் செய்தவர். அத்தனையையும் தனது சொந்த ஊரான கல்முனைக் குடியை அடிப்படையாக வைத்தே மேற்கொண்டார் என்பது வேறு கதை.

இவருக்குப் பின்னர் கல்முனைத் தொகுதியின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர்தான் மு.கா ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்.

பெரும் செல்வாக்குடனும், உயர் அதிகாரமிக்க அமைச்சுக்களுடனும் பவனி வந்தவர் மர்ஹூம் அஷ்ரப். ஆனால், கல்முனைக்கு இவர் என்ன செய்தார்? முஸ்லிம் உரிமைக் கோஷம் எழுப்பிக் கல்முனையில் காலம் காலமாக இருந்து வந்த தமிழ், முஸ்லிம் உறவை பிரித்ததைத் தவிர வேறு என்னதான் கல்முனைக்குச் செய்தார் மர்ஹூம் அஷ்ரப்?

முஸ்லிம் சமூகத்துக்காக அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றியது என்னமோ உண்மைதான். ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, துறைமுகத்தில் வேலைவாய்ப்பு என்றெல்லாம் அஷ்ரப் செய்தது சேவையில்லையா? என்று ஒரு மாயைக்குள் சிக்கியவர்களாக கல்முனை முஸ்லிம்கள் கொதித்தெழுவார்களாயின் அது அவர்களின் மடைமையே அன்றி வேறில்லை.

கல்முனைத் தொகுதி மக்களின் அதிகபட்ச வாக்குகளைப் பெற்று ஒலுவிலை அபிவிருத்தி செய்தார் அஷ்ரப். கல்முனைக்கு என்னதான் செய்தார். கல்முனை தொகுதி முஸ்லிம்களிடம் மு.கா மாயை அதிகம். அந்த மாயயையிலிருந்து விடுபட்டு நின்று பார்த்தால் மட்டுமே கல்முனை நகரின் உண்மை என்னவென்று புரியும்.

மரணமடைந்தவரை அதிகபட்சமாக விமர்சிக்கக் கூடாது என்ற பண்பாட்டுக்கு இணங்க மர்ஹூம் அஷ்ரப் கல்முனைக்கு எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இடைநடுவில் நிறுத்தி, அந்தக் குற்றச்சாட்டை பொதுவான சிந்தனைக்கும், பொது விவாதத்திற்கும் விட்டு வைக்கின்றோம்.

மர்ஹூம் அஷ்ரபின் மரணத்துக்குப் பின்னர் அதிகாரம் கொண்ட அமைச்சராக வந்த திருமதி பேரியல் அஷ்ரப் பதியத்தலாவைக்கும், தெஹியத்தகண்டிக்கும், உகனைக்கும் பல கோடிகளை அள்ளிக் கொட்டினார். கணவன் எவ்வழியோ அவ்வழியே தானும் என்று செயற்பட்ட பேரியல் அஷ்ரப்புக்கும் அதிகளவில் விருப்பு வாக்களித்தவர்கள் கல்முனைத் தொகுதி மக்களே. ஆனால், என்ன நடந்தது ? கல்முனைத் தொகுதி மக்களாலேயே தோற்கடிக்கப்பட்டார். இது உண்மை.

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமும் கல்முனைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டார். கூடுதலான விருப்பு வாக்குளைப் பெற்று அரசியலில் அதியுச்ச அதிகாரங்களுடன் பவனி வந்தார். அவரும் கூட கல்முனைக்கு எதனையும் செய்ய முன்வரவில்லை. அவர் அம்பாறை மாவட்டத்தில் வெற்றி பெற்றிருந்தாலும் அவரது எண்ணமெல்லாம் கண்டியில்தான் இருந்தது.

மு.கா. தலைவர் தன்னிடமிருந்த அமைச்சுப் பலத்தால் என்னவெல்லாம் செய்திருக்கலாம். ஆனால் அப்படி நடக்கவில்லை.

இப்போது கல்முனை நகருக்கு அபிவிருத்தி அவசரமாக வேண்டி இருக்கிறது. மன்சூருக்கு பிற்பாடு கல்முனையைப் பற்றி சிந்திக்கும் ஒருவராக ஹரீஸ் கல்முனைத் தொகுதி மக்கள் பார்ப்பதை அவதானிக்க முடிகிறது. அதிலும் அவர் கல்முனை முதல்வராக இருந்த காலத்தில் அவர் ஆற்றிய அபிவிருத்திப் பணிகள் அவரது நாடாளுமன்ற அங்கத்துவ காலத்துடன் ஒப்பிடுகையில் அதிகமானவை என்பதை அவர் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

கல்முனை அவசரகதியில் அபிவிருத்தியடைய வேண்டியிருக்கும் நிலையில், அதனை ஹரீஸால் மட்டும்தான் இப்போது நிறைவேற்ற முடியும். ஏனெனில் அவர் மட்டும்தான் தற்போது கல்முனைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர். எனவே மீண்டும் கல்முனையின் அதிகாரத்தை அவர் பெறவேண்டும்.

---

மலையக பாரதி

# நம்ம தலைவர்மார் அப்புடி இல்லங்கண்ணே...



மலையகத்தின் ஓர் ஊரின் ஆலமரத் தடியில் உள்ள பண்டா முதலாளியின் கடையில் அன்றும் மக்கள் மன்றம் கூடியது. கடையின் வெளியே அடித்து வைக்கப்பட்டுள்ள பலகை பெஞ்சில் வந்தமர்ந்த கந்தசாமி முதலாளியிடம் பீடி ஒன்றுக்கு உத்தரவு கொடுக்க கருப்பையா ஆரம்பித்தார்...

கருப்பையா: கந்தசாமி வந்துட்டிங்களா. ஒங்களதான் இவ்வொளோ நேரொ பாத்துகிட்டு இருந்தோம். இன்னக்கி என்னா விஷியொம்..... சூடா இருக்கு.

கந்தசாமி: இன்னக்கி நெறய விஷியொம் இருக்கு. நம்ம தலைவர் ஒருத்தருவுட்டு பொறந்த நாள் கதையெல்லாம் இருக்கு.

கருப்பையா: அப்ப இன்னக்கி நம்ம கேக்கு, பிஸ்கட் விருந்தோட தொடங்க வேண்டியதுதான். நீங்க ஆரம்பிங்க கந்தசாமி.

கந்தசாமி: நம்ம மலையகத்துல லயத்து காம்புறாவுல இருந்த ஒருத்தர் அவருவூட்டு பொறந்தநாள கொழும்புல ஒரு பெரிய ஹோட்டல்ல ஆடம்பரமா கொண்டாடி இருக்காராம்.

பழனியாண்டி: அரசியல்வாதின்னா அப்புடிதாய்யா. நாலு பெரிய மனுசெங்களோட பழக்கொ இருக்கும். அவுங்கள நல்லா கவுனிக்கனும்னா அந்த மாதிரி பெரிய பெரிய எடங்கல்லதான் பாட்டிகள நடத்தனும். இதெல்லாம் ஒரு சின்ன விஷியம். இதப்பொயிட்டு பெருசா பேசுரிங்களே...

கருப்பையா: என்னா அப்புடி சொல்லிபுட்டிங்க. நம்ம இங்க எவ்வளோ கஷ்டபட்டுகிட்டு, நம்ம புள்ளங்க பொறந்த நாளுக்கு ஆசக்கிகூட ஒரு கேக்கு வெட்டி சாப்புட முடியாம இருக்கோம். கேக்கு வெட்ற நெலமயிலயா நம்மல வச்சிருக்காங்க. இதுல இவிங்களுக்கு பாட்டி கேக்குதாமோ.

கந்தசாமி: அத சொல்லுங்க கருப்பையா. அங்க நடந்த பாட்டியில முக்கியமான பெரிய மனுசெங்கெல்லாம் கலந்திருக்காங்க. இதுல முக்கியமான விஷியம் என்னான்னா... அந்த பாட்டில பொம்பலெங்கதான் வந்தவுங்கல கவுனிச்சிருக்காங்க. அப்ப நம்ம தலைவெங்களு சொல்லியா குடுக்கனும். ஒரே கூத்தும் கும்மாளமா அசத்திட்டாங்களாம்.

பழனியாண்டி: நம்மலுக்காகவே அவுங்க நாள்பூரா எவ்வளவோ கஷ்டபடுறாங்க. அவுங்களுக்காக கொஞ்ஜொ சந்தோசமா இருக்கட்டுமே. அவுங்க விஷியத்தயும் அவுங்க அடிக்கடி பாத்துக்க வேணுந்தானே.

கருப்பையா: ஆம்மாய்யா இந்த மாரி பொம்பலங்கல வச்சி குடிச்சி கூத்தடிச்சிகிட்டு இருக்கதுதான் அவுங்களுக்கு சொகமோ. அந்தப் பாட்டிக்கு செலவழிச்ச சல்லிய நம்ம புல்லெங்கவுட்டு படிப்புக்கு குடுத்திருந்தா பொறயோசனமா இருந்திருக்கும். இதெல்லாம் நம்மவுட்டு சல்லிதானேய்யா. ஐயோ! கடவுளே! நம்ம சல்லியெல்லாம் தண்ணியா கரஞ்சி போகுதே.

கந்தசாமி: இந்த அரசியல்வாதிங்கெல்லாம் இந்த மாதிரி செஞ்சிகிட்டு இருந்தாங்கனா நம்ம நெலம என்னாகுறது.

கருப்பையா: அத சொல்லுங்க கந்தசாமி. நாட்ல என்னதா அரசியல் மாற்றொம் நடந்தாலும் நமக்கு ஒரு விடிவு காலம் பொறக்குற மாதிரி இல்ல. நம்ம 'தல விதிய' மாத்துறதுக்கு ஒரு நல்லவரு, வல்லவரு நாலுந் தெரிஞ்சவரு எப்ப வருவாருனு யோசிச்சிகிட்டு இருந்தேன்.

பழனியாண்டி: அந்த கவலய விடுங்க கருப்பையா. வந்துட்டாரு..... அதுக்கு ஒருத்தர் வந்துட்டாரு..... தன்னோட குடும்பமே மலையக மக்களுக்கு சேவ செய்யனுன்ற நல்ல எண்ணத்தோட நம்ம பெரியதலெங்கல்ல ஒருத்தர் அவரு வூட்டு மகனையும் அரசியலுக்கு கொண்டுவரப்போராரு...

கந்தசாமி: என்னா சொல்றிங்க பழனி. புதுசா ஒருத்தர் அரசியலுக்கு வரப்போராரா?

பழனியாண்டி: ஆமா கந்தசாமி. அந்த தலயோட அடுத்த தலமுறையு...ம் அரசியலுக்கு வரப்போகுது. இனி ரெண்டு பேருமா சேந்து மலையகத்துல ஒரு புது புரட்சியே பண்ணுவாங்க. நமக்கு இனி விடிவுகாலொந்தா...ன்

கந்தசாமி: அவரு மலையகத்து மக்களோட எதிர்காலத்த மாத்தனுனு நெனச்சி அவருவுட்டு மகன அரசியலுக்கு கொண்டு வர்ராரா, இல்ல அவரோட மகனுக்கு நல்ல எதிர்காலொ அமையனுன்னு நெனக்கிராரா தெரியல.

கந்தசாமி: அத நெனச்சாதாய்யா பயமா இருக்கு. மலையகத்துக்கு அவரு சேவ செஞ்சு கிழிச்சிட்டாரு. இப்ப அவருவுட்டு மகெ வேற. இத சொல்லித் தானேயா இந்த அரசியல் வாதிங்க நம்மல ஏமாத்தி வாழ்றானுங்க. ஆகமொத்தொ "புள்ள சாக்குல பூதொந் தின்ன கதத..தா".

பழனியாண்டி: ஆமாய்யா ஒங்களுக்கு எத செஞ்சாலும் இல்ல இல்லனு அவுங்கள பத்தி கொற சொல்லிகிட்டே தான் இருப்பிங்க. நம்ம தலைவெங்கள நம்ம எப்புடியா விட்டுகொடுக்க முடியும். ஐயாவு, மகனு நமக்கு நல்ல சேவ செய்வாங்கன்ற நம்பிக்க இருக்கு. நம்பிக்கதாய்யா வாழ்க்க.

கந்தசாமி: இப்ப நம்ம நாட்ல குடும்ப ஆட்சி நடக்குதுனு பேசிக்கிறானுங்க. இது ஒன்னு பத்தாதுன்னு நம்ம மலையகத்துலயுமா? அப்ப இனி நம்ம கெதி அதோ கெதிதான்.

கருப்பையா: சரி சரி அந்த கதய விடுங்கப்பா. என்னா செய்ய எல்லா...ம் படத்துல வர்ர மாதிரியே நடக்குது. ஒன்னுமே புரிய மாட்டிங்கிது.

கந்தசாமி: படொனு சொல்லவுதான் எனக்கு ஞாவகத்துக்கு வருது. ஜெனிவாவுல என்னமோ 'செனல் 4' னு படொ ஒன்னு காட்டிருக்காங்களாமே அத யாராவது பாத்திங்களா?

கருப்பையா: அட நீங்க போங்க கந்தசாமி. இங்க நம்ம தலைவெங்க காட்ற படத்தையே பாக்குறதுக்கு நேரொல்ல. இதுல எங்க ஜெனிவாவுக்கு.

பழனியாண்டி: என்னாப்பா எல்லாம் புதுசு புதுசா இருக்கே. இப்பதான் என்னம்மோ '3' படொனு சொல்லிகிட்டு இருக்காணுங்க அதுக்குல்ல '4' வந்திருச்சா?

கந்தசாமி: செனல் 4 னு சொல்றது. நம்ம நாட்டுல நடந்த சண்டயில என்னா குத்தொ...ம் நடந்திச்சின்றத காட்றதுதானாம்.

கருப்பையா: சண்டன்னு சொன்னா இனி நம்ம ஆளுங்க செத்தத தான் காட்டுவாங்க. அந்த பயங்கரமான சம்பவங்கள பாக்கத் தான் முடியுமா. நெனச்சிப் பாக்கவே மனசுக்கு கஷ்டமா இருக்கு.

பழனியாண்டி: ஐயையோ..... நீங்க சொல்றத கேக்கவே ஏன் கண்ணெல்லாம் கலங்குதே. அந்த படத்த எப்புடியா பாக்குறது.

கந்தசாமி: அவுங்க சண்டன்னு ஒன்னு நடந்தனால கஷ்டப்பட்டாங்க. ஆனா நம்ம அப்புடி ஒன்னு நடக்காமலே இந்த மாதிரி கஷ்டப்படுறமே.

கருப்பையா: சரியா சொன்னிங்க கந்தசாமி. அவுங்கள பாத்துகிறதுக்கு சரி புலம்பெயர்ந்த தமிழர்கள், மத்த நிறுவனங்கள்னு எல்லாரும் இருக்காங்க. அந்த ஆளுங்களுக்காக அவுங்க பேசுறாங்க. நம்மல பத்தி கவல படுறதுக்கும், அக்கறபடுறதுக்கும் யாரு இருக்கா. நம்ம நெலமய நெனச்சி நம்மலே நொந்துக்கிற வேண்டியதான்.

# தன்னைத்தானே நம்பாது சந்தேகம்

யார் சந்தேகப்படுகிறார்கள்? வாழ்வையே ஒரு லாப, நஷ்ட வியாபாரமாக நினைப்பவர்கள், நஷ்டப்பட்டு விடக்கூடாதே என்கிற பயத்தில்தான் சந்தேகப்படுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் சந்தேகப்படுவது லாபம் தருவதாக இருப்பதால் நாம் தொடர்ந்து சந்தேகப்படுகிறோம். இதில் அசிங்கம் என்ன தெரியுமா? யாரை வேண்டுமானாலும் (கடவுள் உட்பட) சந்தேகப்படுகிறோம். நமது அளவுக்கதிகமான பாதுகாப்புணர்ச்சி, நம்மை யாரும் ஏமாற்றிவிடக்கூடாதே என்கிற எச்சரிக்கை உணர்வு, இவை காரணமாக நாம் ஓயாமல் சந்தேகப்படுகிறோம். ஆனால் சந்தேகம் எந்தக் காரியத்தையும் மனப்பூர்வமாகச் செய்ய நம்மை அனுமதிப்பதே இல்லை. சந்தேகம் என்ற ஒரு சிறு பகுதி, நம் முடிவுக்கு எதிரான உணர்வுடன் கலகம் செய்யக் காத்திருக்கும் கும்பலைப் போல் நமக்குள்ளேயே போதை ஏற்றிக் காத்திருக்கிறது. அதனால் நிம்மதி போய் விடுகிறது. சந்தேகப்படுகிறவரை ஒருவர் ஏமாற்றி விட முடியாது என்ற ஒரேயொரு இலாபம் இருந்தாலும் அந்த இலாபத்தை விட அதிக விலை கொடுக்கிறார். நிம்மதியை இழந்து...

சந்தேகப் பிராணிகள் விரைவில் மனநல மருத்துவ மையம் சேர்கிறார்கள். என்றாலும் சந்தேகம் நிற்பதே இல்லை. சந்தேகம் உள்ளவன் தன் கை விரலை அடிக்கடி தானே எண்ணிப் பார்த்துக் கொள்கிறான் என்று ஒரு பழமொழி இருக்கிறது.

யேசுபிரான் வாழ்வில் ஒரு சம்பவம்... கலிலி ஏரியைக் கடந்து செல்லும்போது சீடர்கள் முன்னால் படகுகளில் செல்கிறார்கள். பின்னால் வருகிற யேசு ஏரி மீது நடந்து வருகிறார். சீடர்கள் திகைப்பும் குழப்பமும் அடைகிறார்கள். இது ஏதோ தீய சக்தியோ என்று கூட அஞ்சுகிறார்கள். ஒரு சீடன் மட்டும் துணிவுடன் " இயேசுவே... நீங்கள் இவ்வாறு நீரில் நடக்க முடியும் என்றால் என்னால் ஏன் முடியாது? என்று சந்தேகப்பட்டான். இது சாத்தானின் தந்திரமோ என்று கூடப் பயந்தான். அந்தக் கணமே அவன் நீரில் மூழ்கத் தொடங்கினான். அப்போது யேசு அவனை நோக்கி " ஏ... அற்ப விசுவாசியே... எதற்காகச் சந்தேகம் அடைந்தாய்? நீ நடந்தாய் என்பதை நீயே அறிவாய்... அதன் பின்னும் சந்தேகமா?" என்று கடிந்து கொள்கிறார்.

ஓஷோ கவித்துவமாக இதுபற்றி பேசுகிறார். " நீங்கள் இதைக் கவனித்திருக்கிறீர்களா? நீங்கள் நதியை நம்பினால், மிதக்கலாம். எந்தக் கணத்தில் உங்கள் நம்பிக்கையை இழக்கிறீர்களோ, அப்பொழுது நீங்கள் மூழ்கத் தொடங்குகிறீர்கள். நீங்கள் நம்பினால், நதி, தன் கையில் ஏந்திக் கொள்கிறது. நீங்கள் பயந்துவிட்டால், நீங்கள் மூழ்கத் தொடங்குகிறீர்கள். அதனால்தான் இறந்த உடல்கள் தண்ணீரின் மேற்பரப்பில் மிதக்கத் தொடங்குகின்றன. ஏனென்றால் இறந்த உடல்கள் பயப்பட முடியாது. உயிரோடு இருந்தபோது, அதே நபர்கள் நதிக்குள் சென்று மூழ்கிவிட்டனர். இறந்தபொழுது, அவர்களின் உடல்கள் மேற்பரப்புக்கு வருகின்றன; தண்ணீர்ப் பரப்பிலேயே மிதக்கத் தொடங்குகின்றன.


இறந்த மனிதனுக்கு ஏதோ ஒரு ரகசியம் தெரிந்திருக்க வேண்டும். அந்த ரகசியம் இதுதான். அவனால் சந்தேகப்பட முடியாது. நீச்சல் தெரிந்தவருக்கும், நீச்சல் தெரியாதவருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் அதிகமில்லை. நீச்சல் தெரிந்தவர் எப்படி நம்புவது என்று கற்றுக் கொண்டிருக்கிறார். நீச்சல் தெரியாதவர் எப்படி நம்புவது என்று இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

இருவரும் சமம்தான். நீந்தத் தெரியாதவர் ஆற்றில் விழும்போது நதி அவரை மூழ்கடிக்கப் போகிறது என்று பயம் கொள்ளத் தொடங்குகிறார். உண்மையில் நதி பிறகே அவரை மூழ்கடிக்கிறது. தன் சந்தேகத்தால் தானே மூழ்கடித்துக் கொள்கிறார். நதி எதுவுமே செய்யவில்லை. நீச்சலாளர் நதியை அறிகிறார். நதி வழிகளை அறிகிறார். பல தடவைகள் அவர் நதியோடு இருந்து கொண்டிருக்கிறார். அவர் நம்புகிறார். அவர் சும்மா மிதக்கிறார். அவர் அஞ்சவில்லை. வாழ்க்கையும் அப்படியே அதே போலத்தான்." இது ஓஷோவின் செய்தி.

சமய உலகில் பாருங்கள்... பல கோவில்களிலும், குருமார்களிடத்திலும் அதிசயங்கள் அற்புதங்கள் நடந்ததாகச் சொல்லுகிறார்களே அதிசயம் எப்படி நடக்கிறது? கோவில் அல்லது குருமார்களின் சக்தியாலா? இல்லை... பக்தனின் ஆழமான நம்பிக்கை அத்தனை அற்புதங்களையும் நடத்தி வருகிறது. சுவாமியின் சக்தியால் ஒருவன் காப்பாற்றப்பட்டது உண்மை என்றால் எல்லாருமே காப்பாற்றப் பட்டிருக்க வேண்டும். எப்போதுமே காப்பாற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஓர் இரவுவேளை.... ஒரு முறை மலை உச்சியில் இருந்து கால் தடுக்கிக் கீழே விழுந்த ஒருவர் " கடவுளே என்னைக் காப்பாற்று " என்று அலறினார். 'சடசட' என்று கீழே விழுந்த அவர் அதிர்ஷ்டவசமாக ஏதோ ஒரு மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு அந்தரத்தில் தொங்கினார். கண்ணே தெரியாத இருட்டு. இரவு முழுவதும் இப்படியே தொங்க முடியுமா? என்ற பயத்தில் " கடவுளே என்னைக் காப்பாற்றினாய்... ஆனால் முழுதாகக் காப்பாற்றி இருக்கக் கூடாதா... உன்னை நம்பினேனே" என்று வருத்தப்பட்டார். " இப்போதும் ஒன்றும் குடி முழுகி விடவில்லை. நீ என்னை நம்புவது உண்மையானால் உன் இரண்டு கைகளையும் விட்டு விடு" என்றார் கடவுள். " அதற்கு வேறு ஆளைப்பார்" என்றபடி இரவு முழுவதும் தொங்கியபடி குளிரில் விறைத்து செத்துப்போனார் அவர். ஆனால் அவர் கையை விட்டிருந்தாலும் ஒன்றும் ஆகி இருக்காது. காலை வெளிச்சம் வந்தபோது தொங்கிக் கொண்டிருந்த அவர் காலிலிருந்து சரியாக இரண்டடியிலேயே பூமி இருந்தது.

தன்னைத் நம்பாததால் அவருக்கு இந்த நிலைமை.



சுகி.சிவம்

# ஈச்சம்பற்றை அம்மன் என அழைக்கும் கெட்டிலடி ஸ்ரீ மகேஸ்வரி அம்பாள்



லக்ஸ்மன்

சைவமும் தமிழும் கமழும் வேலணை பிரதேசத்தின் கெட்டில் எனும் கிராமத்தில் கடல் வளத்தின் ஊடாக வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு அருள் பாலித்த வண்ணம் அமர்ந்திருப்பவள் ஸ்ரீமகேஸ்வரி அம்பாள். கெட்டில் எனப்படும் அந்தக் கிராமம் தற்சமயம் அம்பிகை நகர் என்று அழைக்கப்படுகின்றது.

அம்பிகை நகருக்கு அண்மித்ததாக உள்ளது புளியங்கூடல். அந்தக் காலங்களில் இந்தக் கிராமப் பகுதிகளில் சனத்தொகை மிகவும் குறை வாகவே இருந் துள்ளது. இதனால் திருவிழாக்களை நடத்த ஆள ணிப் பற்றாக்குறையாகக் காணப்பட்டது. அதனால் மகாமாரி அம்பாளின் ஆலயத்தில் திருவிழாக்களை செய்வதற்காக அதன் அறங்காவலர்கள் அம்பிகை நகரில் இருந்த மக்களைக் கேட்டுக் கொண்டனர். இது ஏற்கப்பட்டு திருவிழாவும் ஒன்று இந்த மக்களால் செய்யப்பட்டு வந்தது. வேலணை பெருங்குளம் உறை முத்துமாரி அம்பாளின் ஆறாம் திருவிழாவும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் ஆறாம் திருவிழாவும் இந்த மக்களின் உறவினர்களாலேயே செய்யப்பட்டு வந்ததால் அம்பாள் ஆலயங்களில் இந்த மக்களுக்கு ஆறாம் திருவிழா கிடைப்பது அம்பாளின் கருணையே என இவர்கள் நம்புகிறார்கள்.

மகாமாரி அம்பாளின் ஆறாம் திருவிழாவை கெட்டில் கிராமத்தைச் சேர்ந்த முன்னோர்களான இராமர் முருகர், திருமதி சிதம்பரம் வேலாகி, வைத்தி அம்பலவியர் ஆகியோர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வந்தனர். எனினும் திருவிழாக் காலங்களில் ஏனைய விழாக்களின் உபயகாரர்கள் அனுபவித்த உரிமைகள் இவர்களுக்கும் கிடைக்கவில்லை. இவர்கள் புறந்தள்ளப்பட்டனர். பணம் எங்களது திருவிழா அவர்களது என்ற நிலையே காணப்பட்டது. அந்தக் காலத்தில் இருந்து வந்த சமூக ஏற்றத் தாழ்வுகளே இதற்குக் காரணம். இதனால் ஆலய அறங்காவலர்களுடன் முரண்பட்டுக் கொண்டு எமது பகுதிக்கென ஒரு அம்பாள் ஆலயத்தை அமைத்து அதிலே மகாமாரி அம்பாளுக்கான திருப்பணிகளை முன்னெடுப்போம் என திடசங்கர்ப்பம் பூண்டு கொண்டனர். இது நடந்தது 1941ஆம் ஆண்டிலாகும். அந்தச் சமயத்தில் சிதம்பரம் வேலாசி மீது அம்பாள் உருக்கொண்டு சில அருள் வாக்குகளைக் கொடுத்ததுடன் அவர் தனது கிராம மான கெட்டிலுக்கு வந்து அவரது சொந்தக் காணி யில் நின்ற வேம்பு மரத்தடியில் அம்பாளை வைத்துத் தொழுமாறு வாக்குக் கொடுக்கப்பட்டதால் புளியங்கூடல் மகாமாரி அம்மனின் திருவுருவப்படம் ஒன்றை வைத்துப் பூசித்து வந்தனர். புளியங்கூடல் மகாமாரி அம்பாளின் எட்டாம் மடையிலன்று இந்தப் படத்துக்கு பொங்கல் செய்து மடை பரவி வெளிமேளத்துடன் வழிவெட்டி வந்தனர்.

மகாமாரி அம்பாளின் ஆறாம் திருவிழாவை கெட்டில் கிராமத்தைச் சேர்ந்த முன்னோர்களான இராமர் முருகர், திருமதி சிதம்பரம் வேலாகி, வைத்தி அம்பலவியர் ஆகியோர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வந்தனர். எனினும் திருவிழாக் காலங்களில் ஏனைய விழாக்களின் உபயகாரர்கள் அனுபவித்த உரிமைகள் இவர்களுக்கும் கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்னர் வைத்தி அம்பலவி ஊர்மக்களின் உதவியுடனும் அயற்கிராம மக்களினது பங்களிப்புடனும் உலவி தோட்டம் என்னும் காணியைப் பெற்று அந்தக் காணியில் ஓலைக் குடிலை அமைத்து அதில் அம்மனை ஸ்தாபனம் செய்து வழி பட்டு வந்தனர். 1943 ஆம் ஆண்டு இது இடம் பெற்றதாக அம்பிகை நகர்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

கற்களும் நெருக்கமாக ஈச்சம் பற்றைகளுமாக இருந்த அந்தக் காணியை எல்லோரும் இணைந்து தினமும் துப்புரவு செய்து வந்தனர். அப்போது அம்பாள் வடிவிலான கல் ஒன்றைக் கண்டெடுத்தனர். இதை ஒரு அதிஷ்ட மாகவும் ஆச்சரியமாகவும் கொண்ட மக்கள் அம்பாளின் மூர்த்திகரம் மகிமையாகவும் சிறப்பாகவும் இருக்கக் கண்டோம் என்றனராம். ஈச்சம் பற்றை அம்மன் என்ற செல்லப் பெயருடன் ஸ்ரீமகேஸ்வரி அம்மன் என்ற பெயரில் ஆலயத்தை வழங்கலாயினர்.

இந்த மக்களின் கோரிக்கைக்கிணங்க 1943 - 1948 வரை வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் இருந்த சைவக்குருக்களான மு.கணபதிப்பிள்ளை ஐயாவும், ஆ.சபாரத்தினம் ஐயாவுமாக தினசரி பூசைகளை மேற்கொண்டு வந்தனர். சிலர் இதனைத் தடுக்க முற்பட்டதாகவும் எனினும் அது கைகூடவில்லை என்றும் அறியப்படுகின்றது.

1948 -1952 ஆம் ஆண்டு வரை இறைவனுக்கான கடமைகள் சீராக இடம் பெறாததால் அந்தக் காலங்களில் பிறந்த குழந்தைகள் (சிசுக்கள்) உயிர் வாழவில்லை என அச்ச மடைந்த மக்கள் மீண்டும் நிதி சேகரித்து ஆலயம் ஒன்றை அமைத்து கரண வாய் குருக்களின் உதவியுடன் அபிஷேகம் செய்து அம்பாளை வழிபடத் தொடங்கினர். அதன் பின்னர் எந்த வித அசம்பாவிதங்களும் நிகழவில்லை என்றும் இறைவனின் அருளால் சிறப்பான வாழ்க்கை கிடைத்ததாகவும் கூறிய முதியோர்களின் கூற்றில் மகிழ்ச்சி தெரிகிறது. 1963 இல் சோமசுந்தரக்குருக்கள் நித்திய பூசைகளை ஏற்று நடத்தி வந்துள்ளார். அவரது முயற்சியிலும் ஆலோசனையின் பேரிலும் ஆலயம் விஸ்தரிக்கப்பட்டது. மக்கள் தமது அன்றாட வருமானத்தில் ஒரு தொகையை மூலஸ்தானம் வெளி மண்டபம் மணிக் கூட்டுக் கோபுரம் என்பவற்றுக்காக வழங்கி அதனைச் செய்து முடித்து சங்காபிஷேகம் செய்து தொடர்ந்து பத்துத் தினங்கள் அலங்காரத் திருவிழாவையும் நடத்தி வந்தனர். பதினொராம் நாளன்று அதிகாலை ஸ்ரீமகேஸ்வரி அம்பாளுக்கு பூந்தண்டிகையில் வைத்து அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் அன்றைய தினம் வழி வெட்டுத் திருவிழா(கடற்கரைக்குச் செல்லுதல்) வும் இடம் பெறும்.

1974 இல்அறங்காவலர் சபை அமைக்கப்பட்டது. இந்தச் சபையின் தலைவராக குழந்தை வேலாயுத பிள்ளையும் க.கதிர்காமு, தவசி நடராசா, சி.கந்தசாமி, ச.முத்துக்குமாரு, க.கனகசபை, கோ.ஐயம் பிள்ளை, க.செல்லையா, நா.சின்னையா ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். முதலாம் பதினொராம் திருவிழாக்கள் கோயில் நிதியில் செய்யப்பட்டு வந்தது. அறங்காவல் சபையினர் கோயில் வேலைகளைப் பூர்த்தி செய்து 15.8.1974 இல் மகாகும்பாபிஷேகத்தையும் சிறப்பாகச் செய்து உரிய காலங்களில் விசேட அபிஷேகங்களம் நடைபெற்று வந்துள்ளது.

1991ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடப் பெயர்வுகள் ஏற்பட்ட பின் அம்பிகை நகரில் இருந்தவரான இ.இராசேந்திரத்தின் முயற்சியால் சோமசுந்தரக் குருக்களின் உதவியுடன் 20.2.1997இல் அம்பாளுக்கு சிறப்பாக சங்காபிஷேகம் செய்வித்தார். இடப் பெயர்வு ஏற்பட்ட பின்னர் இங்கு இருந்த மக்கள் மூன்று பேரைக் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். இதில் தலைவராக சி.சிவ கடாட்சமும் பொருளாளராக மு.நாகராசாவும் இருந்தனர்.

இதன் பின்னர் 1999 இல் மீண்டும் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றது. இ.முருகேசு தலைமையிலான இந்த நிர்வாகத்தினர் ஆலயத்தைப் புனரமைத்து 22.7.1999 இல் மகாகும்பாபிஷேகமும் செய்தனர்.

*

# களனியை விட்டுச் செல்லத் தயார்

**மேர்வின் சில்வா தெரிவிப்பு**

கொழும்பு,மார்ச் 28

களனி ரஜமகா விகாரையின் விகாராதிபதி களனியை விட்டு போகச் சொன்னால் உடனடியாக போகத் தயார் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனி விகாரையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்வுகளில் பங்கேற்றபின் விகாராதிபதியைச் சந்தித்து ஆசி பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

களனிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று களனிப் பிரதேசத்தில் பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# துமிந்த எங்கே?

## கேட்கிறது நீதிமன்றம்

கொழும்பு,மார்ச் 28

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தற்போது வசிக்கும் இடத்தை நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

துமிந்த சில்வாவை ஏன் இதுவரை கைது செய்யவில்லை. இவரின் தற்போதைய உடல் நிலை பற்றிய முழுமையான மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், விசாரணைகளின்போது எதிர் கொண்ட கஷ்டங்களையும் அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றம் புலனாய்வுப் பிரி வினருக்கு தெரிவித்துள்ளது.

முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திர மற்றும் நால்வரின் கொலையில் சந்தேகநபராக இருப்பவர் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா.

இதனால் துமிந்த சில்வாவை கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பான விசாரணையை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (ச)

# சிறைச்சாலை நீதிமன்றில் 8 பேரை முற்படுத்த உத்தரவு

## மகஸின் கலவரத்துடன் தொடர்புடையோர்

கொழும்பு,மார்ச் 28

வெலிக்கடை புதிய மகஸின் சிறையில் அண்மையில் இடம்பெற்ற கலவரத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள 46 சிறைக் கைதிகளில் 8 பேரை சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சிறை வைக்கப்பட்டுள்ள 46 கைதிகளும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

46 சந்தேகநபர்களில் 8 பேர் அதிக குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்பதால் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதில் பாதுகாப்புச் சிக்கல் காணப்படுவதாக வெலிக்கடை புதிய மகஸின் சிறை அதிகாரியான மஹாநாம நீதிமன்றில் தெரிவித்தார். அதனால் அவர்களை சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அனுமதி அளிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

எனினும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த, கைதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி. விடுதலைப் புலி சந்தேகநபர்களை முன்னிலைப்படுத்தவே சிறைச்சாலையில் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

**8 பேர் அதிக குற்றங்களுடன் தொடர்புடையதால் விசேட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும்.**

இந்தக் கருத்துக்களை பரிசீலித்து உரையாற்றிய கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி, கைதிகளின் பாதுகாப்பு கருதி சிறை அதிகாரிகள் ஏதேனும் கோரிக்கை முன்வைத்தால் அதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்க வேண்டும் என்றார்.

அதனால் 8 விசேட கைதிகளை சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேகநபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி உத்தரவிட்டார். (ச)

# விவரங்களை கோருகிறது தேர்தல் திணைக்களம்

கொழும்பு,மார்ச் 28

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், தவிசாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் சொத்து விவரங்களைத் தேர்தல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் சொத்து விவரங்கள் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டன.

இப்போது முதல் தடவையாக அரசியல் கட்சிகளின், நிர்வாகிகளின் சொத்து விவரங்களை தேர்தல்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார்.

(ச)

# பேராசிரியர் நடவடிக்கையை கண்டறிவதற்கு விசேட குழு

கொழும்பு,மார்ச் 28

பல்கலைக்கழக பேராசிரியர்களின் நடவடிக்கைகளின் தரத்தைக் கண்டறிய விசேட குழு ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் குழுவின் ஊடாக பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப் படவுள்ளது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தமது தரத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் குழுவால் அதிக கவனம் செலுத்தப்படும்.

இந்த விடயங்கள் தொடர்பான இந்தக் குழுவின் அறிக்கை விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் - என்றார். (ச)

# கறுப்புக் கொடிதான் பறக்கவிட வேண்டும் என்கிறார் பொன்சேகா

ஜெனிவாவில் வைத்து நாட்டின் கௌரவம் இழக்கப்பட்ட பின்னர் கறுப்புக் கொடிகளையே பறக்கவிட வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த அரசு நாட்டை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மண்டியிடச் செய்துள்ளது. அதுமட்டுமல்ல படையினர்களையும் அரசு காட்டிக் கொடுக்க முயற்சிக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

படையினரைக் காட்டிக்கொடுத்து தப்பித்துக் கொள்ள ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அரசின் நடவடிக்கை திருப்தி இல்லை

## லால்காந்த எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச் 28

இராஜதந்திர விவகாரங்களில் அரசின் நடவடிக்கை திருப்தி இல்லை என்று ஜே. வி. பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் அபிவிருத் தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். பிரசார நோக்கில் அபி விருத் தித் திட்டங்களை மேற்கொள்வது நன்மை அளிக்காது. ஜெனிவா பிரேரணையைக் காரணம் காட்டி, நாட்டின் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளையும் மூடி மறைத்து வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ச)

# நில்வள கங்கை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**ஜனாதிபதி தெரிவிப்பு**

கொழும்பு,மார்ச் 28

மாத்தறை நில்வள கங்கைத் திட்ட பிரச்சினையைத் துரிதமாக தீர்த்து வைப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் மாத்தறை உத்தேச நில்வள திட்டம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நில்வள கங்கையில் உவர் நீர் கலப்பதால் குடி தண்ணீருக்கும் விவசாயத்துக்கும் தேவையான தண்ணீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நீர் சீராக வழிந்தோடுவதற்குத் தேவையான ஒழுங்கு முறையான நீர்ப்பாசனத் திட்டமும் இல்லாதுள்ளது.

இதனால் மாத்தறை பிரதேச மக்கள் வெள்ள அபாயத்துக்கு முகம் கொடுக்கும் நிலையில் உள்ளனர் என்பதை அதிகாரிகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தப் பிரச்சினைகளை கேட்டறிந்த ஜனாதிபதி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சிங்கப்பூரிலுள்ள மரினா பிராஜ் போன்ற நீர்ப்பாசன திட்டத்தைப் பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக கடல் நீர் கங்கை நீருடன் கலப்பதைத் தவிர்க்க முடியும். அதனால் அவ்வாறான வேலைத் திட்டமொன்றை துரிதமாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ச)

# பொது வாக்கெடுப்பை நடத்தி எதை சாதிக்கப் போகிறீர்கள்?

## விமல் வீரவன்சவிடம் பிரபா எம்.பி.கேள்வி

கொழும்பு,மார்ச் 28

பொது வாக்கெடுப்பை நடத்தி மக்கள் ஆணையை இனி பெறுவதன் மூலம் எதைச் சாதிக்கப் போகிறீர்கள் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன், அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாத் தீர்மானம் மூலமாக எதை சாதிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்தத் தீர்மானத்தின் அழுத்தத்தின் மூலமாக இலங்கை அரசு சர்வதேசத்திடம் அகப்பட்டுக்கொண்டதாகவும் அதனால் இனப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து விடுவார்கள் என்றும் சில அரசியல்வாதிகள் அறிக்கை விடுத்து வருகின்றனர்.

மறுபுறம் விமல் வீரவன்ஸ போன்ற அமைச்சர்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கூறிவரு கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வை வழங்கினால் ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஜனாதிபதிக்குத் தெரியும்.

எனவே தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வை வழங்கவேண்டும் என்பதைத் அரசு தெரிந்து கொண்டு அவர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கவேண்டும்- என்றார்.

(ச)




சட்டத்தரணிகளை அவமரியாதை செய்ததைக் கண்டித்து நேற்று மாலை 250 இற்கு மேற்பட்ட சட்டத்தரணிகள் கொழும்பு உயர்நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பு, கோட்டை விகாரையில் பிக்குகள் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்துக்கு வந்த சட்டத்தரணிகள் அவமரியாதை செய்யப்பட்டனர். சட்டத்தரணிகளின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்...



திருமதி
**யூலியஸ்ராணி பசில்ராஜ்குமார்**

(ஆசிரியை - யா/ புற்றளை மகா வித்தியாலயம், புலோலி. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி).

தோற்றம்
20★02★1962

மறைவு
28★03★2007

ஐந்து ஆண்டுகள் எப்படி பறந்தோடின............
என்றும் உம் நினைவுகளுடனே........ மறப்போமா உங்களை.......

**கணவர்: பசில் ராஜ்குமார்**
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்).

**மகன்: பசில் பியன்ரோ**
7 ஏ, யா/ ஹாட்லி கல்லூரி,
மற்றும் உறவினர்கள்.

சென். அன்ரனிஸ் வீதி,
பருத்தித்துறை. (16123) (45-6-9)

அம்பிகை துணை

## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
08-11-1946

அம்பிகை அருளடியில்
09-04-2011

"பாவாணர்" "கலைஞானச்சுடர்"

**டானியல் தேவமதுரம்**

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், முன்னாள் உபசெயலாளர்-நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை)

திதி:பூர்வபட்ச ஷஷ்டி -28.03.2012

ஆண்டுகள் ஆயிரமாய் அவனியில் உருண்டாலும்
ஆருயிர்த் தந்தையின் அன்பலைகள் அகன்றிடுமா?
ஈண்டெம் இட்டநலம் இனிதுறவே பேணியீங்கு
இல்லத்தின் குலக்கொடியாய் இனியநல் லாசானாய்
காண்போர் போற்றிடும் கவிஞர் பெருமகனாய்
கலைஞானச் சுடராய் கலையுலகில் நிலைபெற்று
மாண்புடனே மாதேவி மலர்ப்பாதம் சென்றடைந்த
மாதவத்தான் மதுரத்தை மனதினிலே மீட்டிநிற்போம்!

கவியாக்கம்: "தேமதுரன்" தே.சுகிர் நாகேந்திரா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"கேந்திரவதிகை" 07, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (15042) (6,7,10)

நெஞ்சகலா நினைவுதனில்
குடும்பத்தினர்.

## நீங்கா நினைவலைகள்

107 ஆம் நாள் நினைவஞ்சலி | 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 17-01-1974 இறப்பு 12-12-2011
அமரர்
**முத்துவேலன் ரவி**

பிறப்பு 04-06-1949 இறப்பு 27-02-2012
அமரர்
**முத்துவேலன் மாணிக்கம்**

கடந்த 27.02.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் முத்துவேலன் மாணிக்கம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவி புரிந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், துண்டுப் பிரசுரங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (28.03.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

கணவர்,
மகன்.

(16106) (6,7,10)

## அனுமதிப்பத்திரம் பெறாத வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

நல்லூர் பிரதேச சபை தனது எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்குரிய அனுமதிப்பத்திரம் பெறாத வியாபாரிகள் மீது எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்குரிய வியாபார நடவடிக்கைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பழைய, புதிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது வியாபாரத்துக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அதனூடாக சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க உதவுமாறும் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் சகல வியாபார நிலையங்களினதும் உரிமையாளர்களைக் கேட்டுள்ளார்.

(வ-7)




வடமராட்சி, மார்ச் 28

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய, வியாகுல அன்னை கெபித்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு எழுந்தேற்றத்துடன் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும், திருநாள் கூட்டுத் திருப்பலியும் நடைபெறும்.

இந்தத் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து நாளை வியாழக்கிழமை வரை மாலை 4 மணிக்கு திருப்பலியுடன் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடாந்தத் திருவிழாவை கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எமில் போல்ராஜேஸ்வரன் அடிகளார் நடத்தி வைப்பார். (வ-8)

* * *

சுழிபுரம், மார்ச் 28

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த பெருந் திருவிழா கொடியேற்றத்துடன்நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(வ-28)

* * *

மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ)

* * *

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சிவஞான வைரவப் பெருமானின் கும்பாபிஷேகத் தின 1008 சங்காபிஷேகமும் மணவாளக் கோலத் திருவிழாவும் இன்று புதன் கிழமை காலை 7.30 மணிக்கு நீடைபெறும்.

(வ)

## தொழிற் பூங்காவுக்கு நிதியுதவி

கடந்த வருடம் பிரான்ஸ் மண்ணில் காலமான கைதடி மேற்கைச் சேர்ந்த அமரர்.செல்லையா ஜோன்சன் நினைவாக அவரது குடும்பத்தினர் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனற்றோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தொகை நிதியை வழங்கியுள்ளனர்.மேற்படி நிதியை கைதடி மேற்கைச் சேர்ந்த எஸ்.நிஷாகரன் யாழ்.விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகளிடம் அண்மையில் கையளித்தார். (வ-288)


## J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு




பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776035633, 0779037541, 0773301979, 0777279151


## கல்வாரிகளம்

சாவகச்சேரி கச்சாய் வீதி, புனிதலிகோரியார் ஆலய பங்குமக்கள் தயாரித்து வழங்கும்

"திருப்பாடுகளின் காட்சி"

இடம் : ஆலய வளாகம்
திகதி : 30.03.2012(வெள்ளிக்கிழமை)
நேரம் : இரவு 7 மணி

பிரவேசம் இலவசம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மேடை
மேடை அலங்காரம்
ஒப்பனை
ஒலி, ஒளி
} சாள்ஸ் மீசாலை

(16124) (6,9,12)

பங்குத் தந்தையும்,பங்கு மக்களும்.

## யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)
## க.பொ.த. உயர்தரம் - 2014 புதிய அனுமதிகள்

கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைப்பிரிவு வகுப்புக்களுக்கான அனுமதிகளை 02.04.2012 ற்கு முன் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:
★. புதிய வகுப்புக்கள் 04.04.2012 இல் ஆரம்பமாகும்
★. கலைப்பிரிவு மாணவர்களுக்கு வன்தொழில்நுட்பம், மென்தொழில்நுட்ப பாடங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன
★. விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படும்

அதிபர்


## சவுதி அரேபியாவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

சவுதி அரேபியாவில் பணிபுரிய பின்வரும் தொழில்களுக்கு தொழிலாளர்கள் உடனடியாக தேவை

ஞாயிறு தினங்களிலும் திறந்திருக்கும்



| தொழில் வகை | தொகை | சம்பளம் (SR) |
|---|---|---|
| பணிப்பெண்கள் | 50 | 650 |

1 சவுதி றியால் = ரூ. 31/-

சேவை மற்றும் நிபந்தனைகள்

இலவச உணவு, மருத்துவம், தங்குமிட வசதி மற்றும் போக வர விமானடிக்கட் வழங்கப்படும். இரு வருட ஒப்பந்த முடிவில் சம்பளத்துடன் கூடிய 30 நாள் விடுமுறை. வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம், வாரத்திற்கு 6 நாட்கள்.

டைப் செய்யப்பட்ட 2 செட் விண்ணப்படிவங்கள். சான்றிதழ்களின் அசல் மற்றும் அதன் 2 பிரதிகள், 2 வர்ண புகைப்படங்கள் மற்றும் பாஸ்போர்ட் உடன் கிழமை நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் உடன் வரவும்


AL-ARAB & SERENDIB RECRUITMENT SERVICES
46 A1, ஹில் வீதி, தெஹிவளை.
தொ.பேசி : 011-4343717/8/9, 011-2726996, பெக்ஸ்: 011-272 6996
Licence No: 2596
AL/2596/Advt:/EX-01/12


## உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவ தேவஸ்தான கொடித்தம்பம் வைப்பதற்கான அறிவித்தல்

எமது ஆலயத்தின் நிர்வாக சபைக் கூட்டம் சென்ற 25.03.2012 ஞாயிறு நடைபெற்று வைரவப் பெருமானுக்கு கொடித்தம்பம் அமைப்பதற்கான தீர்மானம் சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை ஆராயும் நோக்கில் அனைத்து திருவிழா உபயகாரர்களும்- பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தி கலந்துரையாடல் செய்யும் முடிவுடன் சித்திரை மாதம் 10ஆம் திகதி (10.04.2012) செவ்வாய்கிழமை பி.ப.4.00 மணிக்கு ஆலய முன்றிலில் கூட்டம் நடைபெறவுள்ளதால் அனைவரையும் பங்குபற்றி தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம். மாற்றுக் கருத்துக்கள் இல்லாத விடத்து கொடித்தம்பம் வைக்கப்பட்டு மகோற்சவம் இடம்பெறும்.

(சி/177) (6,9,12)

*நிர்வாக சபையினர்*




மட்டக்களப்பு, காத்தான்குடி அந்நாஸர் வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, குழந்தை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் வாகனத்தின் மீது கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் மோதியபோதே இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கடும் பனி, வெப்பத்தால் கருகும் தேயிலைச்செடி

## தொழிலாளர்களின் வேலை நாள்கள் குறைப்பு

நுவரெலியா,மார்ச் 28

நுவரெலியா மாவட்டத்தில் அதிக பனியும், வெப்பமும் நிலவி வருவதால் தேயிலைச் செடிகள் காய்ந்து கருகிக் காணப்படுகின்றன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கந்தப்பளை பகுதியில் அதிக தேயிலை செடிகள் கருகிக் காணப்படுகின்றன.

இரவில் பெய்யும் பூம் பனி தேயிலை செடிகளில் தங்குவதுடன்பகலில் வெயில் காரணமாக இந்தச் செடிகள் கருகி விடுகின்றன. இதனால் இப்பகுதி தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தேயிலை செடிகள் கருகிக் காணப்படுவதால் தமக்கான வேலை நாள்கள் குறைவடைவதுடன் தமது பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் காலநிலையில் விரைவில் மாற்றம் ஏற்பட்டால்தான் தேயிலைச் செடிகள் கருகுவதில் இருந்து பாதுகாக்கலாம் என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர். (ச)

# இந்தியா கபட நாடகம் ஆடுகிறது

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

எருவில்,மார்ச் 28

அமெரிக்காவும் இந்தியாவும் எங்களுக்கு பாடம் கற்பிக்கமுடியாது. பிரபாகரனை அடித்துப் பிடிக்கச் சொன்ன இந்தியா இன்று கபடநாடகம் ஆடுகின்றது என்று கிழக்கு மாகாணவிவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தால் திருக்கோவில் பிரதேசத்தில் போரால் இடம்பெயர்ந்த தங்கவேலாயுதபுரம், கஞ்சிக்குடிச்சாறு பிரதேசங்களில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், முட்கம்பிகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருட போரை ஜனாதிபதி முடிவுக்கு கொண்டுவந்து மக்கள் சுதந்திரமாக வாழக் கூடியதாக கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். இதனால் இன்று மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை ஒரு சுதந்திரமான இறைமையுடைய நாடு. இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றோம். இதனைப் பொறுக்காத தீய சக்திகள் மீண்டும் இனவாதத்தைப் பேசுகின்றனர். எனவே மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாயின் தீய சக்திகளை விரட்டவேண்டும் - என்றார். (ச-31)

# வெட்டி வீழ்த்தப்படும் தென்னைகள் காணி உரிமையாளர்கள் விசனம்

அட்டாளைச்சேனை,மார்ச் 28

அட்டாளைச்சேனை, கோணாவத்தை ஆற்றை அண்மித்த தமது குடியிருப்பு நிலங்களில் இருந்த நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள், தம்மிடம் அனுமதி பெறப்படாமல் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன என்று காணி உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு கிராமத்துக்கு ஒரு வேலை செயற்றிட்டத்தை முன்வைத்தே தமது தென்னை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை கோணாவத்தை ஆற்றின் கரைகளில் அணைக்கட்டுகளை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். இந்த வேலைத் திட்டம் காரணமாகவே தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அனுமதி இன்றி தென்னைமரங்கள் வெட்டப்பட்டமை தொடர்பில் அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# படகு கவிழ்ந்து ஒருவர் சாவு

அம்பேகமுவ,மார்ச் 28

அம்பகமுவ குளத்தில் மீன்பிடிக்க படகு ஒன்றில் சென்ற நபரொருவர் படகு கவிழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று அம்பகம பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பகமுவ, மயிலவெவ பகுதியை சேர்ந்த விக்கிரமரத்ன (வயது-47) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்த நபரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் அம்பேகமுக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**வீடு வாடகைக்குண்டு**

கோயில் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 3151659

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் (சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் ரூ.450/= மட்டுமே)

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

மிக சிறந்த நிலையில் உள்ள யமகா பீல்ட் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.

தொடர்பு - 0776179134

**பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்**

திரு. வாரித்தம்பி கதிரேசு தங்கராசா

(முகாமையாளர், இலங்கை வங்கி, கொடிகாமம்)



தனது 60 ஆவது பிறந்த நாளை 2012.03.29ஆம் திகதி கொண்டாடுவதுடன் இலங்கை வங்கியில் 34 வருட தன்னிகரற்ற சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறும் எமது முகாமையாளர் திரு V.K.தங்கராசா அவர்களை நீடூழி காலம் வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும், பணியாளர்களும்,
இலங்கை வங்கி,
சாவகச்சேரி கிளையும்,
விரிவாக்கற் கிளைகளான
கைதடி, கொடிகாமம்,
பளை, பூநகரி.

(15042) (6.9.10)

**பணிநிலை வெற்றிடங்கள்**

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க் காணும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உண்டு.

கணித ஆசிரியர்
விஞ்ஞான ஆசிரியர்
} பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள்,ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

கணினி ஆசிரியர் — பட்டதாரிகள்,டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப்சயிற் டிசைன் பண்ணக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து, இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமுள்ள 21 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 05.04.2012

திரு. தி.இராசநாயகம்,
தலைவர்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இல: 0770604950, 0214923118

(14076) (6,7,13)

# நுவரெலியா காட்டில் தீ வைப்புச் சம்பவங்கள்

### மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

நுவரெலியா,மார்ச் 28

நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வனாந்தரப் பிரதேசங்களில் பத்துக்கும் மேற்பட்ட தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் ஹேரந்தன ஹேமவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காடுகளுக்குத் தீ வைப்பவர்கள் குறித்துப் பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

**உயரமான காட்டுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்கள், காடுகளை அண்மித்த வீடுகள், விவசாய நிலங்கள் ஆகியவற்றுக்கு தீயால் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளது.**

தற்போது மலையகத்தில் கடும் வரட்சி காணப்படுகின்றது. குடிதண்ணீருக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகளும் வற்றத் தொடங்கியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் பற்றைக்காடுகளைத் தீ வைப்பதில் இனந்தெரியாத விஷமிகள் ஈடுபட்டு வருகின்றனர்

இவ்வாறு தீ வைக்கப்படுவதால் உயரமான காட்டுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்கள், காடுகளை அண்மித்த வீடுகள், விவசாய நிலங்கள் ஆகியவற்றுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்- என்றார். (ச)



நமுனுகுல மலைத் தொடரில் காட்டு தீ பரவியதில் 5 ஏக்கருக்கும் அதிக மான வனப் பிரதேசம் எரிந்துள்ளது.

# காணாமல்போன 3 சகோதரிகள் திங்களன்று வூட்டனில் மீட்பு

ஹற்றன்,மார்ச் 28

ஹற்றன் நகருக்கு அண்மையிலுள்ள தொப்பித் தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல்போன ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளான மூன்று சிறுமிகளும் கொட்டகலை, வூட்டன் பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுமிகள் தொடர்பில் அவர்களது பெற்றோர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததோடு கடந்த மூன்று நாள்களாக பல்வேறு இடங்களிலும் தேடி வந்தனர். இந்தநிலையில் சிறுமிகளைக் கொட்டகலைப் பிரதேசத்தில் இனங்கண்ட சிலர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்தச் சிறுமிகளை மீட்ட ஹற்றன் பொலிஸார் ஹற்றன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வேலை கிடைக்காத பட்டதாரிகள் 3,000

மட்டக்களப்பு,மார்ச்28

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 3,000 வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர் என்று கல்குடா ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் அமைப்பின் பொதுச்செயலாளர் ரி.தயாரூபன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் அமைப்பால் மட்டக்களப்பு விபுலானந்தா படிப்பகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே நாங்கள் இந்தச் சங்கத்தில் இணைந்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் சுமார் 200 பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

(ச-31)

# புடையன் தீண்டிய இளைஞன் சாவு

நாவலப்பிட்டி,மார்ச் 28

புடையன் பாம்புக்கடிக்கு இலக்காகி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரண மடைந்துள்ளார் என்று நாவலப்பிட்டி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாவலப்பிட்டி, ஹபுகஸ்தலாவையை சேர்ந்த எம்.மானாஸிர் (வயது 21) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார். டிக்கோயா அரபுக் கல்லூரியில் கல்வி பயின்று வந்த இவர், விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த போதே பாம்புக்கடிக்கு இலக்கானார் என்று உறவினர்கள் கூறினர்.

கடந்த 8 நாள்களாக நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் மரணமடைந்துள்ளார். (ச)

# மரண அறிவித்தல்

## பாபு வசந்தி



வடக்குத் தோட்டம், சமரபாகுவைப் பிறப்பிடமாகவும், லண்டன் Sheer Nesskat ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாபு வசந்தி (17.03.2012) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் (பரஞ்சோதி)- இந்திராதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், பாபுவின் பாசமிகு மனைவியும், குபேர்னா, அபர்னா, பிராப்தன் ஆகியோரின் அன்புத்தாயும், சாந்தி, ஜெயந்தி, சுகந்தி, சிவனேஸ்வரன், சிவனேசராசா, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரஞ்சினி, கோபுராஜ்ச், பால்ராஜ்ச், பத்மலிங்கம், குபேந்திரராஜா, விஜயதாஸ், ரட்ணமதி, அழகுமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2012) வியாழக்கிழமை காலை 9 மணியளவில், No2, Half way Road, Mainster or Sea, Sheerress, ME 123 AV. இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடக்குத் தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
பரஞ்சோதி
(குடும்பத்தினர்)

# 16 ஆம் நாள் நினைவுகள்

செல்வி
**அப்புத்துரை குலமணி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 ★ 05 ★ 1953 | 15 ★ 03 ★ 2012 |

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை நாகரெத்தினம் தம்பதியரின் புதல்வி குலமணி 15.03.2012 லண்டனில் காலமானார். அன்னாரின் 16 ஆம் நாள் கிரி யைகள் 29.03.2012 கீரிமலையில் நடைபெறுகிறது. என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

70, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

(16118)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி சற்குணேஸ்வரி மகாலிங்கம் (மம்மி)


யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், இல. 261/2, கண்டி வீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணேஸ்வரி மகாலிங்கம் 25.03.2012 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடேசு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கத்தின் (டடா) பாசமிகு மனைவியும், பிறேம், பர்மி, குணா, ஷாம், காலஞ்சென்ற ஜெயன் ஆகியோரின் பாசமிகு தாயும், குணமணி, காலஞ்சென்ற சோதிமணி மற்றும் இரத்தினம், மீமீ, குஞ்சு, பாலா, சேகர், யசோ, மஞ்சு ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணி, நீலா, ஞானம், ராசன், காலஞ்சென்ற பேபி ஆகியோரின் மைத் துனியும் கோகுல், ஜெயந்தா, கௌசிகன், லோபிகா, விவேக்கா, தூயன், யசியா, அபிரா, தூரிகா, விஜிர்தன் ஆகியோரின் பேர்த்தியும் சேகர், ராஜா, ரமேஸ், வினோ ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 261/2, கண்டி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மகாலிங்கம் (டடா),
(கணவர்)




தெளிவான மேகக் கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும்.

# ஆனைக்கோட்டையில் சங்கிலி அறுப்பு நான்கு சைக்கிள்களும் திருட்டு

## இருவர் பிடிபட ஒருவர் தப்பினார்

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆனைக்கோட்டைப் பகுதிச் சூழலில் கடந்தவாரம் இரண்டு பெண்களிடம் இருந்து தங்கச் சங்கிலிகள் அறுத்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட நான்கு சைக்கிள்களும் திருடப்பட்டுள்ளன.

நான்காவது சைக்கிளை இரண்டு திருடர்கள் வீடு புகுந்து எடுத்துச் சென்ற போது வீதியில் நின்றிருந்த இளைஞர்கள் திருடர்களை மடக்கிப்பிடித்தனர். திருட்டுப் பற்றித் தகவல் கிடைத்தே இளைஞர்கள் திருடர்கள் இருவரையும் பிடித்து நையப்புடைத்தனர். சைக்கிளையும் மீட்டனர்.


அவர்களில் ஒருவன் பின்னர் தப்பி ஓடிவிட்டான். மற்றைய நபர் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் ஆனைக்கோட்டை, பொன்னையா ஒழுங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 7 மணியளவில் இடம் பெற்றது.

சம்பவத்தில் திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த யசிந்தன் என்று அழைக்கப்படும் நபரே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். வண்ணார் பண்ணை, முருகன் கோயிலடியைச் சேர்ந்த செல்வன் என்றழைக்கப்படும் நபரே தப்பியோடியவர்.

சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-4)

# நிலை வாழ்வை பெற்றிடுவோம்

''ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தை உம்மிடம் தானே உள்ளன'' (யோவா 6:68) என்று திருத்தூதர் பேதுரு இயேசுவிடம் கூறுகின்றார். ஏனெனில் இயேசுவின் நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகளை பின்பற்றுகின்றபோது எந்தத் துன்பங்களும் நெருங்காது. அன்று ஆண்டவரின் நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகளை ஏற்றவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை விட ஏற்காதவர்களின் வாழ்க்கை எப்படி அமைந்தது என்பதைப் பற்றி நாம் தவக்காலத்தில் சிந்திப்பது அர்த்தமுள்ளதாக அமையும். முதல் பெற்றோர் ஆண்டவர் அளித்த சிங்காரத் தோப்பில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.




ஆனால் ஆண்டவரின் நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தையை மீறிய போது நிர்வாண நிலையையும், துன்பத்தையும் பெற்றுக் கொண்டனர். (தொ.நூ 3:7-19) லோத்தின் மனைவி ஆண்டவரின் நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தையை மீறியதால் உப்புத்தூணாய் மாறினாள். (தொ.நூ 19:26) இறைவாக்கினர் யோனா ஆண்டவரின் நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைக்கு செவிசாய்த்து நினிவே செல்லாமல் தர்சீசு நகருக்கு சென்றதனால் பலவிதமான துன்பங்களை அனுபவித்தார். (யோனா 1:1-17) இவை நமக்கு முன்மாதிரியான பாடமாகும்.

தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு கிடைக்கும் பாதுகாப்பு பிறந்த குழந்தைக்கு கிடைப்பதில்லை. ஆனால் ஆண்டவரின் வாழ்வு தரும் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போருக்கு அவரின் இதயத்தில் நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்கின்றது. இதனால் விண்ணுலக, மண்ணுலக நன்மைகளை ஒரே நேரத்தில் உய்த்துணர முடிகின்றது. இவர்கள் நிலத்தில் மறைந்துள்ள புதையலைக் கண்டுபிடித்தவர்கள் போல் இருப்பார்கள்(மத் 13:44). ஆகவே ஆண்டவரின் இதயத்தில் மனிதத் தன்மையும், இறை தன்மையும் நிறைந்துள்ளன. அவை வல்லமை மிக்கவை. பேரிரக்கமுடைய நிலைவாழ்வை அளிக்கும். அவரது இதயத்தில் வாழ்பவர்கள் பாவத்தை பொறுத்தமட்டில் இறந்தவர்கள். இறந்தும் நிலைவாழ்வு பெற்றவர்கள். அதுவே மேலான கொடை.

க.அருள்நேசன்,
குருநகர்.

# விலங்கு பரிபாலன டிப்ளோமா பாடநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 28

குண்டசாலையில் அமைந்துள்ள இலங்கை விலங்கு பரிபாலன பாடசாலையின் இரண்டு வருட விலங்கு பரிபாலன டிப்ளோமா பாடநெறி எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பாடநெறிக்கு க.பொ.த உயர்தர விஞ்ஞான/விவசாயப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அனுப்பப்படும் விண்ணப்பங்களில் இருந்து பொருத்தமானவர்களுக்கு இந்தப் பாடநெறியைக் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

இவ்வாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பொருத்தமானவர்கள் தமது சுயவிவரத்தை ஏப்ரல் மாத இறுதிக்கு முன்னர் ''அதிபர், விலங்கு பரிபாலன பாடசாலை, கரந்தகொல்ல, குண்டசாலை'' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ந)

# சிறுவர் வாசிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை

வடமராட்சி, மார்ச் 28

பிள்ளைகள், பெற்றோர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறை நகரசபையினால் ஒவ்வொரு முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்களிடையே பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முதலாவது செயற்பாடாக நெடியகாடு கணபதி படிப்பக முன்பள்ளிச் சிறார்களுக்கும் பெற்றோர்களுக்கும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வல்வெட்டித்துறை நகரசபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தச் செயற்பாடுகளாக முன்பள்ளி தொடர்பான வீடியோ படக்காட்சி, பேராசிரியர் சபா. ராஜேந்திரனின் கதை கூறல், எழுத்துகளை இனங்காணுதல், படங்களுக்கான சொற்களை இணைத்தல், வர்ணம் தீட்டுதல் போன்ற செயற்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

**முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள் இந்தச் செயற்பாடுகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வல்வெட்டித்துறை நகரபிதா ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.**

முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள் இந்தச் செயற்பாடுகளில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வல்வெட்டித்துறை நகரபிதா ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.

சபை எல்லைக்குட்பட்ட அனைத்து முன்பள்ளிச் சிறார்களுக்கும் பெற்றோர்களுக்குமான இந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (த-8)

# 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி நாளை ஆரம்பம்

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மாபெரும் படைப்பான 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி நாளை வியாழக்கிழமை தொடக்கம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு யாழ். நகர் திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாகும். வெள்ளியன்று மட்டும் 7.30 மணிக்கு நடைபெறும்.

200 இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கின்ற இவ்வாற்றுகைக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. வேள்வித் திருமகன், திருப்பாடுகளின் காட்சிக்கான எழுத்துரு நெறியாள்கையை திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள் மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை பார்வையாளர்களுக்கு உதவும் வகையில் இந்த நாடகப் பிரதியை நூலாகப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி இராசதுரை



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி இராசதுரை (26.03.2012) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா - இராசதுரையின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன், விஜயச்சந்திரன், யோகவதி, சோமாவதி, யோகேஸ்வரன், விமலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.03. 2012) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல: 39,**
**உக்குளாங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்:**
**சகோதரர்கள், பெறாமக்கள்**

(16152)(6,912)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 1947 - 01 - 22



விண்ணில் 2012 - 02 - 27

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி வித்தியாழினி அன்ரன் நேசநாயகம்** அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்

### முருகன் முத்துகுமார்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் சக உத்தியோகத்தர்களும்,**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு.

THE ROYAL COLLEGE OF JAFFNA
முழுக்கட்டணம் 5000/= உடன் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில By ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல 3/3, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை
Tel: 077-6751649

தவறிவிட்டது
சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை மாகியப்பிட்டி சந்திக்கும் இடையில் 26.03.2012 அன்று பிறவுண்கலர் கான்பாக்கில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வாகனவரிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:0789981395,0212241114
(7,9,12)

கூலித் தொழிலாளர்கள் தேவை
சோடா போத்தல்கள் ஏற்றி இறக்குவதற்கு கூலியாள்கள் தேவை.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**மோட்டார் சைக்கிள்கள் தேவை**

நல்ல நிலையிலுள்ள சகலவிதமான மோட்டார்சைக்கிள்களும் வாங்கப்படும். விற்கவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(15804)(6-7-8) **T.P : 077 7705307**


## மாணவருக்கு பாம்புக்கடிக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

புடையன் பாம்புக்கடிக்கு இலக்காகிய மாணவர் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் யாழ். மணியந்தோட்டம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது. சம்பவத்தில் லக்சிதன் (வயது -17) என்ற மாணவரே பாம்புக்கடிக்கு இலக்கானார்.

(ந-4)

## முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். இராசலிங்கம் (வயது-60) என்பவரது சடலமே மீட்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் குறித்த சடலம் கையளிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-4)


*ஏழாலை மத்தி ,ஏழாலை வசந்தி கோயிலென விளங்கும் அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோயில்*

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012**

நிகழும் மங்களகரமான கர வருஷம் பங்குனி மாதம் 19 ஆம் நாள் (26.03.2012) திங்கட்கிழமை பூர்வபக்க சதுர்த்தி திதியும், பரணிநட்சத்திரமும் விஷ்ணு யோகமும் கூடிய சுபவேளையில் நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்று வைபவம் இடம் பெற்றது.

★பிரதம சிவாச்சாரியார் : **புன்னாலைக்கட்டு சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்**

05.04.2012 வியாழக்கிழமை அன்று உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று மாலை 05.00 மணிக்கு கொடியிறக்கும் வைபவம் நடைபெறும்.

(16157)(6,12)

**ஆலயபரிபாலகர் வசந்தி அம்மன்.**



## தேவை

**யாழ். நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் நீர்குழாய்கள், பிளாஸ்ரிக்தொட்டிகள், மின்உபகரணங்களை விநியோகித்துக்கொண்டிருக்கும் நிறுவனம் ஒன்றிற்கு இத்துறையில் அனுபவமுள்ள முகாமையாளர் ஒருவர் தேவை. ஆங்கில மொழியில் தொடர்பாடல் செய்யக் கூடியவராக இருத்தல் அவசியம். சிங்களம் பேசத் தெரிந்திருந்தாலும் விரும்பத்தக்கது.**

விளம்பர இல: 4346
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(C/1183)(6-7-8)



## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளில் பணியாற்றுவதற்கு தகுதியும் அனுபவமும் உள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*01.* சிட்டை எழுதுநர்கள் (Bill Clearks)
*02.* விற்பனையாளர்கள் (Sales Men)

(வயது 25 - 40 இற்கு இடைப்பட்டவர்கள்)

இந்தப் பதவிகளில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிவரம் கொண்ட விண்ணப்பத்துடன் 30.03.2012ஆம் திகதி மு.ப. 10 - 12 மணிக்கு இடையில் கீழவரும் விலாசத்துக்கு நேரில் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**முகாமையாளர்,**
**நாராயணா செரமிக் யுனிற்,**
**113, கண்டி வீதி, கிளிநொச்சி.**


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### *கந்தையா சச்சிதானந்தன்*



*(சச்சி, பற்றிக்கடை ஆனந்தன்)*
*(உரிமையாளர் - ஆனந்தன் எலெக்ரிக்கல்ஸ், சாவகச்சேரி)*

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், தற்போது கோயில்வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சச்சிதானந்தன் (27.03.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 366, கோவில் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### துரைரத்தினம் விஜயதாசன்



கோலாலம்பூர், மலேசியா வைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் ஜேர்மனி "புறூல்"ஐ தற்போது வதிவிடமாகவும் கொண்ட துரைரத்தினம் விஜயதாசன் 24.03.2012 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் - ராசமணி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற எலிசபெத் ஜெய ராணியின் அன்புக் கணவரும், நோயல் விஜயரூபன் (பொறியியலாளர் U.S.A), டானியேல் ஜெயரூபன் (ஆசிரியர், St.John's College) ஆகியோரின் பாசமிகு தந்தையும், C.T. கஸ்பேசன், காலஞ் சென்றவர்களான யேசுதாசன், தேவதாசன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தியா தேவதர்சன் (நியூசிலாந்து), திரு. திருமதி V.G. கனகசிங்கம் (உடுப்பிட்டி), திரு. திருமதி (Rev) V.N. தர்மகுலசிங்கம் (மன்னார்), காலஞ்சென்ற தவபுத்திரி யேசுதாசன், திரு. திருமதி V.G. பாலசிங்கம், திரு. திருமதி ஜோய்ஸ் அதிசயராணி தவராசா (France) மற்றும் S. தவராசா (France), திரு. திருமதி யேவேல் ராசசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், திரு. திருமதி எமலின் கருணராஜா (U.K), டிலானி, நிசானி, றொசானி (நியூசி லாந்து) ஆகியோரின் சிறிய தந்தையும், திரு. திருமதி ஜஸ்ரின் ஜெயதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், பெற்சி காருண்யா ராமகிருஷ்ணன் (H.N.B., மானிப்பாய்), சாமுவேல் தேவானந்த் (பிரான்ஸ்), டானியல் தயாயனந் (மன்னார்), A. தேவபாலன் (கட்டார்), செல்வி. ரூத் ஜெயரூபி (சுண்டிக்குளி), திருமதி ஏஞ்சலின் அஜீவன் (மட்டுவில்), யூலியன், ஜெனிபா (ஜேர்மனி) ஆகி யோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (29.03.2012) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டானியல் ஜெயரூபன்
(மகன்-ஜேர்மனி)
T.P:004915210760581

(15891) (9,10)

தகவல்:
V.G. கனகசிங்கம் (மைத்துனர்)
யாழ் வீதி, உடுப்பிட்டி.


## மேற்பார்வையாளர்

அலுவலகம் ஒன்றில் பணியாளர்களை மேற்பார்வை செய்யக்கூடியவர் தேவை.
(ஓய்வுபெற்ற ஆண்கள் மட்டும்)

**0718474325**



**தவறிவிட்டது**

சோதி வேம்படி லேன், மானிப்பாயைச் சேர்ந்த கஜன் ஜெயலலிதா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (688302480V), சாரதி அனுமதிப்பத்திரம், ரக்ஸ், இன்சூரன்ஸ் என்பன ஆனைக்கோட்டை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்).

**தொடர்பு - 0776558430**


## *மரண அறிவித்தல்*

### கணபதிப்பிள்ளை நடராசா (நாகப்பர்)



சீமா வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை - நடராசா (நாகப்பர்) 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அருந்தவதேவியின் அன்புக் கணவரும், கந்தசாமி, கதிரவேலு (சின்னக்கண்டு), இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகலா (லண்டன்), சிவதாஸ் (லண்டன்), சிவநாதன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), சிவமாலா (ஆசிரியை, கற்றன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகதாஸ் (லண்டன்), துஷானி (லண்டன்), ஜனார்த்தினி (மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), பவானந்தன் (ஆசிரியர், கற்றன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2012) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளிவல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*சீமா வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### நாகன் செல்லையா

தோற்றம்: 18★06★1947 மறைவு: 28★02★2012

*நாளை(29.03.2012)வியாழக்கிழமை* எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


மாதா கோயிலடி,
துன்னாலை.

(சி/182) (6-9-12)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு:* 08 * 03 * 1943



*உதிர்வு:* 11 * 03 * 2011

### அமரர் மார்க்கண்டு சுவாமிநாதன்

**திதி: பூர்வ ஷஷ்டி**

அன்புடன் எமைப் பேணி
அவையத்து முந்த வைத்து
பண்பொடு ஒழுகச் செய்து
பார்போற்ற வாழ வைத்து
தென்புலம் சென்றீர்! இன்னும்
தேம்பியே அழுகின் றோம்யாம்!

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

# அராலி - வேலணை பகுதியின் கடல் பாதையை புனரமைக்குக

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்

**வலி.மேற்கு, வலி.தென்மேற்கு, வலி.கிழக்கு, வலி.தெற்கு ஆசிய மக்களால் கோரப்படும் அராலி–வேலணை கடற் பாதை புனரமைப்பில் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

யாழ்ப்பாணம்,மார்ச் 28

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அராலி-வேலணை கடல் ஊடான பாதையை புனரமைத்துத் தருமாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன் போது வடக்கு மாகாண சபையின் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் பாரம்பரிய சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உறுதிமொழி வழங்கியிருந்தனர்.

ஆனால் கொழும்பில் இடம் பெற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டத்தில்அராலி-வேலணை கடற்பாதை அபிவிருத்தி குறித்து எந்தவிதமான கருத்தும்முன்வைக்கப்படவில்லை.

அதேபோல வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இது சம்பந்தமான கருத்தினை முன்வைக்கவில்லை.

இதனைவிடுத்து - நான்கு ஆண்டு திட்டத்தில், வேலணை கந்தசாமி கோயில் கழுதைப்பிட்டி வீதி, வேலணை ஊர் காவற்றுறை வீதி,வழுக்கையாறு புங்குடுதீவு குறிகாட்டுவான் வீதி, யாழ்.பண்ணை ஊர்காவற்றுறை வீதி மற்றும், குறிகாட்டுவான் நயினாதீவு இறங்குதுறை என்பன புனரமைக்கப்பட வுள்ளன.

இதற்கென 3900 மில்லியன் ரூபா 4 ஆண்டுகளில் செலவிடப்படவுள்ளது.

இது சம்பந்தமாக பல தடவைகள் அரச அதிகாரிகளினூடாக கோரிக்கை விடப்பட்டும் அமைச்சரினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இந்த விடயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுமாறு அராலி பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டி நிற்கின்றனர். (எ)

# குப்பை அகற்றுவதற்கான நாள்கள் குறித்து அறிவிப்பு

**குப்பைத் தொட்டிகளில் கோழிக் கழிவு மற்றும் இறந்த மிருகங்களின் கழிவுகளைப் போட வேண்டாம்.**

யாழ்ப்பாணம், மார்ச் 28

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் கோழிக் கழிவு மற்றும் இறந்த மிருகங்களின் கழிவுகளைப் போட வேண்டாம் எனவும் உக்கக் கூடிய கழிவுப் பொருள்களைப் போடுமாறும் நல்லூர் பிரதேச சபை பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உக்கக்கூடிய கழிவுப் பொருள்களை குப்பைத் தொட்டிகளில் போடுவதால் அதனை அகற்ற முடியும் எனப் பிரதேச சபை மேலும் தெரிவிக்கிறது.

அத்துடன் கீழ் வரும் அட்டவணையில் கொக்குவில் உப அலுவலகம் குப்பை அகற்றுதலை மேற்கொள்ளவுள்ளது. திங்கட்கிழமைகளில் ஆடியபாதம் வீதி (திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி வரை), வளாக வீதி, பிறவுண் வீதி, பிரம்படி வீதி கே.கே.எஸ்.வீதி, சபாபதி வீதி போன்ற பகுதிகளும் கருவப்புலம் வீதி, கோணாவளை வீதி, பொற்பதி வீதி, இருபாலை வீதி, காளி கோயிலடி, அம்மன் வீதி, சம்பியன் வீதி, கருவேலடி வீதி, ரயில் பாதை வீதி போன்ற பகுதிகளில்-

செவ்வாய்க்கிழமை வீதித்தொட்டிகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல்.

வியாழக்கிழமை கோண்டாவில் மேற்கு பகுதிகள், காளி கோயில்-

வெள்ளிக்கிழமை வீதித் தொட்டிகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல், பிரம்படி வீதி, அச்சுக்கூட வீதி-

சனி கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள ஆடிய பாதம் வீதி, மணியர்பதி வீதி, மஞ்சவனப்பதி வீதி, நாகலிங்கம் வீதி, பிடாரி அம்மன் கோயிலடி-

ஞாயிறு, அன்னங்கை வீதி, நாராயணன் வீதி, சிவகாமி அம்மன் வீதி, பரஞ்சோதி பாடசாலை வீதி, கலைவாணி வீதி, நவரட்ணராஜா வீதி, பாரதி வீதி, சென். செபஸ்தியார் வீதி, வாமஸ் ஒழுங்கை போன்ற பகுதிகள், எம் எஸ். லேன், ஆஸ்பத்திரி வீதி போன்றன முறையே குப்பை அகற்றப்படவுள்ளன. (எ-7)

## கரவெட்டியில் சந்தையைப் புனரமைக்க ஏற்பாடு

**நெல்சிப் திட்டத்தின் கீழ் கரவெட்டி மத்தொனி பொதுச்சந்தை வீதி 3.99 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 28

நெல்சிப் திட்டத்தின் கீழ் கரவெட்டி மத்தொனி பொதுச்சந்தை வீதி 3.99 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்திற்கமைவாக இந்த வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனைவிட பிரதேச சபையின் நிதியில் இருந்து கட்டை வேலி உபஅலுவலகத்திற்கு எல்லைச் சுவர் அமைத்தல், நெல்லியடி பொது நூலகம் திருத்தம், கோயிற்சந்தை இறைச்சிக்கடைத் திருத்தம், உடுப்பிட்டி உப அலுவலகக் கட்டடத் திருத்தமும் நீர் விநியோகமும், கொல்களம் அமைத்தல் ஆகிய பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-14)




சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (9)

## நெல் உற்பத்தியில் கூடுதல் விளைச்சல்

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் விதை நெல்லுக்காக விவசாயத் திணைக்களத்தின் ஆதரவுடன் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி மிகவும் கூடிய உற்பத்தியை வழங்கியுள்ளதாக உடுவில் பிரதேச விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு நெற் செய்கையின் போது இந்த ஆண்டு விதை நெல் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஐந்து விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு எட்டு ஏக்கர் நிலத்தில் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்ட தாகவும் இது அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (86)

## விபத்தில் சிக்கி கை முறிவு

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் வீதி விபத்தில் சிக்கியதில் கைமுறிந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தேவலாய வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்புகையில் ஒழுங்கையொன்றிலிருந்து திடீரென வீதிக்கு சைக்கிளில் வந்த சிறுவனைக் காப்பாற்ற 'பிரேக்' பிரயோகித்த போது தூக்கி வீசப்பட்டதில் கை முறிந்ததாகக் தெரிவிக்கப்பட்டது.

# 780 இலக்க பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்துக்கும் ஊற்காவற் துறைக்கும் இடையிலான 780 இலக்க பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக வழங்கப்பட்டு வந்த இந்தச் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டதால் மாணவர்கள், தொழிலுக்கு செல்வோர், மற்றும் வைத்தியசாலை செல்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் பருவகாலச் சீட்டுக்கும் பணம் செலுத்தி, தனியார் பஸ்ஸுக்கும் பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிகள்,மற்றும்வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள், புளியங்கூடல் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்தச் சேவை நிறுத்தப்பட்டதால் நேரத்தோடு வீடு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாண பிரதேசத்துக்கு உட்பட்ட பிரபல்யமான பாடசாலைக்கு சீரான சேவையை வழங்கும் இ.போ.ச. தீவகத்திலும் சீரான சேவையை வழங்க முன்வர வேண்டும் தீவக மாணவர்களின் நலன் கருதி மீண்டும் சேவையை வழங்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## கணினி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 28

தெல்லிப்பழை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணினி பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளன என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் கே.சிறிமோகனன் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் வசிக்கும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் விதாதா வள நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# இறுதி நேர பஸ் சேவை இடைநிறுத்தம்

ஊர்காவற்றுறை,மார்ச்28

இலங்கை போக்குவரத்துச் சபையின் குறிகாட்டுவான் இறுதி பஸ் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து இரவு 07.45 மணிக்கு புறப்படும் குறிகாட்டுவான் பஸ் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தொழிலிற்கு சென்று வருவோர் மற்றும் தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ள னர்.

மேலும் இந்தப் பயணிகள் யாழ். பஸ் நிலையத்திலிருந்து ஊற்காவற்றுறை செல்லும் இரவு 08.00 மணி பஸ்ஸில் ஏறி அராலிச் சந்தியில் இறங்கி 8 கி.மீ நடந்து செல்ல வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்து சபை தீவகப் பிரதேசத்துக்கு சீராக பஸ் சேவையை வழங்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (எ)

# கர்ப்பிணிப் பெண்களின் மரண வீதத்தை பூச்சியமாக வைத்திருக்க பொறிமுறை

கர்ப்பிணிப் பெண்களின் மரண வீதத்தினை பூச்சிய நிலையில் வைத்திருக்க யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மாவட்டத்தில் சகல வைத்திய சாலைகளிலும் நடைமுறைப்படுத்தும் பொறி முறைகளை ஆரம்பித்துள்ளார்.

முதற்கட்டமாக இந்தப் பொறி முறை சாவகச் சேரி ஆதார வைத்திய சாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளனர்.

இதன் பிரகாரம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகள் பற்றிய விவரங்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக அந்தந்தப் பிரிவு குடும்ப நல சேவையாளர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளன.

அத்துடன் பிரசவம் நடைபெற்று வீடு செல்லும் விவரமும் உடனுக்குடன் அறிவிக்கப்பட வேண்டும். பிரசவம் நடைபெற்று ஒரு வாரத்திற்கு அந்தந்தப் பிரிவு குடும்ப நல சேவையாளர் ஐந்து தடவைகள் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

அத் துடன் தொடர்ந்து 42 தினங்கள் வரை குடும்ப நல சேவையாளர்களினால் கண்காணிக்கப்பட்டு அதன் பின்னர் வைத்தியசாலையில் நடைபெறும் கிளினிக்குக்கு சிசுவையும் தாயையும் அனுப்ப வேண்டும்.

சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பும் பிரசவத் தாய்மாரின் விவரங்களும் குடும்ப நல சேவையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**வேம்படி மகளிர் உ/த பாடசாலை**

தமிழ்மொழி மூலம்

9 ஏ

தாட்சாயினி ராஜாராம், கஜீபா தில்லைநாதன், கோபிகா பரிமளாகாந்தன், மயூரவாணி மதுரநாதன், ஜனனி ஜெயவீரசிங்கம், லக்ஷனா லோகநாதன், சுபேகா கமலநாதன், சௌஜா காயாரோகணன், தனுஜா அமிர்தலிங்கம், தேவிகா தேவகுமார், விசாகஜா பஞ்சாயுதன், அபிராமி சோதிதாசன், துவாரகா செல்வரட்ணம், வைஷ்ணவி தங்கராஜா.

ஆங்கில மொழி மூலம்

அனோஷா இக்நேசியஸ், திலக்சி சந்திரசேகர், சாரங்கா சபாநாயகம், சங்மிஜா ஜெயராஜா

தமிழ்மொழி மூலம்

8 ஏபி

டிலானி குலசேகரம், புவஸ்ரியா கதிர்காமலிங்கம், கௌதமி கிருஷ்ணமூர்த்தி, ஜானகி ராஜரட்ணம், நர்மதா திருஞானச்செல்வன், பிரணவி தியாகமூர்த்தி, சகிலா சிவசுப்பிரமணியம், தர்சிகா சத்தியதாசன், யதுஷ்னா அருணகிரிவாசன், ஜனோஜா சிவபாதம், லதாஜினி சிவராஜா, கோகுலா சடகோபன், றஜீ மகாலிங்கம், சோபனா பாலகுமரன், தர்சிகா ததீஸ்வரன், திவ்வியா ஜனநந்தராஜன், விஷ்ணுப்பிரியா ஸ்ரீகாந்தன், யோகஸ்ரெவானி யோகரட்ணம்.

ஆங்கில மொழி மூலம்

8 ஏபி

பானுஷா சத்தியேந்திரன், கீர்த்தனா குமரேஸ்வரன், நதியா ராஜேஸ்வரன், ரிசாந்தினி புண்ணியராஜா, சரணிஜா ஸ்ரீரவீந்திரா, சரண்யா உதயகுமார், ஷைத்தகி ஜெயராஜா.

தமிழ்மொழி மூலம்

8ஏ சி

லிட்யாபோல் ஜஸ்ரஸ் சதீஸ்குமார், மேரிஆன் மினேவா ஜெயராஜா, சரண்யா அமரசிங்கம், அபிவர்ஷி கனகராசா, பானுஷா அர்ச்சுனராசா, கௌசல்யா பாலசுப்பிரமணியம், மதுரிகா நித்தியானந்தம், சாம்பவி நாகேந்திரமூர்த்தி, சியானி கிருபாகரன், வைஷ்ணவி ஸ்ரீமோகன், சங்கீதா வரதன்.

ஆங்கில மொழி மூலம்

8 ஏ சி

காஞ்சனா செந்திநாதன்

தமிழ்மொழி மூலம்

8 ஏ எஸ்

தினுஷா பிரேமசங்கர்

தமிழ்மொழி மூலம்

7 ஏ 2 பி

அஜந்தா ராஜேந்திரன், சிந்துஜா ரவீந்திரதாசன், ஸ்ரீதரா வரதராஜா, கீர்த்தனா காசிலிங்கம், தர்சிகா யோகேஸ்வரன், டலக்ஷனா அன்பழகன், சங்கீதா கிருஷ்ணப்பிள்ளை, துளசிகா ரவீந்திரன், அர்ச்சனா சிவராஜா, கீதாஞ்சினி தங்கராஜா, திவாகரி ராமநாதன்.

ஆங்கில மொழி மூலம்

7 ஏ 2 பி

கேமறனிற்றா யோகராஜா, தரண்யா கணேந்திரன்

தமிழ்மொழி மூலம்

7 ஏ பி சி

மேரி றொஷாந்தினி றொபின், மௌலிகா பத்மநாதன், பைரவி தர்மரட்ணம், யதுஷா கிருஷ்ணமூர்த்தி, உமையாள் வரதராஜன், நிதர்சனா ராஜசேகரம், கம்சனா தெய்வேந்திரம், கௌதமி ஞானேந்திரன், விபுனா கிருஷ்ணராஜா.

தமிழ்மொழி மூலம்

7 ஏ பி எஸ்

கஜேந்தினி சந்திரசேகரன், ஷாமினி சிவகுமார், துஷியந்தினி கவிராஜன்.

தமிழ்மொழி மூலம்

7 ஏ 2சி

பிரகவி சந்திரன், சங்கவி மனோகர்.

**அருணோதயக் கல்லூரி, அளவெட்டி**

சிறிகுமரன் சசிக்குமார் 9ஏ, கிருஸ்ணபிள்ளை கோபிதா 8ஏ,பி, கதிர்காமதாசன் வக்சலா 6ஏ,3சி, சிவசுப்பிரமணியம் குவைசியா 6ஏ,பி,சி,எஸ், உருத்திரமூர்த்தி துதியா 5ஏ,3பி,எஸ், விக்கினேஸ்வரன் நிவேதிகா 5ஏ,3பி,எஸ், சந்திரகுமார் சிந்துஜா 5ஏ,2பி,2சி, ஆனந்தராசா விருஷன் 5ஏ,2பி,2சி, மயூரகரன் பானுஷா 5ஏ,3பி,எஸ், கோபிநாத் கீர்த்தனன் 4ஏ,3பி,2சி, பாலசுப்பிரமணியம் லவணன் 4ஏ,2பி,3சி, குணரத்தினம் டிலக்சனா 4ஏ,2பி,2சி, கெங்காதரன் சிந்துஜன் 4ஏ,2பி,2சி,எஸ், தேவதாசன் சுகந்தினி 4ஏ,பி,3சி,எஸ், வைத்தீஸ்வரசர்மா மதுராமசர்மா 4ஏ,பி,4சி.

சதானந்தன் மதனி 3ஏ,பி,4சி,எஸ் சிவநேசன் இனுஷா 3ஏ,3சி,3எஸ், மனோரஞ்சன் றொசானி 3ஏ,2பி,3சி,எஸ் தனபாலன் நிஷாலினி 3ஏ,5சி,எஸ், சிவராசா ஸ்ரீவதனன் 3ஏ,3பி,2சி,எஸ், சித்திவிநாயகம் தர்சன் 3ஏ 2பி,4சி, விமலநாதன் சிந்துஜன் 3ஏ,பி,3சி,2எஸ், சிவலிங்கம் பிரேந்தன் 3ஏ,5சி,எஸ்,சந் திரபாலு துலக்ஷிகா 3ஏ,3சி,3எஸ்

**யா/இந்து மகளிர் கல்லூரி**

தமிழ்மொழி மூலம்

கௌசனா பாலசுந்தரம் 9ஏ,மதுசா சத்திசீலன் 8ஏ,பி, கிருஷிகா கமலநாதன் 8ஏ,பி சுஜவாந்தி இலட்சுமணகுமார் 8ஏ,பி, நிர்ஷிகா செந்திநாதன் 8ஏ,பி, மேர்சி ஞானரூபி ஆனந்தகுமார் 8ஏ,சி, தர்சிகா செல்வரெட்ணம் 7ஏ,பி, சஜீவிதா ஜீவரெட்ணராஜா.

7ஏ,பி,சி, தாட்சாயினி இரங்கநாதன் 7ஏ,பி,சி, திரியம்பகா ஸ்ரீதரன் 6ஏ,3பி, துர்க்கா சிவசுப்பிரமணியம் 6ஏ,3பி, கம்சாரணி தயானந்தன் 6ஏ,2பி,சி, கிருஷாந்தி குமாரநாதன் 6ஏ,2பி,சி.

நிவோதினி விஜயராஜா 5ஏ,2பி,சி, சிவப்பிரியா சிவதாஸ் 6ஏ,2பி,சி, திவ்யா சண்முகராஜா 6ஏ,3சி, அம்பிகா சுந்தரேசன் 6ஏ,2சி, எஸ், நிரஞ்சனா கந்தசாமி 6ஏ,பி,2சி, சிந்துஜா இராஜதுரை 5ஏ,4பி,லக்சனா மோகனராசா 5ஏ,3பி,சி,சோபிகா குலேந்திரராசா 5ஏ,3பி,சி டிலோஜினி அருட்செல்வன் 5ஏ,3பி,'

ஆங்கில மொழி மூலம்

ஆத்மிகா முருகையா 9ஏ, ஜனனி கந்தசாமி 6ஏ,2பி,சி,கஜானி விவேகானந்தன் 5ஏ,3பி,சி, தாரிகா இரவிச்சந்திரன் 5ஏ,2பி,2சி.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

9ஏ

சாலுஜா இலங்கேஸ்வரன், வேணிகா லோகேந்திரன், தட்சாயினி விக்னேஸ்வரநாதன் .

8 ஏபி

கிர்சிகா கந்தசாமி, மதுசா குணசேகரன், மகேந்திராஜா மிரோசன், பாலசுப்பிர மணியம் ஐங்கரன்.

8 ஏ எஸ்

ராஜேந்திரன் மோகன்ராஜ், பிறேமதாசன் சயந்தன், அனோஜா தயானந்தன்.

7 ஏ 2 பி

கிறிஸ்ரின் கஜான மகேஸ்வரன், ரேணுகா வரதராஜா, தனுஷா தனபாலசிங்கம், தெய்வேந்திரகுமார் தனுஜன்.

7 ஏ பி சி

லக்ஷிகா செல்வகுமார், பிரிந்தாயினி பிரேமச்சந்திரன் , சிவலட்சனன் தயாபரன்.

5 ஏ 3 பி

நிவேதிகா ரவீந்திரன், வினோதினி விஸ்வநாதன், தங்கவேலாயுதம் இளங்குமரன், நாகராஜா பிரசாந்.

6 ஏ 2 பி சி

செல்வராஜா சுலக்சன், நடராஜா சிவகரன், கருணாநிதி கஜானன், சுழுஜெனனி லிங்கரத்தினம்.

6 ஏ 2 பி எஸ்

யஸ்மிதா கதிர்காமநாதன்.

பானுஜா கணேசமூர்த்தி 5 ஏ 4 பி, சண்முகலிங்கம் துசிந்தன் 5 ஏ 3பி சி, மாதங்கி சிவகுமாரசர்மா5 ஏ, 3பி, சி, ஸ்கந்தா கபோல்ராஜ் 5 ஏ 3பி எஸ்.

கிருஸ்ணராஜா சயித்தன் 5 ஏ 2பி 2சி, குகனேசன் தர்சன் 5 ஏ 2பி 2சி, சதீஸ்குமார் சஜந்தன் 5 ஏ 2பி 2சி, வினுஷா ஜெயசீலன் 5 ஏ 2பி 2சி, சற்குணராஜா குகப்பிரியன் 5 ஏ பி 3சி, சிவஞானரட்ணம் இளவேந்தன் 5 ஏ 3சி 2எஸ், விஜயரட்ணம் செந்தூரன் 5ஏ 2சி 2எஸ், சிவராசா நிமலன் 5ஏ, 2சி, 2எஸ்.

ஆங்கில மொழி மூலம்

சுதாகரன் சிவானுஜன் 8 ஏ சி, போதநிதி மகேஸ்வரன் 7 ஏ பிசி, கவினஜா சரவணபவானந்தன் 6 ஏ 2பி சி.

(வ)

---

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பண விவகாரங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டிய நாள். சுயநலமாகச் செயற்படும் சிலரை அடையாளம் கண்டு ஒதுங் கிக் கொள்வீர்கள். போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சல்களுக்கு ஆளாகலாம். தேக ஆரோக்கிய குறைவுகளால் அவதிப்படலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.



**இடபம்:** சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். பழைய நண்பர் ஒருவரை திடீரெனச் சந்திக்க நேரிடலாம். அவசரச் செலவுக்காக சிலரிடம் கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பீர் கள். முகவர் தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. மதிப்பு, கௌரவம் மேம்படும்.



**மிதுனம்:** விழிப்புணர்வோடு செயற்பட்டு எதிலும் வெற்றி காணும் நாள். குடும்பப் பெரியவர்கள், உங்களுக்கு பண உதவி செய்வதாக கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவர். மகிழ்ச்சியான பயணங்கள் செல்ல நேரிடலாம். வீட்டுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியைக் கேட்கலாம்.



**கடகம்:** பணவரவுகளைப் பெறும் நாள். உறவினர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தீர்த்து வைப்பீர்கள். கடந்த சில தினங்களால் நீடித்த தட்டுப்பாடான நிலைமை அகலும். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர் விற்கு வரும். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு உற்சாகம் பெறுவீர்கள். அரசு காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும்.



**சிங்கம்:** எதிலும் சிந்தித்து புத்திசாலித்தனமாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக்கலாம். பெண்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து நன்மை பெறுவீர்கள். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம்.



**கன்னி:** நினைத்தது நடக்கவில்லை என்றாலும், நினைக்காத ஒன்று நடக்கும் நாள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் ரீதியான பயணங்களை மேற்கொள்ளலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கை அவசியம். முடிந்து விட்டதாக நினைத்து பிரச்சினை ஒன்று, மீண்டும் தலை தூக்கலாம்.

**நாளை**

பங்குனி 16 வியாழக்கிழமை 29.03.2012
திதி: ஷஷ்டி காலை 07.41 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ. 02.46 வரை
சுபநேரம்: 07.43- 09.13 வரை
ராகு காலம்: 01.43- 03.13 வரை



**துலாம்:** பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். கடனாக வாங்கிய பணத்தை, உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகும். உங்களின் திறமையை, மற்றவர்கள் மறைக்க முற்படலாம். வீண் பழிகளைத் தவிர்க்க, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. மறதியால் அவதியுண்டு.



**விருச்சிகம்:** உங்களைத் திட்டித் தீர்த்தவர்களே பாராட்டும் நாள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகள் இருந்தாலும், அனைத்தையும் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செய்வீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களுக்கு முக்கியத்துவம் அதிக ரிக்கும். தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். நண்பர்கள் சிலருக்கு கடன் உதவி செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.



**தனுசு:** எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வந்து சேரலாம். புதிய வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள் உங்களின் மனம் போல் நடந்து பெருமைப்படுத்துவர். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த, ஒரு இடத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டும்.



**மகரம்:** எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களின் உதவி நாடி வரலாம். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். தாய் வழி உறவுகளால் அனுகூலம் பெறலாம். நீங்கள் வெளியிடங் களுக்கு செல்லும் போது, அங்கு நண்பர் ஒருவரைப் பார்க்கலாம்.



**கும்பம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் சில வேலைகளை, மற்றவர்களை நம்பி ஒப்படைக்கலாம். சேமித்த பணம் ஒன்றுக்கு திடீரென செலவு ஏற்படலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். பணி புரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரிடலாம். அலைச்சல் கூடும்.



**மீனம்:** செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிக்கும் நாள். வேலை தேடுவோர் அனுகூலமான செய்திகளைக் கேட்கலாம். தொட்ட காரியம் துளிர் விட்டு வளரும். பேராசைகளைத் தவிர்த்து எதிலும் நிதானமுடன் செயற்படுவீர்கள். மாற்று மத அல்லது மாற்று மொழி பேசும் நண்பர்கள் மூலம், முக்கிய வேலை ஒன்றை முடிப்பீர்கள். கலகலப்பான அனுபவங்கள் உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 2 | | 6 | 5 | |
| | | | 6 | 4 | 7 | 1 | | |
| 1 | | | 5 | 8 | | | 9 | |
| 3 | 1 | | | | 4 | 9 | | |
| 2 | | | | | | | | 1 |
| | | 4 | 7 | | | | 2 | 3 |
| | 6 | | | 7 | 2 | | | 5 |
| | | 5 | 4 | 6 | 8 | | | |
| | 2 | 8 | | 1 | | 3 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 5 | 2 | 7 | 8 | 6 | 3 | 1 |
| 1 | 7 | 8 | 6 | 5 | 3 | 9 | 2 | 4 |
| 2 | 6 | 3 | 1 | 9 | 4 | 7 | 5 | 8 |
| 3 | 8 | 4 | 7 | 2 | 5 | 1 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 8 | 9 | 3 | 7 | 2 |
| 7 | 9 | 2 | 3 | 6 | 1 | 8 | 4 | 5 |
| 8 | 2 | 7 | 5 | 3 | 6 | 4 | 1 | 9 |
| 5 | 1 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 |
| 4 | 3 | 9 | 8 | 1 | 2 | 5 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மாநகரசபை யாழ்ப்பாணம்
## விளம்பரம் பற்றிய அறிவித்தல் - 2012

**விளம்பரங்கள் அமைத்தல்/ காட்சிப்படுத்தல்**

எமது மாநகரசபையின் நிர்வாக எல்லைக் குட்பட்ட பொது வீதிகளின் இரு மருங்கிலும், மற்றும் ஏனைய இடங்களிலும், அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும், காட்சிப்படுத்தப்பட்டும் உள்ள அனைத்து விளம்பரங்களும் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் எமது சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் அனைத்தும் முன் அறிவித்தல் எதுவுமின்றி மாநகரசபையினால் அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*27.03.2012.*

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
**மாநகர முதல்வர்,**
(சி/184) (6-9-12) **மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலகம்**
**ஆதனப் பெயர் மாற்றம்**

ஆதன இலக்கம் 112/6, 112/7 அரியாலை வீதி, வட்டாரம் - 11

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் - 11, அரியாலை வீதியில் உள்ள 112/6 எனும் இலக்க ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் - திருமதி T.வள்ளியம்மை எனும் பெயரிலும் 112/7 எனும் இலக்க ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் - திருமதி S.சத்தியபாமா எனும் பெயரிலும் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதனங்கள் தங்களின் 60 வருடகால ஆட்சிக்குட்பட்டது எனவும் வெளிப்படுத்தி உறுதி இலக்கம் 3741/20.11.2011 மூலம் 5 பரப்பு 7.8 குளியும் உள்ள ஆதனத்தையும் உறுதி இலக்கம் 3742/ 20.11.2011 மூலம் 4 பரப்பும் 4.36 குளியும் உள்ள ஆதனத்தையும் சண்முகம் பெண் சத்தியபாமா எனும் பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள்.

இந்த ஆதனங்களுக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகம் பெண் சத்தியபாமா என்பவரிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**ப. வசந்தகுமார்,**
**தலைவர், நல்லூர் பிரதேச சபை.** (C\185) (6,9,10) 28.03.2012

## காளை இடித்ததில் ஒருவர் சாவு

காளைமாடு இடித்ததில் ஒருவர் மரணமானார்.

அவரது சடலம்தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் அளவெட்டி தெற்கு, குருவளையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இதேஇடத்தைச்சேர்ந்த கந்தையா சற்குணானந்தன் (வயது-55) என்பவரே மரணமானவராவார். வயலில்மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த காளையை இரவு நேரம் அவிழ்த்து வரச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம் பெற்றது. (4)

## தவறிவிட்டது

இல. 141/03, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோபால பிள்ளை சிவசக்தி என்பவரது தேசிய அ. அட்டை, கனடா, குடியுரிமை அனுமதி அட்டை, வைத்திய அட்டை என்பவற்றுடன் முக்கிய ஆவணங்களும், சிறுதொகைப் பணமும் அடங்கிய பேர்ஸ் வவுனியா - யாழ்ப்பாணம் அரைச் சொகுசு பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத் தரவும்.

**தொடர்பு:**
**0775995862**




## மரண அறிவித்தல்

### சின்னப்பு நடராஜா

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு - நடராஜா நேற்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான - சின்னப்பு - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் குமுதினி (நோர்வே), ஜெயந்தினி, ரவீந்திரன், இந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரன் (நோர்வே), நாகேந்திரன், லலிதா (லண்டன்), சுகிதா ஆகியோரின் அன்பு மாமனும், தரணிகா, தரன் (நோர்வே), மீரா, பிரியந்தன், அபுர்ணன், சர்மிலன், சர்மிக்கா, புலேயன், அட்சகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சரஸ்வதி, அமரர் இராஜதுரை, நாகராஜா, தம்பிராஜா, தியாகராஜா, மகேஸ்வரி, அமரர் செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

*தகவல்:*
குடும்பத்தினர்
வரதன் *(மகன்)*

## கண்ணீர் அஞ்சலி



### அருணாசலம் சுவாமிநாதன்

**(சைவம்)**

(26.03.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது கழக மூத்த உறுப்பினர் அருணாசலம் சுவாமிநாதன் (சைவம்) அவர்களின் மறைவை ஒட்டி ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருநெல்வேலி இந்து
வாலிபர் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா சதாசிவம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சதாசிவம் நேற்று முன்தினம் (26.03.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் கனகரத்தினம், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சின்னராசா, காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் பொன்னையா, ஆறுமுகம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (கனடா), தெய்வேந்திரராசா (கனடா), புஸ்பராணி (சங்கானை), காலஞ்சென்ற ஞானேந்திரராசா மற்றும் பத்மாவதி (மாதகல்), சந்திராவதி (ஹொலண்ட்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசாத்தி வீதி,
மாதகல்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### செல்லத்துரை சண்முகராசா (மணி)



**(முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளர்)**

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், வட்டக்கச்சி, புதுக்காட்டில் வசித்து தற்போது கொழும்பு - 15 (மோதரை) இல் வசித்து வந்தவருமாகிய செல்லத்துரை சண்முக ராசா (மணி) (26.03.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மாவின் அன்பு மகனும், புஸ்பவதியின் (புஸ்பி) அன்புக் கண வரும், கணேசலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் மருமகனும், கம்சன் (யாழ்ப் பாணம்), நளினி (கனடா), தட்சன், ஜீவிதன், யாளினி (நதி - முத்துவல் இந்துக்கல்லூரி பழைய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (கலா ஸ்ரோர்ஸ் - மட்டக்களப்பு), சிவராசமதி (மதி), சிவகாமசுந்தரி (ஆனந்தி), செல்வராணி (ராணி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நவரட்ணம் (நவம் - முன்னாள் CTB நடத்துனர்) மற்றும் மாணிக்கவாசகம், துரைராசா (சுவிஸ்), சரஸ்வதி, பன்னீர்ச்செல்வம் (பன்னீர் - கனடா), மோகனகாந்தன் (மோகன்- பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், திருட்செல்வம் (கதிர்காமர்), மகேஸ்வரி (ராசாத்தி - கனடா), பூங்கோதை (ஆசிரியர் - கனடா), ரஞ்சிதா (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் சங்கீதா, பிரபாகரன் (பிரபா - கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், தபேஸின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பூதவுடல் நாளை (29.03.2012) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைக்காக பொறளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

362/14, அளுத்மாவத்தை றோட்,
கொழும்பு - 15.
Email: sskamsan@gmail.com.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மானிப்பாய் மகளிர்-மாதகல் சென்.ஜோசப்

# இறுதியில் மோதல்

### 19 வயதுப் பெண்கள் உதைபந்தாட்டத்தில்



**ஸ்கந்தா வீராங்கனைகளின் தவறால் இலவசமாகக் கிடைத்த கோல் உதவியுடன் முன்னிலைபெற்று, மானிப்பாய் மகளிர் கல்லூரி தானும் ஒரு கோல் அடித்து இறுதிக்கு முன்னேறி மாதகல் சென். ஜோசப் வீராங்கனைகளுடன் மோதவுள்ளது.**

வலி. வடக்கு மார்ச் 28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் விளையாட மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயமும் தகுதி பெற்றுள்ளன.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 19 வயதுப் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இடம் பெற்றன.

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீராங்கனை ஒருவர் பந்தை தடுத்தாட முற்பட்ட போது, தவறுதலாக அந்தப் பந்து அவரது அணியின் கோல் கம்பத்துக்குள் புகுந்துகொண்டது. இதனால் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இனாமாக ஒரு கோல்கிடைத்ததால் பாதி ஆட்டத்தில் அந்த அணி முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீராங்கனைகள் ஒரு கோலை அணிக்காக அடித்தனர். ஸ்கந்தா வீராங்கனைகள் பதிலுக்கு கோல் போட முயன்றபோதும் அந்த முயற்சி நிறைவேறவில்லை. இதனால் ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 02: 00 என்ற கோல்கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயமும் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பத்திலிருந்தே சென். ஜோசப் மகா வித்தியாலயத்தின் கையே மேலோங்கியிருந்தது. முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்த சென். ஜோசப் மகா வித்தியாலம் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் இரண்டு கோல்களை அடித்தது.

ஆட்ட நிறைவில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம் 04: 00 என்ற கோல் கணக்கில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (ஙு-86)

## வவுனியா வலயமட்ட போட்டி முடிவுகள்

வவுனியா, மார்ச் 28

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்டப்போட்டிகளில் மேசைப்பந்தாட்டம், சதுரங்கம், கரம் என்பவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவான பாடசாலைகளின் விவரம்-

**ஆண்கள் பிரிவு**

**மேசைப்பந்தாட்டம்**
தமிழ் மத்திய மகாவித்தியாலயம், அல்-இக்பால் முஸ்லிம் மாகா வித்தியாலயம்.

**சதுரங்கம்( 15 வயது)**
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், விபுலானந்தாக் கல்லூரி, வெளிக்குளம் மகாவித்தியாலயம்.

**சதுரங்கம் (19 வயது)**
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா சி.சி. ரி.எம்.எஸ் வித்தியாலயம்

**கரம் (19 வயது)**
வவுனியா தமிழ் மத்திய மகாவித் தியாலயம்,வீரபுரம் மாணிக்கவாசக மகாவித்தியாலயம், வவுனியா இந்துக் கல்லூரி

**பெண்கள் பிரிவு**

**மேசைப்பந்தாட்டம்**
இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், அல்-இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்

**சதுரங்கம் (15 வயது)**
இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ,வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

**சதுரங்கம் (19 வயது )**
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி.

**கரம் (15 வயது)**
அல்-இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்,சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ,இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி

**கரம் (19 வயது)**
இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி. (ஙு-400)

## முழங்காவில் விநாயகருக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 28

கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழத்தை வெற்றி கொண்டது முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழகம்.

கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நட்பு ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் வி.கவை வெற்றி கொண்டது. (ஙு-23)

## மாவட்டப் போட்டிக்குத் தயார்



வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சம்பியனானது.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன் கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 4 மணிக்கு சிவானந்த விளையாட்டுக் கழக எதிர் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம். (23)

## உதைபந்தாட்டப் போட்டியில் பங்குகொள்ள விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அமரர் இ.கே. குமரையா ஞாபகார்த்தமாக, 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளும் அணியினருக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி பாஷையூர் சென் . அன்ரனிஸ் விளையாட்டரங்கில் மதியம் 1 மணிக்கு இடம் பெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் அணிகள் தங்களது விண்ணப்பங்களை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஙு-23)

## புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தேசிய மொழிகள் மற் றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும், கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கலாசார மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளன.

இதில் ஆண், பெண் களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறும். ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த போட்டி யாளர்களும் பங்கு பற்றலாம் எனவும், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த போட்டியாளர்கள் மாத்திரமே பங்கு பற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது முட்டி உடைத்தல், சறுக்குமரம், கிளித்தட்டு என்பன ஆண்களுக்கான போட்டிகளாகவும் கயிறிழுத்தல் போட்டி பாடசாலை மாணவர்களுக்கான போட்டியாகவும் மற்றும் கிடுகு பின்னுதல், சமநிலை ஓட்டம் என்பன பெண்களுக்கான போட்டிகளாகவும் பழம் சேர்த்தல் போட்டி 6-7 வயது வரையான பாடசாலை மாணவர்களுக்கான போட்டியாகவும், இடம் பெறவுள்ளது.

இந்தப் புத்தாண்டுப் போட்டிகளின் சிறப்பம்சமாக அழகுராணிப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

எனினும் குறித்த அழகுராணிப் போட்டி ஏனைய இடங்களில் நடைபெறுவது போல கலாசாரத்துக்கு ஒவ்வாத வகையில் அமையாது எனவும் மாறாக தமிழ்க் கலாசாரத்தினை மையமாக கொண் டதாகவே இந்த அழகுரா ணிப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஙு-23)

## விநாயகரிடம் வீழ்ந்தது இளஞ்சுடர்

வலி .வடக்கு, மார்ச். 28

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டமொன்றில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகமும் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஒரு கட்டத்தில் சமநிலையில் காணப்பட்டாலும் கூட பின்னர் விநாயகர் விளையாட்டுக் கழகம் நுட்பமாக விளையாடி வெற்றியைத் தனதாக்கியது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களில் விநாயகர் விளையாட்டுக் கழகம் 25:21, 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றிவாகை சூடியது. (ஙு-86)

## புத்தாண்டுச் சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வடமாகாண ரீதியான ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 1ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியானது யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய முன்றலிருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலக முன்றலில் முடிவடையவுள்ளது.

இந்த சைக்கிள் ஓட்டப் போட்டியில் வடமாகாணத்தை வதிவிடமாக கொண்ட போட்டியாளர்கள் பங்கு கொள்ள முடியும் எனவும், போட்டியாளர்கள் தங்களுடைய மாவட்ட விளையாட்டு அதிகாரிகளிடம் தொடர்புகளை மேற்கொண்டு போட்டிக்கான




விண்ணப்பப் படிவங்களை பெற்று அதனை 30 ஆம் திகதிக்கு முன்னர், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சதானாந்தன் கேட்டுக் கொண்டுள்ளனார். (ஙு-23)

## கரம் போட்டியில் மூன்றாம் இடம்

வலி .வடக்கு, மார்ச். 28

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு மகளிர் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரதேச செயலக பெண் ஊழியர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரம் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தை திருமதி எஸ். பத்மராணி பெற்றுக் கொண்டார். (ஙு-86)

# காலியில் சுழல்



காலி, மார்ச் 28

காலி மைதானத்தில் நேற்று வீசிய 'ஹேரத், 'சுவான்' சுழலில் இங்கிலாந்து, இலங்கை அணிகளின் இலக்குகள் சிதைந்து போயின. இதனால் இரு அணிகளும் சொற்ப ஓட்டங்களுடன் தமது துடுப்பாட்ட வீரர்களை இழக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டன.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் இலங்கை அணியின் இலக்குகளை இங்கிலாந்து வீரர்கள் விரைவாகவே தகர்த்தெறிந்தனர். அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன மட்டும் தனித்துப் போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். முதல் நாள் ஆட்ட முடிவின் போது இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றிருந்தது .வெலகெதர 10 ஓட்டங்களுடனும், மஹேல 168 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை ஆரம்பமானது. எனினும் இலங்கை அணி 300 ஓட்டங்களை கடந்த பின்னர் வெலகெதரவை இழந்தது. அதன் பின்னர் வேகமாக ஆட முயன்ற மஹேலவும் 180 ஓட்டங்களோடு வெளியேற இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் 318 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் களம் புகுந்தது இங்கிலாந்து. எனினும் அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலஸ்ரர் குக் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் பந்து வீச வந்தார் ஹேரத். அது வரையும் அமைதியாகக் கிடந்த காலி மைதானத்தில் ஹேரத்தின் பந்து பெரும் சுழலை உருவாக்கியது. அந்தச் சுழலை எதிர்கொள்ள முடியாமல் இங்கிலாந்தின் துடுப்பாட்டத் தலைகள் ஒவ்வொன்றாக விழத் தொடங்கின. இயன்பெல் மட்டும் ஓரளவுக்கு தாக்குப்பிடித்து அரைச்சதம் கடந்தார்.எனினும் அவரும் ஹேரத்தின் சுழலுக்கு 52 ஓட்டங்களுடன் இரை யானர்.

மறுபுறத்தில் ரந்தீவ் தன் பங்குக்கு சுழலின் வேகத்தை அதிகரிக்க 193 ஓட்டங்களுக்கு இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் முற்றுப்பெற்றது. ஹேரத் 6 இலக்குகளைக் கொய்திருந்தார்.

125 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த திமிரோடு களமிறங்கிய இலங்கை வீரர்களை ஒரு கை பார்த்தார் இங்கிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர் சுவான். ஹேரத் தொடக்கி விட்டுப்போன சுழற் சூறாவளியில் சுவானும் தாண்டவமாட இலங்கை அணியின் இலக்குகள் பறக்கத்தொடங்கின. டில்சான் ஓட்டம் எதனையும் பெறாமலும் திரிமன்னே 6 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் மஹேல 5 ஓட்டங்களுடன், சங்கக்கார 14 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

சுவானின் சுழலை ஓரளவுக்கேனும் சமாளித்த சமரவீரவும் 36 ஓட்டங்களுடன் சுவானிடமே சரணடைந்தார். நேற்றைய ஆட்ட இறுதியில்இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சந்திமால் 17 ஓட்டங்களுடனும் ரந்தீவ் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். சுவான் 4 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.

209 ஓட்டங்களால் இலங்கை அணி தற்போது முன்னிலையில் உள்ளது. மூன்றாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். இதன் போது மீண்டும் சுழல் வீசுமா? அல்லது துடுப்புகள் பேசுமா? இன்று மாலைக்குள் அநேகமாக முடிவு தெரிந்துவிடும்.

(ரு)

**இலங்கை எதிர் இங்கிலாந்து** காலி மைதானம்

இலங்கை - 318 & 84/5 இங்கிலாந்து - 193

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ரோஸ் | lbw b ஹேரத் | 26 | 40 | 2 | 0 |
| குக் | lbw b லக்மல் | 0 | 5 | 0 | 0 |
| ரொட் | st பிர.ஜெயவர்த்தன,ஹேரத் | 12 | 24 | 3 | 0 |
| பீற்றர்சன் | b வெலகெதர | 3 | 18 | 0 | 0 |
| பெல் | b ஹேரத் | 52 | 87 | 8 | 1 |
| பிரியர் | lbw b ஹேரத் | 7 | 7 | 1 | 0 |
| பட்டேல் | lbw b ஹேரத் | 2 | 21 | 0 | 0 |
| போட் | lbw b ஹேரத் | 28 | 15 | 5 | 1 |
| சுவான் | c டில்சான் b ரந்தீவ் | 24 | 26 | 6 | 0 |
| அன்டர்சன் | (ஆட்டமிழக்காமல்) | 23 | 26 | 4 | 0 |
| பானேசர் | lbw b ரந்தீவ் | 13 | 11 | 2 | 0 |

இலக்கு இழப்பு: 1-0, 2-40, 3-43, 4-65, 5-72, 6-92 7-122, 8-157, 9-157, 10-193

*உதிரிகள்* 3

மொத்த ஓட்டங்கள் *193*

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வெலகெதர | 11 | 2 | 46 | 1 |
| லக்மல் | 9 | 2 | 45 | 1 |
| ஹேரத் | 19 | 5 | 74 | 6 |
| ரந்தீவ் | 7.4 | 0 | 26 | 2 |

ENGLAND CRICKET

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | b சுவான் | 6 | 23 | 0 | 0 |
| டில்சான் | b புரோட் | 0 | 2 | 0 | 0 |
| சங்ககார | c இயன்பெல் b சுவான் | 14 | 44 | 1 | 0 |
| மஹேல | c அன்டர்சன் b சுவான் | 5 | 7 | 1 | 0 |
| சமரவீர | st பிரையர்,b சுவான் | 36 | 74 | 5 | 0 |
| சந்திமால் | (ஆட்டமிழக்காமல்) | 17 | 38 | 3 | 0 |
| ரந்தீவ் | (ஆட்டமிழக்காமல்) | 2 | 16 | 0 | 0 |


இலக்கு இழப்பு: 1-4, 2-8, 3-14, 4-41, 5-74,

*உதிரிகள்* 4


மொத்த ஓட்டங்கள் *84*

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 5 | 0 | 18 | 0 |
| புரோட் | 5 | 2 | 8 | 1 |
| பனேசர் | 12 | 2 | 28 | 4 |
| சுவான் | 7 | 1 | 19 | 0 |
| பட்டேல் | 5 | 2 | 7 | 0 |

Sri Lanka Cricket



# ஆட்டம் சமநிலையில் தொடர் தென்னாபிரிக்காவுக்கு





நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நியூஸிலாந்தின் வில்லியம்ஸனின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக சமநிலையில் முடிவடைந்துள்ளது.

75 ஓட்டங்களுக்கு இலக்கு இழப்பின்றி நேற்று முன்தினம் ஆட்டத்தை முடித்துக் கொண்ட தென்னாபிரிக்க அணி நேற்றைய தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 189 ஓட்டங்களைப் பெற்றது. இந்த 189 ஓட்டங்களை 3 இலக்குகளை இழந்து 29.4 பந்து பரிமாற்றங்களில் அதிரடியாக தென்னாபிரிக்கா பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஏபி.டி.வில்லியர்ஸ் 49 பந்துகளில் 68 ஓட்டங்களையும், கிரேம் ஸ்மித் 41 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 39 ஓட்டங்களையும், ஜேபி.டுமினி 23 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக டக் பிரேஸ்வெல், விற்றோரி ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

389 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி அல்லது நாளில் மீதமுள்ள பந்து பரிமாற்றங்களை விளையாடி முடித்தால் ஆட்டம் சமநிலை முடிவைப் பெறும் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ஆரம்பம் முதலே இலக்குகளை இழந்தது. ஒரு ஓட்டத்துக்கு முதலாவது இலக்கையும், இரண்டு ஓட்டங்களுக்கு இரண்டாவது இலக்கையும், 32 ஓட்டங்களுக்கு மூன்றாவது இலக்கையும் இழந்து நியூஸிலாந்து தடுமாறியது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த பிறெளண்லி, வில்லியம்ஸன் ஜோடி 51 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற போதிலும் அதன் பின்னர் 83 ஓட்டங்களில் பிறெளண்லியும், விற்றோரியும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்க 83 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து நியூஸிலாந்து தடுமாறியது.

அதன் பின்னர் வான் வைக்குடனும், பிரேஸ்வெல்லுடனும் ஜோடி சேர்ந்து நியூசிலாந்து அணி சமநிலை முடிவைப் பெற வில்லியம்ஸன் உதவினார். துடுப்பாட்டத்தில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தைப் பெற்ற வில்லியம்ஸன் 102 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமலும், வைக் 39 ஓட்டங்களையும், பிரேஸ்வெல் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக வீழ்த்தப்பட்ட 6 இலக்குகளையும் மோர்னி மோர்கல் வீழ்த்தினார். ஏனைய தென்னாபிரிக்க வீரர்களும் சிறப்பாகப் பந்துவீசிய போதிலும், தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் ஏராளமான பிடிகளைத் தவறவிட்டிருந்தது.

முன்னதாக, தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 474 ஓட்டங்களையும், நியூசிலாந்து அணி 275 ஓட்டங்களையும் பெற்றிருந்தன. ஆட்ட நாயகனாக இரண்டாவது இன்னிங்ஸில் 6 இலக்குகளைக் கைப்பற்றிய மோர்னி மோர்கல் தெரிவானார். 3 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

ஜீ.சீ.ஈ. சாதாரண தர சித்தியுடன் பட்டதாரியாகலாம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன்
பதிவு செய்து B.A, B.Com, B.Sc பட்டங்கள்,
மற்றும் M.A, Ph.d
கற்கைநெறியையும் பயிலலாம்.
நடன சங்கீதப் பட்டதாரிக் கல்விக்கும்
அரிய வாய்ப்பு.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை (29.03.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு 20, கல்லூரி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம்பெறும்.

தொலைபேசி- 0778271006, 0772984514

## மரண அறிவித்தல்

### நாகராசா மகேஸ்வரி



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு, அரசடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா மகேஸ்வரி நேற்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் -காசுபதி தம்பதியரின் மகளும், நாகராசாவின் மனைவியும், பாலச்சந்திரன் (U.K.) பாலபாஸ்கரன், கோணேஸ்வரன் (கொழும்பு), கமலதாஸ் (D.R.D.வவுனியா), கலைவாணி ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோணேஸ்வரன் -(மகன்).

அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் O/L DAY CLASS இங்கு மட்டுமே

**O/L DAY CLASS** (8.30 - 2.00)

பிரிவு - I ஆரம்பம் : 30.03.2012 Fri 8.30 Am

- ★ இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே
- ★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- ★ தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி
- ★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்.
- ★ முதல் பிரிவுக்கு 75 மாணவர் மட்டுமே
- ★ பிரிவு II மிக விரைவில்

நிர்வாகி

## A/L - 2014

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம் ஏப்ரில் 7
சனி - காலை 9 மணி

**DMI Jaffna**

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## ஐடியல் அக்கடமி

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ். இந்து மைதானம் அருகில்)

சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய்

இரு இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில்

**O/L DAY CLASS - 2012**

02.04.2012 திங்கள் 8 am

"எமது வழமையான ஆசிரியர் குழாம்"

## தென்மராட்சியில்....

**Brilliant International Studies**
Sangaththanai. Chavakachcheri

திருமணம் மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கான (தூதரக பரீட்சைகளுக்கு) தயாப்படுத்தும்

பிரெஞ் மொழி - French
ஜேர்மன் மொழி - Deutch

புதிய வகுப்புகள் இவ்வாறம் ஆரம்பமாகின்றன.

Contact: Brighten Institute
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே.: 0776679544, 0779265447
Branch-123/2, Temple Road, Jaffna.

## திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam

**Sponsor/Settlement Visa** — DMI COMPUTER EDUCATION

- # British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்
- # City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
- # சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
- # சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel.: 021-226 2470 | No.174, கண்டி வீதி, Tel.: 021-227 0243 |

## தவறிவிட்டது

காளி கோயிலடி, விமன்காமம் தெல்லிப்பழையைச் சேர்ந்த கமலேந்திரராசா சதீஸ்வரன் (810174943V), என்ற இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டை குளப்பிட்டிச் சந்திக்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 0779955008

## ACA

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்
(சுன்னாகம் ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக)

**A/L 2014**

கலை, வர்த்தக கணித உயிரியல் பிரிவுகள்

மாணவர்கள் விரும்பும் பிரபல ஆசிரியர்கள் இப்பொழுது எமது நிறுவனத்தில்...

ஆரம்பம் 31.03.2012 (சனி) மாலை - 3 மணி

**கலை, வர்த்தக பிரிவுகள்**

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு<br>D.SAM | வணி. கல்வி<br>B.S. பசில் | பொருளியல்<br>S.S. சிறி | தமிழ்<br>இரா. அகிலன் |
| நா/அரங்<br>மங்களேஸ் | இ. நாகரிகம்<br>ஜெயக்குமார் | அளவையியல்<br>E.S. பவன் | வரலாறு<br>R.S. சந்திரன் |
| அரசியல்<br>பொன். சந்துரு | புவியியல்<br>தினேஸ் | விவசாயம்<br>சசிகரன் | இ. சமயம்<br>மனோஜ் |
| சித்திரம்<br>மதீஸ் | மனையியல்<br>ரஜித்தா | கிறிஸ்தவம்<br>வசந்தன் | |

**கணித உயிரியல் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| இ. கணிதம்<br>ஐங்கரன் | உயிரியல்<br>குருபரன் | இரசாயனவியல்<br>வாகீசன் | பௌதிகவியல்<br>பார்த்திபன் |

## தவறிவிட்டது

கடந்த 18.03.2012 ஞாயிற்றுக்கிழமை சுண்டுக்குளிக்கும் நுணாவில் சந்திக்கும் இடையில் கொடிகாமம் மினிபஸ்ஸில் பயணம் செய்தபோது தாலிக்கொடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு
021 222 0461, 0774757600.

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினாதேவி பொன்ராசா

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினாதேவி பொன்ராசா நேற்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - பொன்ராசாவின் (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி தொழில்நுட்ப அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இ. கனகசபை - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளிப்பன்லேன்,
வட்டுகிழக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
செ. பொன்ராசா
(கணவர்).

## புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகில்)

**A/L 2014**

கலை, வர்த்தகப் பிரிவு - 2

ஆரம்பம்: 31.03.2012 சனி காலை 8 மணி

★ ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்

அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.

## புதியதோர் உலகம் செய்வோம்

**DCM** ம் குவுக்குத் தெரு, யாழ்நகர் (சென்ற் மேரீஸ் கல்லூரிக்கு அருகாமையில்)


**A/L 2014** பிரிவு 2

**வர்த்தகப்பிரிவு**

| பொருளியல் | கணக்கீடு |
|---|---|
| S.வரதராஜன் B.A(Hons) | A.P.பபீரதன் B.B.A(FM.Spl) |
| வணிகக்கல்வி | ஆரம்பம் : |
| V.முரளி B.B.A(FM.Spl) | 31 - 03 - 12 சனி காலை 8.00 |

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் தெய்வேந்திரம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் தெய்வேந்திரம் நேற்றுமுன்தினம் (26.03.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - யோகம்மா மற்றும் சின்னையா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தியாகராசா, தேவதாஸ், காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சியாமிளா (கனடா), பிறேமிளா (சுவிஸ்), உதயகுமார் (இலங்கை), காலஞ்சென்ற சசிதரன் மற்றும் சுதாகரன் (சுவிஸ்), சாமிளா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சீவரட்ணம் (கனடா), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), பவானி (இலங்கை, பவானி (சுவிஸ்), சிவகுமாரன் (இலங்கை) ஆகியோரின் அருமை மாமனும், விசான், கேசவன் (கனடா), தாரணி (சுவிஸ்), திசிகேசன், தட்சாயினி, திரிசங்கவி (இலங்கை), சபினா (சுவிஸ்), சசி (சுவிஸ்), பிரசன்னா, சானுஜன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் சங்குவேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
சங்குவேலி.

தகவல்:
பரமேஸ்வரி (மனைவி - பரம்)

## O/L DAY CLASS

ஆரம்பம்- திங்கள்-8.30 am

எடிசன் கல்லூரி
கிளிநொச்சி

**A/L 2014**

வர்த்தகப் பிரிவு.
ஆரம்பம்- 28.03.2012.
புதன்கிழமை
நேரம்:- 4 மணிக்கு.
கணக்கீடு-திரு. S.தவா.
பொருளியல்- திரு. S.சத்தியசீலன்
வணிகக்கல்வி- திரு. S.பிரதீபன்

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 டிரக்டர் - 2400/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

## தேவை

விரைவில் ஆரம்பமாகவிருக்கும்
உதயன் இணைய வானொலிக்கு



அறிவிப்பாளர்
நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
தேவை

ஆர்வமுடையவர்கள் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் (புதன், வியாழன், வெள்ளி) சமுகமளிக்கவும்.

**359, Kasthuriyar Road, Jaffna**
**T.P 0215672222**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அறிவைக் காட்டிலும், கற்பனை கூடுதலான முக்கியத்துவம் உடையது.
ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

# புதன் பொய்கை A

உதயன் | 28 மார்ச் 2012 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு

# புதுமைகள் படைத்திடு! புவனம் வென்றிடு!



**நம்முடைய சுவாசமும் எண்ணங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. சுவாசத்தின் வேகம் அதிகரித்தால் எண்ணத்தின் வேகமும் அதிகரிக்கும்.**

மனித மூளையின் அமைப்பு வலது, இடது என்று இரண்டு அரைக் கோளங்களாக (Hemi sphere)இருப்பதை அறிவியல் பாடத்தில் அறிந்திருப்போம். அவை வலது பக்கத்து மூளை, இடது பக்கத்து மூளை.

இடது பக்க மூளை ஐம்புலன்களோடு தொடர்புடையது. நாம் விழித்திருக்கும் போது அல்லது உணர்வோடிருக்கும் போது ஐம்புலன்வழி வருகிற, கிடைக்கிற செய்திகளைப் பகுத்து, தொகுத்து, ஆராய்ந்து ஒரு தீர் மானத்துக்கு வந்து, அந்த அனுபவங்களைப் பகுக்கும் போதும், தொகுக்கும் போதும் உண்டான எண்ணங்களை அப்படியே வலது பக்கத்து மூளைக்கு அனுப்பி வைக்கிறது.

இந்த இடது பக்கத்து மூளை விழித்துக் கொண்டிருக்கும் போது மட்டும் செயல்படுகின்றது. இதனை நினைவு Conscious Mind, Rational Mind, Objective Mind, Waking Mind, Surface Mind, Voluntary mind, male Mind என்று பல்வேறு பெயர்களால் அழைக்கலாம்.

இந்த இடது பக்கத்து மூளை சிந்திக்கின்ற வேலையைச் செய்கின்றது. கணக்குப் போடும் வேலையை, காரண காரியங்களைக் கண்டறிகின்ற வேலையைச் செய்கின்றது.

ஆனால், இந்த வலது பக்கத்து மூளையோ சிந்திக்கின்ற வேலையைச் செய்யாமல் இடது பக்கத்து மூளை தருகின்ற ஒட்டு மொத்த சிந்தனைகளையும், அனுபவங்களையும் அப்படியே வாங்கி, அது உண்மையாக இருந்தாலும், பொய்யாக இருந்தாலும், நிஜமான அனுபவங்களாக இருந்தாலும், கற்பனையான அனுபவங்களாக இருந்தாலும் அவற்றைப் பதிய வைத்துக் கொள்ளுகின்ற நினைவு வங்கியாக (Mem ory Bank) கணினியின் பதிவுத் தகடு போல செயல்படுகிறது.

நாம் விழிப்பு நிலையில் இருந்தாலும் உறக்க நிலையில் இருந்தாலும் உயிரோடு இருக்கின்ற எல்லாக் காலங்களிலும் தொடர்ந்து வலது பக்க மூளை செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறது. வலது பக்கத்து மூளை உடலின் இயக்கத்துக்குத் தேவையான எல்லா உறுப்புகளின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்ற வேலையைச் செய்கின்றது. சுயமாக சிந்திப்பது என்கின்ற ஆற்றல் அற்றது போலத் தோன்றுகிறது. இதனை ஆழ் மனம், Sub Concious Mind, Subjective Mind, Sleeping Mind, Deep Mind, Involuntary Mind, Female Mind என்று பல்வேறு பெயர்களால் அழைக்கலாம்.

இந்த வலது பக்க ஆழ்மனம் இடது பக்க நினைவு மனப்பகுதியால் வழிநடத்தப்பட்டு மிகப் பெருஞ்சக்தியாக, எல்லாவற்றுக்கும் தீர்வுகளைப் பெற்றுத் தருகிற, அற்புதங்களை ஆற்றுகிற, அரேபியக் கதைகளில் வருகின்ற, அலாவுதீனின் அற்புத விளக்குபோல, இந்திய இதிகாச, புராணங்களில் சொல்லப்படுகின்ற காமதேனுவாக, கற்பகதருவாக செயல்படுகின்றது.

இந்த நினைவிலி மனம் என்று சொல்லப்படுகிற வலது பக்க மூளையே ஆழ் மனம். இதுவே கற்பனையின் நிலைக்களன். இதனைப் பயன்படுத்த அறிந்து கொள்கிறபோதுதான் புதியன படைக்கவும் உருவாக்கவும் நம்மால் இயலுகிறது.

சாதாரணமாக மனிதர்களின் இன இயக்கம் ஆல்பா, பீட்டா, தீட்டா, டெல்டா என்று நான்கு நிலைகளில் இயங்குவதாக சித்தர்களும், ஞானிகளும், அறிவாளர்களும் அறிந்து கூறுகின்றார்கள்.

அல்பா நிலையில் மன இயக்கம் 8 முதல் 13 சுற்றுகளுக்குள்ளும் (Cycles/Sec)

பீட்டா நிலையில் 14 சுற்றுகளுக்கு மேல் 40 சுற்றுகள் வரையிலும்

தீட்டா நிலையில் 4 முதல் 7 சுற்றுகளுக்குள்ளும்

டெல்டா நிலையில் 3 சுற்றுக்களுக்கும் கீழாகவும் வீ சுற்று வரையிலும் மனம் இயங்குவதாகக் குறிப்பிடுகின்றார்கள்.

பீட்டா நிலை என்பது விழிப்பு நிலை. உணர்ச்சிவயப்பட்ட மனம். வேகமாக இயங்கும் நிலை(Active and Agitated State).

ஆல்பா நிலை என்பது விழிப்பும், உறக்கமும் அற்ற தூங்காமல் தூங்கும் தியான, மோன நிலை (A Hypn otic State)

தீட்டா என்பது ஆழ்ந்த உறக்க நிலை (Sleeping State)

**டெல்டா என்பது சமாதி நிலை**

நாம் விழித்துக் கொண்டிருக்கும் போது ஐம்புலன்களும் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பதால் தொடர்ந்து தகவல்களை ஆராய்ந்தும் தொகுத்தும், பகுத்தும் கொண்டிருப்பதால் நினைவு மனம் அதிக இயக்கத்திலும் அதாவது விழிப்பு நிலையிலும் ஆழ் மனம் (Sub Conscious Mind) உறங்குவது போன்ற நிலையிலும் இருக்கிறது.

உறங்குவது போன்ற நிலையில் இருக்கின்ற ஆழ்மனத்தை வலது பக்க மூளையை விழிப்படையச் செய்ய, அதாவது செயல்படச் செய்ய நினைவு மனத்தின் (Concious Mind) செயல்பாடுகளை, இயக்க நிலையைக் குறைக்க வேண்டும். நம் ஐம்புலன்களுக்கும் உள்ள உலகத் தொடர்புகளைத் துண்டித்தால் நினைவு மனத்தின் செயல் குறையும்.

கண்களை மூடி உடலின் எந்தப் பகுதியிலும் இறுக்கமில்லாமல், தளர்வாக, வசதியாக, பத்மாசனத்திலோ, சுகாசனத்திலோ அல்லது கால் பாதங்கள் தரையில் படிந்த நிலையில் நாற்காலியில் முதுகு, தலை நேராக இருக்கும் படி நிமிர்ந்து அமர்ந்த நிலையிலோ, இன்னும் சொல்லப் போனால் படுத்த நிலையிலோ (படுத்த நிலை உறக்கத்தை உடனே வரவழைத்து விடுவதால், உறக்கம் நினைவு மனத்தின் செயற்பாட்டை முழுவதுமாகத் தடை செய்து விடுவதால் இந்த நிலை பரிந்துரைக்கப்படுவதில்லை) ஓய்வான மன நிலையில் நம்முடைய மூச்சின் மீது கவனம் செலுத்தும் போது எண்ண அலைகள் அடங்கி மனம் அமைதியுற்று நினைவு மனத்தின் செயல்பாடு குறைகிறது. ஆழ்மனம் விழிப்படைய, செயல்படும் நிலையையடையத் தொடங்குகிறது.

நம்முடைய சுவாசமும் எண்ணங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவைகள். சுவாசத்தின் வேகம் அதிகரித்தால் எண்ணத்தின் வேகமும் அதிகரிக்கும். ஆழ்ந்த சுவாசத்தை எடுத்து மெதுவாக காற்றை வெளியேற்றும் செயலைக் கவனிக்கத் தொடங்கும் போது புதிய எண்ணங்கள் உருவாவதும், உருவான எண்ணங்களின் பின்னால் தொடர்ந்து செல்வதும், எண்ணங்களே வேண்டா மென்று நிராகரிப்பதும் நிகழ்வதில்லை. எண்ணமற்ற வழிக்கு இதுவே வழி: எல்லாத் தியான முறைகளையும் தொடங்கு வதற்கு இந்த முறையைத்தான் பரிந்துரைக்கிறார்கள். குறிப்பாக அட்டாங்கயோகத்தின் சமாதி நிலையை அடைய இதுவே வழி.

பிரபஞ்ச அறிவிலிருந்து தேவையான செய்திகளைப் பெறமுடியும் என்று பெஞ்சமின்ஃபிராங்கிளின் போன்ற அறிஞர்கள் நம்பியிருக்கிறார்கள். எடிசன் போன்ற அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் பிரபஞ்ச அறிவிலிருந்து செய்திகளைப் பெற்றுமிருக்கிறார்கள்.

ஆழ் மனம் நம்மை இந்தப் பிரபஞ்ச மனத்தோடு இணைக்கும் பாலமாகும் நடுவில் இருக்கும் மனம். நாம் விரும்புவது எதுவாக இருந்தாலும் நாம் எந்த நிலையிலிருந்தாலும், பெற்றுத் தரும் ஆற்றல் வாய்ந்த பொக்கிஷம். இதற்காக பெஞ்சமின்ஃபிராங்கிளின் ஒரு உத்தியைப் பின்பற்றியிருக்கிறார்.

பெஞ்சமின்ஃபிராங்கிளின் கையில் ஒரு கூழாங்கல்லை வைத்துக் கொண்டு ஒரு சாய்வு நாற்காலியின் கைப்பிடியின் வெளியே கை இருக்குமாறு வைத்துக் கொண்டு தளர்வாக ஓய்வாகக் கண்களை மூடி அமர்ந்து கொண்டு உறங்குவது போல் இருப்பாராம். உறக்கம் வருகின்ற போது கைப்பிடி தளர்ந்து கூழாங்கல் தரையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு உலோகத் தகட்டின் மீது விழுந்து ஒலி உண்டாக்கும். அந்த நிலை தூங்காமல் தூங்கும் ''அறிதுயில்'' என்கிற ஆல்பா தியான நிலை.

இந்த நிலையில் தன்னுடைய பிரச்சினைகள் குறித்துச் சிந்திக்கும் போது மின்னல் கீற்றென சில சிந்தனைகள், விடைகள், தீர்வுகள் உண்டாகும். அவை பிரபஞ்சப் பதிவிலிருந்து கிடைக்கும் செய்திகள். இந்த வகையான செயல்பாட்டுக்குப் பின்னர் நாம்இதை மறந்து இருக்கும் பொழுது சில நேரங்களில் திடீரென்று சில சிந்தனைகளை மனம் உருவாக்கித் தரும். மனதைக் கசக்கிப் பிழிவதை விட (Brain Storming) வலிந்து சிந்திப்பதை விட ஓய்வாக, மகிழ்ச்சியாக இருக்கும் போதே கற்பனை ஊற்றெடுக்கும்.'

கற்பனை, படைப்பாற்றல், புதியன உருவாக்கல் என்பது மாற்றி யோசிக்கிற ஒருமுறை.

நேரடிச் சிந்தனை (Straight Thinking) கணக்குப் போடுவது போல. பக்கவாட்டுச் சிந்தனை (Lateral Thinking) என்பதுதான் புதிய சிந்தனை. மாறுபட்ட சிந்தனை, கற்பனை.

இப்படி மாற்றி யோசிக்கிற Lateral Thinking இல்லையென்றாலும் Permut ation Combination என்கின்ற முறையில் புதியன உருவாக்க எளிய வழிமுறையில் முயலலாம். பூச்சியம் முதல் ஒன்பது வரை பத்து இலக்கங்களை வைத்துக் கொண்டு எல்லையற்ற (Infinite Numbers) புதிய எண்களை உருவாக்குவது போல எல்லா வகையிலும் மாற்றி மாற்றி இணைத்துப் புதியன படைப்பது எளிது. இதற்கு மனமும் முயற்சியுமே தேவை.

புதியன படைக்கின்றவர்கள் சாதனையாளர்கள், திறமைசாலிகள், வணங்கத்தக்கவர்கள்.

**மாற்றியோசித்தால் மாநிலமே பாராட்டும்**

புதியன படைக்கப்படுகின்றபோது மகிழ்ச்சியும், ஆனந்தமும் பிறக்கின்றன. மனித மணங்கள் படைப்பாளிகளால் கவரப்படுகின்றன.


புதிய பயன்பாட்டுக்கு எளிமையாகவும், மனத்தளர்வு நீக்குவதாகவும், சலிப்பு போக்குவதாகவும் அமைகின்றன.

புதிய சிந்தனைகளும், கற்பனைகளுமே உலக மாற்றங்களுக்கு வழி.

கற்பனை செய்ய முடியாதவை நிஜத்தை அடைவதில்லை. கற்பனைக் கோட்டைகளே நிஜக் கோட்டைகளுக்கு அடிப்படை. வெற்றிக்குத் தேவை கற்பனைத் திறன்.

கற்பனை காலத்தை வெல்லும். செல்வத்தைச் சேர்க்கும். ✸

# மனித முகத்தில் பிறந்த விநோத ஆட்டுக்குட்டி



தமிழ்நாட்டில் கோவையில் மனிதனின் தலை போன்ற விநோத தோற்றத்தில் ஆட்டுக்குட்டி பிறந்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

கோவையைச் சேர்ந்த முத்துசாமி என்பவர் வளர்த்த ஆடு ஒன்றே இந்த ஆட்டுக் குட்டியை ஈன்றுள்ளது.


இந்தக் குட்டி வழக்கமாக இருக்கும் ஆட்டுக்குட்டியை போல் அல்லாமல் மனிதரின் முகத்தை ஒத்துக் காணப்பட்டது. சிறிது நேரத்தில் இந்த ஆட்டுக்குட்டி இறந்து விட்டது. இது குறித்து முத்துசாமி தெரிவித்ததாவது:

எங்கள் ஆடு, முதல் முறையாக குட்டி ஈன்றது. ஆனால் அது முற்றிலும் விநோதமான முறையில் காணப்பட்டது.


கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இதே பகுதியில் ஒரு ஆடு, தலையில்லாத ஆட்டுக்குட்டியை ஈன்றது.

தற்போது மனித முகத் தோற்றத்துடன் ஆட்டுக்குட்டி ஈன்றது எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது– என்றார்.

# உலகிலேயே மிகப் பெரிய சாய்வு நாற்காலி




கோடைக் காலத்தை முன்னிட்டு பிரிட்டனில் உள்ள கடற்கரையில் உலகிலேயே மிகப்பெரிய சாய்வு நாற்காலி சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வைக்கப்பட்டுள்ளது.



இந்த நாற்காலி 8.5 மீற்றர் உயரமும், 5.5 மீற்றர் அகலத்தைக் கொண்டது. இரண்டு அடுக்கு பேருந்தின் உயரத்தைக் காட்டிலும் உயரமாகும்.

# உலகிலேயே மிகச் சிறிய சலவை இயந்திரம்



நம் ஆடைகளை சுத்தம் செய்வதை இலகுவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சலவை இயந்திரம் தற்போது மிகச்சிறிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது பை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

180 கிராம் நிறையைக் கொண்டுள்ள இந்தச் சலவைப்பையானது இடத்திற்கு இடம் எடுத்துச் செல்ல முடியும் என்பது விசேட அம்சமாகும். இதில் ஒரே தடவையில் 2 தொடக்கம் 3 லீற்றர் வரையிலான நீரைப் பயன்படுத்த முடிவதுடன் ஷம்போ, சலவைத் தூள்கள் போன்றவற்றை பயன்படுத்தி 20–40 நொடிகளில் சலவை செய்ய முடியும். இந்த இயந்திரம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் சந்தைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# ஆமையின் மேல் பயணிக்கும் நாய்க்குட்டி

மனிதர்களால் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் நாய்க்குட்டி தனது எஜமானியுடன் பயணம் செய்வதைத்தான் பார்த்திருப்போம்.

ஆனால் இங்கு காணப்படும் நாய்க்குட்டி ஒன்று எந்த விதமான பயமுமின்றி ஆமையின் மேல் அமர்ந்து தனது பயணத்தை மேற்கொள்கிறது.



# பேனா வடிவிலான ரோபோ



படிக்கும்போது அதிகளவு எழுத்து வேலைகளால் நீங்கள் சோர்ந்து போயிருப்பீர்கள். இதனைப் பற்றி எதிர்காலத்தில் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதாவது மனிதனின் எழுத்து வேலைக்கான பழுவை குறைப்பதற்க்கு மிகச்சிறிய பேனா வடிவிலான ரோபோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உங்கள் சட்டைப்பையில் எடுத்துச் செல்லக்கூடிய இந்த மிகச்சிறிய ரோபோ பிரிட்டனில் உருவாக்கப்பட்டுள்ளது. முப்பரிமாண, இருபரிமாண உருவங்களை வரைவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 70 அமெரிக்க டொலர்களிலும் குறைவாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வீதியை சுத்தமாக்கும் வாகனம்





பொதுவாக வீதிகளைச் சுத்தம் செய்வதில் பெரும்பாலான நாடுகளில் மனிதர்களே ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு மனிதர்கள் ஈடுபடும் செயலில் தற்போது வக்யூம் கிளீனரை கொண்ட ஐதரசன் சக்தியில் இயங்கும் வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்துக்கு 0.3 தொடக்கம் 0.6 கிலோகிராம் வரையான ஐதரசன் எரிபொருளை நிரப்புவதன் மூலம் ஒரு மணித்தியாலம் தொடர்ச்சியாக இயக்கவைக்க முடியும்.

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (39)

## விதி எண்படி உயர்வு தாழ்வுகள்

பிறந்த திகதி மாதம் வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண்ணே விதி எண் ஆகும். இதனை வாழ்க்கை எண் என்றும் கூறலாம்.

**விதி எண் 1**

சுதந்திரமாக செயலாற்றுபவர்கள்.அடுத்தவர்கள் கருத்துக்கு செவி சாய்க்க மனமிருக்காது. எப்போதும் மறுத்துப் பேசும் குணமுடையவர்கள். தன்னிச்சையாக சிந்திப்பவர்கள். சுயமாகத் திட்டமிட்டு வெற்றி பெறுபவர்கள். முதல்நிலை அடையவே விரும்புவார்கள். தீர்க்கமான முடிவெடுக்கக் கூடியவர்கள். பிறருக்கு உத்தரவு பிறப்பித்துக் கொண்டேயிருப்பார்கள். பிறருடைய செயல்களில் குறுக்கிடுவார்கள். தேவையின்றி ஆலோசனை அளிப்பார்கள். அடிக்கடி வெறுப்படைவார்கள். சுயநலமிக்கவர்கள்.

**விதி எண் 2**

எந்தவொரு செயலிலும் கீழ்ப்படியும் குணமுடையவர்கள். பணிவுள்ளவர்கள். பிறரது மகிழ்ச்சிக்கு காரணமாவார்கள். எல்லோருடனும் எளிதில் ஒத்துப் போவார்கள். சமூகத்தில் மதிக்கப்படுவார்கள். சின்னச் சின்ன எதிர்பார்ப்புகளுடன் வாழ்வார்கள். பயம் அதிகமுடையவர்கள். சிறிய விடயத்திலும் திருப்தியடைந்து விடுவார்கள். முயற்சி செய்ய அக்கறை காட்டமாட்டார்கள். பெரிய எதிர்பார்ப்புகளை விரும்பாதவர்கள்.

**விதி எண் 3**

எச்சரிக்கைக் குணமுடையவர்கள். தந்திரசாலிகள். தனியாக முடிவெடுக்கும் குணமுடையவர்கள். முன்னின்று காரியம் சாதிப்பார்கள். தன்னம்பிக்கை அதிகமுடையவர்கள். எளிதில் பொறுமையிழப்பார்கள். அவசர புத்தி உடையவர்கள். தன்வசப்படாதவர்கள். வேதனை மனமுடையவர்கள். அமைதி என்பதை நாடுபவர்கள். நிம்மதிக் குறையுண்டு.

**விதி எண் 4**

பொருள் சேர்க்கும் குணமுண்டு. யாதார்த்தமான போக்குடையவர்கள். தன்வழியில் சிந்தித்து நடப்பவர்கள். சலிப்பற்ற உழைப்பாளிகள். எல்லாவற்றிலும் பணிவுடையவர்கள். பழைமையை விரும்புவார்கள். பழக்க வழக்கங்கள் மாறுபட்டுக் காணப்படும். எளிதில் குழப்பமடைவார்கள். மனோதிடம் இல்லாதவர்கள்.

**விதி எண் 5**

வித்தியாசமான மனப்பாங்குடையவர்கள். எல்லாவற்றிலும் மாறுபட்டுக் காணப்படுவார்கள். பிறரால் கட்டுப்படுத்தப்பட இயலாதவர்கள். உயர்ந்த எண்ணமுடையவர்கள். தீவிரமான சிந்தனையுள்ளவர்கள். திடீர் திடீரென்று புதுமாற்றங்களை செய்வார்கள். விரும்பிய ஒன்றை திடீரென்று வெறுப்பார்கள். மாற்றம் என்பது இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.



வீண்விரயம் செய்யும் மனப்போக்குடையவர்கள். தொழில் மாற்றம் செய்பவர்கள். வீடு, இருப்பிடத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

**விதி எண் 6**

பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். அனைவருடனும் சகஜமாகப் பழகும் சுபாவமிக்கவர்கள். அனைவராலும் மதிக்கப்படுவார்கள். பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவார்கள். உயர்ந்த பொறுப்புக்களில் புகழ் பெறுவார்கள். பிறருடைய பொறுப்புகளையும் தங்கள் தலையில் ஏற்றி வைத்துக்கொள்வார்கள்.

உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் கடினமாக உழைப்பார்கள். சிறிய பிரச்சினைக்கும் பெரிதாக வருத்தமடைவார்கள். ஆழ்ந்த யோசனை செய்பவர்கள். பார்த்த உடனே மற்றவர்களை நேசிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

**விதி எண் 7**

புத்திக் கூர்மை உடையவர்கள். காரண காரியத்துடன் செயல் ஆற்றுவார்கள். ஆற்றல் அதிகமுடையவர்கள். நுட்பமான திறமை உடையவர்கள். ஆராய்ச்சி செய்பவர்கள்.

தனித்தன்மை உடையவர்கள். பிறரிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் ஒதுங்குபவர்கள். பயந்த சுபாவமிக்கவர்கள். நம்பிக்கைக்கு மாறாக நடப்பவர்கள். உணர்ச்சி வசப்படுவார்கள்.

**விதி எண் 8**

யதார்த்தமானவர்கள். வியாபார வெற்றி வேந்தர்கள். எப்போதும் வியாபார சிந்தனையுடன் காட்சியளிப்பார்கள். கடின உழைப்பாளிகள். மன உறுதிப்பாடுள்ளவர்கள். தற்பெருமை பேசுபவர்கள். பேராசையுள்ளவர்கள். அதிக செலவு செய்பவர்கள். பிறர் முகம் வாடும்படி பேசக்கூடியவர்கள்.

**விதி எண் 9**

தாராள மனப்பான்மையுள்ளவர்கள். தத்துவவாதிகள். உள்ளுணர்வு அதிகமுள்ளவர்கள். பெரும் சக்தியுடையவர்கள். விரும்பிய துறையில் வெற்றி பெறுவார்கள். நெறிமுறைகளை உணர்ச்சிப் பெருக்குடன் எதிர்பார்ப்பவர்கள். பல விசயங்களில் கவனத்துடன் நடந்து கொள்வார்கள். குடும் வாழ்க்கையில் பிரச்சினைகள் நிறைந்தவர்கள்.

## பெயர் வசியம்

பெயர் வசியம் என்பது பெயருக்குள் அமைந்துள்ள துரதிர்ஷ்ட சக்தி வாய்ந்த பொருந்தா எண்ணுடைய எழுத்துக்களை நீக்குதல் மற்றும் வசியமிக்க அதிர்ஷ்டம் தரும் எழுத்துக்களைச் சரியாகச் சேர்த்து, அதிர்ஷ்ட எண்ணுடைய எழுத்துக்களை சரியாக அமைப்பதே ஆகும். பிறப்பு எண் மற்றும் விதி எண்ணுக்குச் சாதகமான எண்ணுடைய எழுத்துக்களைச் சரியாக நேர்த்தியாகச் சேர்த்து அமைப்பதே ஆகும்.

ஒவ்வொருவரின் பிறந்த திகதியில் உள்ள எண்களே விதியின் பாதையைக் காட்டும். பெயரில் உள்ள எழுத்துக்களின் வலுவைப் பொறுத்து வசியத்தைப் பொறுத்து வாழ்க்கை வெற்றியாகவும், தோல்வியாகவும் அமைந்து விடுகின்றது.

EACH ONE FATE IS IN THEIR DATE ONLY
EACH ONE FATE IS IN THEIR NAME ONLY

பெயர் வசியமென்பது மந்திரமோ, தந்திரமோ இல்லை. அவரவருடைய பெயருக்குள் இருக்கும் எழுத்துக்கள் பிறப்புக்குப் பொருந்தி வசியமாக அமைந்துள்ளதா என்பதைப் பற்றிக் கூறுவதாகும்.

*(தொடரும்)*

## அழையா விருந்தாளிகள்

இன்னொருவரை குளிர்சிப்படுத்தி தமது காரியங்களைச் சாதிப்பதில் எமது மக்களுக்கு நிகர் எமது மக்களேதான். தமக்கு காரியம் நடக்க வேண்டும் என்றால் எவ்வாறாறெல்லாம் செய்ய முடியுமோ அவ்வாறு செய்வதுடன் மட்டுமல்லாது, எமது கலாசாரத்துக்கு ஏற்றது அல்லது என்றாலும் செய்து முடிப்பார்கள்.

பாடசாலைகள் முதலாம் தவணைக்காக மூடப்பட இருக்கின்றன. ஒருவாறு சகல பாடசாலைகளும் தமது இல்ல மெய்வன்மை போட்டிகளை நடத்தி முடித்து விட்டன. இல்ல மெய்வன்மை போட்டிகளுக்கு விருந்தினர்கள் அழைக்கப்படுவது வழமை. அழைக்கப்படும் விருந்தினர்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாக இருப்பார்கள். அல்லது சாதனைக்குரியவர்களாக இருப்பார்கள். ஆனால் பெரும்பாலான பாடசாலைகள் இராணுவ தளபதிகளையும் பிரதம விருந்தினர்களாக அழைத்திருந்தனர். கட்டாயத்தின் பேரில் இராணுவத்தினரை விருந்தினர்களாக அழைத்தார்களா அல்லது தமது விருப்பின் பேரில் அழைத்தார்களா என்பது ஒரு புறம் இருக்க அவர்களை திருப்திப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் ஏராளம்.

**ஏன்... எதற்கு... எப்படி?**

தேசியக் கொடி ஏற்றுவது, சிங்கள பைலா பாடல்களை இடைவேளையில் ஒலிக்க விட்டு நடனமாட வைப்பது என்று அந்தப் பட்டியல் நீள்கின்றது.

இதனை விட யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் இவற்றையெல்லாம் விட ஒரு படி மேலே போய் தமது கைங்கரியத்தை செய்திருக்கின்றனர். அந்தப் பகுதி நாலாபுறமும் கடலால் சூழப்பட்டு நெடுந்தூரத்தில் இருக்கிறது. அந்தப் பகுதியை அம்பாந்தோட்டையை விட சிறப்பான பகுதியாக மாற்றியமைப்பேன் என்று மஹிந்தவும் சொல்லியிருக்கின்றார்.

இந்தப் பகுதியிலுள்ள பாடசாலையில் நடைபெற்ற இல்லமெய்வன்மை போட் டியில் இல்ல அலங்கரிப்பில் , ஓர் இல்லத்தினர் பௌத்த விகாரையை ஒத்த அமைப் பில் இல்லத்தை அமைத்துள்ளனர். இணநல்லிணக்கம் என்ற பெயரில் யாரை எல்லாம் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம் சளைத்தவரா நாம்?

-நக்கல் நரசிம்மன்-

## உதயனை விமர்சியுங்கள்

உதயா நீ பெண்ணினத்தின் பாரதியார். நீ சுமந்து வரும் செய்திகள் மூளையை சலவை செய்கிறது. உன்னை கண்கள் பார்க்கத் தவிக்கும். ஒரு நாள் நீ எம் கைகளில் தவழவில்லை என்றால் இதயம் துடிக்கின்றது. உண்மையின் வடிவம் நீ. சூரிய உதயத்தின் போது எம் கண்களில் உதயமாகும் சூரியனும் நீ. நீ சுமக்கும் செய்திகளை படித்தவுடன் ஒரு கணம் சிந்திக்கத் தோன்றுகிறது.

உன்னுடைய பணி பெரும் பணி. உண்மைகளை எடுத்துக்கூறும் ஊரறிந்த ஆசான் நீ. ஆசானின் அறிவுரைகள் மாணவர்க்கு பெரும் சிகரம். மங்கையரின் மானம் காக்க நெய்யப்படும் ஆடையும் நீ. சிறுமிகளின் கற்பதனை காவு கொள்ளும் ஆடவர்க்கு சின்னதான தயக்கத்தினை கொடுப்பதற்கு கை கொடுக்கும் ஆயுதம் நீ. தமிழ்த் தாயின் பண்பாடு இன்று சறுக்கி மண்ணில் விழுவதும் ஏன்? உன்னுடைய செய்திகள் தான் இப்போது பெண்ணினத்தின் பாரதியார். பாரதியின் புதுமைப் பெண்ணாய் மாற வேண்டும் பெண்ணினம். ஏமாற்றும் இளைஞர்களும் ஏளனம் செய்யும் வயதானவர்களும் போற்றுகின்ற முத்துக்களாய் திகழ வேண்டும் பெண்மணிகள். உன்னுடைய செய்திகள் தான் எம்மவரின் உற்சாகம்.

''இவ்வாறும் உலகில் நடக்கிறது நாம் எவ்வாறு வாழ வேண்டும்'' என்று யோசிக்க வைக்கும் உண்மையான தோழனும் நீ. உன் பணி மேலும் உயர உன் புகழ் ஊர் எங்கும் பரவ உன்னுடைய வாசகி நான் நன்றிகள் கோடி சொல்வதுடன் வாழ்த்துக்கள் பலதையும் சொல்கிறேன்.

**கார்த்தி, யாழ்ப்பாணம்.**

★ ★ ★

ஒரு பத்திரிகைக்கு இருக்க வேண்டிய அடையாளங்களோ, நோக்கங்களோ, கொள்கைகளோ, இவை எதுவுமே இல்லாத போதும் எழுத்துக்களும், வண்ணங்களும் இடம்பெறுவதால் சில காகிதங்கள். ''பத்திரிகை'' எனும் பெயரைப் பெற்று விடுகின்றன. உண்மையில்லாத செய்திகளை வெளியிடுவது, எழுந்தமானமான ஆய்வுகளை வெளியிடுவது, தன் சொந்த மக்களுக்கு எதிராகவே கூக்குரலிடுவது, ஆளும் வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டு உண்மைகளை சாகடிக்க போராடுவது என்பவை அப்படிப்பட்ட பத்திரிகைகளின் பணி.

அச்சுறுத்தல்கள், கண்டனங்கள், வசைகள் என்பவற்றை எதிர்த்து மிகக் கடினமான பாதையால் பயணிக்கும் திறன், சாகடிக்கப்பட்ட உண்மைகளை தோண்டியெடுத்து, துடைத்து, சாட்சியங்களோடு முன்னிறுத்தும் வலு (துணிவு) என்பவையே ஒரு பத்திரிகைக்கு இருக்க வேண்டியவை.

உதயன் பத்திரிகை வித்தியாசமாகவும், விசித்திரமாகவும் இவை எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்ட ஒரு பத்திரிகையாக வலம் வருகிறது. தமிழன் தன் மானத்தினையும், சுய கௌரவத்தினையும் இன்னும் இழந்துவிடவில்லை என்பதற்கு இத்தகைய தமிழ்த் தேசிய உணர்வு மிக்க பத்திரிகைகளே சாட்சியாக நிற்கின்றன.

நெடுங்கேணி ராயு

# அரைப்படி அரிசியில் அன்னம் விடியும் வரை மேளதாளம்

பெரும் புகழும் வேண்டி மனிதர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. 'அரைப்படி அரிசியில் அன்னம். விடியும் வரையில் மேளதாளம்' என்றொரு பழமொழி உண்டு. குறைவாகச் செய்தாலும், பலரும் அதைப் பெரிதாக நினைத்துப் பாராட்டவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அப்படிப் பாராட்டத் தவறுபவர்கள் வயிற்றெரிச்சல் பேர்வழிகள் என்று வகைப்படுத்தப்படுவார்கள். இன்று அரசியல், ஆன்மிகம், கலை என்று எல்லாத் துறைகளிலும் இந்தப் புகழாசை மலிந்திருக்கிறதைப் பார்க்கிறோம். ஆனால் புகழ் பற்றிய எண்ணமே இல்லாமல் பெரும் சாதனைகள் செய்தவர்கள் ஓரிருவர் அல்லர். ஒரு கூட்டமே ஒரு காலத்தில் நம் நாட்டில் இருந்திருக்கிறது.

எல்லாத் துறைகளிலும் முத்திரை படைத்தவர்களும், ஒட்டுமொத்த சமுதாய முன்னேற்றத்துக்குக் காரணமாய் இருந்தவர்களும் பாராட்டைவிட தங்கள் ஆத்ம திருப்தியையே முக்கியமாக நினைத்தார்கள். தாங்கள் சரியென்று இதயத்தின் ஆழத்திலிருந்து நம்பியதைச் செய்தார்களே ஒழிய பாராட்டுகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

எனவே அடுத்தவர் பாராட்டுக்கு அதிக முக்கியத்துவத்தை எப்போதும் கொடுத்து விடாதீர்கள். அடுத்தவர் பாராட்டுக்கள் உங்கள் செயலின் தன்மையைத் தீர்மானிக்க விட்டு விடாதீர்கள். தங்கள் நோக்கம் உன்னதமாக இருக்கட்டும் செயல் தங்கள் முழுத் திறமையின் வெளிப்பாடாக இருக்கட்டும். இரண்டும் இருந்தால் அந்தச் செயலைச் செய்து முடிக்கையில் கண்டிப்பாக மனநிறைவைக் காண்பீர்கள். அதைவிடப் பெரிய பாராட்டு அடுத்தவரிடமிருந்து உங்களுக்குத் தேவையில்லை.

எதுக்கெடுத்தாலும் பாராட்டுவது எவருக்கும் பிடிக்காது பாருங்கோ. பாராட்டுவதற்கு என்று ஒரு காலம் இருக்கு. அப்பொழுது எல்லோரும் தானாக பாராட்டுவார்கள் என்று புலிகளின் இயக்கத்தில் சேர்ந்து போராடப் போய் ஒரு வருடம் கழிந்த நிலையில் இரண்டு நாள் விடுமுறையில் வீட்டுக்கு வந்த ரவி சொன்னது ஞாபகத்துக்கு வருகுது. விடுமுறை முடிந்ததும் குப்பியை வீட்டிலேயே விட்டுட்டுப்போய் திரும்பி வந்து எடுத்துப் போன ரவி திரும்பி வீட்டுக்கு வரும்போது உயிரற்ற உடலாகத்தான் வந்தான். அப்பொழுது ஊரே கூடி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கும்பம் வைத்து குத்துவிளக்கு ஏற்றி அவன் உடலுக்கு மரியாதை செய்தது. அப்பொழுது தான் நினைத்துக்கொண்டேன் பாராட்டுவதற்க்கு என்று ஒருகாலம் இருக்கு. அப்பொழுது எல்லோரும் பாராட்டுவார்கள் என்று ரவி சொன்னது.

இப்படியாக ஊரே பாராட்டுவதுக்கும் மரியாதை செலுத்துவதற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். அல்லாதுவிட்டால் பாராட்டு ஒரு விளம்பரமாகவும், பெயருக்காகவும் போய்விடும். பாராட்டு என்றைக்கும் எல்லோரதும் மனதிலும் இருக்கும் படி இருக்கவேண்டும். இப்பொழுது அப்படி பாராட்டுவதற்க்கு ஒருவருமில்லை. இனி பிறந்தால்தான் உண்டு. இப்ப பாராட்டுவிழா நாளுக்கு நாள் இடம்பெறுகிறது. ஆனால் அந்தப் பாராட்டுகள் சொல்லும்படியாக இல்லாமல் போய்விட்டது. கழுத்தில் மாலையும் போட்டு பத்திரிகையில் தமது படத்தினையும் போடுவதற்கு எத்தனைபேர் முண்டியடிக்கிறார்கள் தெரியுமா?

பாராட்டு இப்பொழுது தங்களுக்கு தாங்களாகவே வைக்கவேண்டியுள்ளது. நூல் விமர்சனம் செய்யும்போதும் ஒருவரைப் பாராட்டும் போதும் எவரென்றே தெரியாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் இரண்டுக்கும் மதிப்புவரும். அதாவது நூல் விமர்சனம் செய்யும்போது நூல் ஆசிரியர் பற்றி அறியாமல் இருக்கவேண்டும். பாராட்டும்போது சேவை செய்பவராக இருக்கவேண்டும். இல்லாதுவிடின் இரண்டுக்கும் மரியாதை இல்லாமல் போய்விடும். வெளிநாடுகளில் ஒருவருக்குப் பாராட்டு விழா எடுக்கும்போது அவருக்கு பூங்கொத்து கொடுப்பார்கள். அவ்வளவுதான். அவ்வளவு சிம்பிலாக செய்வார்கள். இதற்கெல்லாம் நேரத்தை வீணடிக்கமாட்டார்கள். அப்படி இருப்பதால்தான் அந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து விட்ட நாடுகளாக இருக்கின்றன.

பாராட்டு விழாக்கள் உலகத்திலேயே யாழ்ப்பாணத்தில்தான் கூடுதலாக நடக்கின்றன. பாராட்டுபவர்களும், பாராட்டு விழாவினை மேற்கொள்பவர்களும் இதனை அறிவார்களா? போர் இடம்பெற்ற மண் இது. விடுதலையை வேண்டி நிற்கிறது. ஒடுக்கப்பட்ட இனமாக எமது இனம் நாதியற்று இருக்கிறது. அடிச்சாலும் கேட்கிறதுக்கு ஆள்கள் இல்லை. இப்படியாக எமது ஊர் உள்ளது. அபிவிருத்தி இல்லை. இப்படியாக எமது ஊர் இருக்கேக்க என்ன செய்து போட்டார்கள் என்று பாராட்டு விழா எடுக்கிறார்கள்? தமிழ் மக்களுக்காக செயற்படாத போது இப்படிப்பட்ட பாராட்டு விழாக்கள் எதற்கு யாழ்ப்பாணத்தில்? ஒருவரை பாராட்டி பாராட்டியே அவரிடம் முன்பு இருந்த செயற்பாடுகளை குறைப்பதற்கான வழியை ஏற்படுத்தி விடுகிறோம். இதனை எவரும் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை. பாராட்டு விழாக்கள் நடத்துவதிலே குறியாகச் சிலபேர் இருக்கினம். பாராட்டு விழாக்களை பெரிய செலவு செய்து நடத்துவதால் என்னபயன்?

அப்படி பாராட்டுகள் எமக்கு வேண்டுமா. பாராட்டுபவர்கள் என்ன கருதி பாராட்டுகிறார்கள் என்றுதான் தெரியாமல் உள்ளது. ஒரு நிறுவனமோ அல்லது தனி நபரோ ஒருவரை அவரது சேவையைப் பாராட்டும் போது அவரின் பங்கு இந்த மண்ணில் எந்தளவுக்கு பெறுமதி வாய்ந்தது என்பதைப் பார்க்க வேண்டும். பின்புதான் பாராட்டு தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். அதைவிட்டு விட்டு ஏன் பாராட்டுகிறோம் எதற்கு பாராட்டுகிறோம் என்று தெரியாமல் பாராட்டு விழாக்களை நடத்தி வருகின்றனர். ஒருவர் ஒருவரைப் பாராட்டத் தொடங்கினால் அவரைப் பார்த்து மற்றவரும் பாராட்டத் தொடங்கி விடுகிற பண்பாடு எங்களிடம் இருக்கிறது. அது ஏன் என்றுதான் தெரியவில்லை. அப்படி அந்தப் பாராட்டு விழாக்களுக்கு மக்களிடம் இருந்து பணமும் சேர்க்கப்படுகிறது.

ஒருவரை பாராட்டி பாராட்டியே அவரிடம் முன்பு இருந்த செயற்பாடுகளை குறைப்பதற்கான வழியை ஏற்படுத்தி விடுகிறோம்.

பாராட்டு விழா வைப்பது இயல்பு. ஆனால் பாராட்டு விழா வைப்பவர்கள் தங்களுடைய பணத்தில் பாராட்டு விழாவினை வைத்தால் நல்லது. அதைவிட்டு விட்டு கடைகளிலும், சனத்திடமும் நிதியினை வசூலித்து பாராட்டு விழா வைப்பது எந்த விதத்தில் நியாயமாகும். இப்படியாக நிதியினைப் பெற்று பாராட்டு விழா நடத்த வேண்டுமோ. இப்படியாக பாராட்டு விழாவை வைப்பதால் பாராட்டைப் பெறுகின்றவர்களுக்கு மரியாதை இல்லாமல் போய்விடும் பாருங்கோ. கூடுதலாக அரச அலுவலகங்களில்தான் இப்படிப்பட்ட பாராட்டு விழாக்கள் நடைபெறுகின்றன.

பாராட்டு விழாவுக்கு நிதியினை வசூலிக்க கிளம்பும் அரச அலுவலர் பணத்தினைக் கொடுக்கும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதை பாராட்டு விழா எடுப்பவர்கள் கவனிப்பார்களா? கவனிக்காதபடியால்தான் பாராட்டு விழா தொடர்கிறது. பாராட்டு விழா ஒருவருக்கு வைப்பது நல்லது. ஆனால் அந்த பாராட்டு விழாவினை மக்களிடம் நிதி சேர்த்து நடத்தக்கூடாது. இப்பொழுது பத்திரிகைகளில் பாராட்டு விழாக்கள்தான் குவிந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அவர்களது சேவை அந்தளவுக்கு இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மூன்று தசாப்த காலப் போரில் பல துன்பங்களை சுமந்து உறவுகளை, சொத்துக்களை இழந்துதான் நிர்க்கதியான நிலையில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள்.

■ பித்தன்

# சாகச விற்பனை

விடுப்புப் பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்து மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. எப்படியாவது முண்டியடித்து தாம் பார்க்க வேண்டியதை பார்த்தபின்னர் தான் யாழ்ப்பாணத்துச் சனத்துக்கு சாப்பாடு இறங்கும். அப்படிப்பட்ட சனத்துக்கு இனமத பேதமும் இந்த விடுப்புப் பார்க்கும் விடயத்தில் பெரிதாகத் தெரிவதில்லை.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இலங்கை இராணுவத்தினரின் சாகச நிகழ்வுகள் மூன்று நாள்களாக நடந்தன. 6000 அடி உயரத்தில் இருந்து பரசூட்டில் குதித்தல், மோட்டார் சைக்கிள்பாய்ச்சல்கள், நாய்களின் வீரதீரம், துப்பாக்கிகள் முழங்கும் அணிவகுப்பு என்று அந்த சாகசங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளில் இருந்து பெருமளவான மாணவர்கள் பஸ்களில் ஏற்றிவரப்பட்டிருந்தனர்.

இந்தச் சாகச நிகழ்வுக்கு வந்திருந்தவர்களில் அனேகர் பாடசாலை மாணவர்கள். அதிலும் பலர் பதின்ம வயதினர். அவர்களின் கண்முன்னால் கவர்ச்சியான பியர் ரின்கள் மலிவாக விற்பனையாகும் போது ஒரு வித உந்துதல் ஏற்பட்டு அவர்களும் அதனைப் பருகக் கூடிய சூழல் துரையப்பா விளையாட்டரங்கில் உருவாகியிருந்தது.

முதல்நாள் நிகழ்வின் போது நாய்களின் சாகசம் நடந்தது. அதன் போது ஏற்கனவே உள்ள ஒரு படைப்பிரிவின் கொடியைப் போன்ற போலியான கொடியொன்றை ஒரு நாய் கண்டு பிடிக்க வேண்டும். அந்தப் போலிக் கொடியை நடுவதற்கான சந்தர்ப்பம் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்போது வெள்ளைச் சீருடை அணிந்த ஒரு உயர்தர வகுப்பு மாணவனே மூச்சிரைக்க ஓடிச்சென்று அந்தக் கொடியை நட்டுவைத்தான்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த பார்வையாளர்கள் பலருக்கும் விளையாட்டரங்கில் இருக்க இடம் கிடைக்கவில்லை. பலர் நின்றபடியேதான் நிகழ்வுகளை அவதானிக்க முடிந்தது. அதனால் சாகசம் செய்தவர்களைவிடவும் பார்வையாளர் பகுதியில் நின்றவர்கள் வெயிலின் கொடுமையாலும், நெடுநேரம் நின்றதால் ஏற்பட்ட வலியாலும் களைத்துப் போயினர். ஆனால் அவ்வாறு களைத்துச் சோர்ந்து ஒரு குடிமகன் விழுவதற்கு எங்கள் அரசு அனுமதிக்குமா? அதற்கும் ஒரு மாற்று மருந்து மைதானம் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாகச நிகழ்வு நடந்த போது கறுப்பு ஜீன்சும், வெள்ளைச் சேர்ட்டும் அணிந்தபடி கழுத்தில் ஒரு பட்டியில் கொழுவப்பட்ட பெட்டிகளோடு நடமாடித் திரிந்தனர் பல இளைஞர்கள். அவர்கள் சுமந்துசென்ற பெட்டிகளில் சிவப்பு, பச்சை வர்ணங்களில் "பியர்" பானங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. 7-அப், ஸ்பிறைட் போன்ற குளிர்பானங்கள் ரின்களில் அடைக்கப்பட்டால் எப்படி இருக்குமோ அதேபோன்றே இவையும் ரின்களுக்குள் உறங்கிக் கொண்டிருந்தன. அந்த ரின்களை ஆசையோடு நோக்கும் இளைஞர்களை குறிவைத்து நகரும் கறுப்பு வெள்ளை சீருடை ஆசாமிகள் அவர்களிடம் தங்கள் வியாபாரத்தை நடத்தினார்கள். கொஞ்சநேரத்தில் காசு கைமாற, பியர் ரின்களோடு மைதானத்தில் இளைஞர்கள் உற்சாகக் கடலுக்குள் உருளத் தொடங்கினார்கள்.

கோணல் கோலங்கள்

சாகசத்தைப் பார்க்க வந்திருந்த இளம் பெண்களில் சிலர் பியர் ரின்களைச் சோடா என நினைத்து வாங்கிய வேடிக்கையும் துரையப்பா விளையாட்டரங்கில் மூன்று நாள்களும் நிகழ்ந்தது. பியர்ரின்கள் காலியாக, இளைஞர்களின் கண்களும் கைகளும் சும்மா இருக்கவில்லை. அவர்கள் தங்களால் இயன்ற சாகசத்தை பார்வையாளர் தரப்புக்குள் இருந்த பெண்களிடம் காட்டத் தொடங்கினார்கள். பெண்களும் இலேசுப்பட்டவர்கள் அல்லர். எவ்வளவு இறுக்கமாக உடைகளை அணிய முடியுமோ அவ்வளவு இறுக்கமாக அணிந்துகொண்டுதான் அனேக பெண்கள் வந்திருந்தனர். விருந்தினர் பகுதியில் இருந்த அரச அதிபர் உள்ளிட்ட ஒரு சிலரைத் தான் சேலையில் காணமுடிந்தது. (அரச அதிபருக்கு அன்றைக்கு வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 3 மணிக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஆனால் சாகசங்களால் மெய்மறந்துபோன அவர் மாலை 4 மணியளவில் தான் அந்த நிகழ்வுக்குச் சென்றிருந்தார் என்பது வேறு விடயம்)

வழமையாக பொது இடங்களில் புகைபிடித்தல், மது பானம் அருந்துதல் என்பன தடைசெய்யப்பட்ட விடயங்கள். ஆனால் அதனையும் மீறி துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த சாகச நிகழ்வில் பியர் விற்பனை எந்தவித தடங்கலும் இன்றி அமோகமாக அதுவும் பகிரங்கமாக - அரச அதிபரின் கண்முன்னாக - நடந்தேறியிருக்கிறது. இதற்கு உரிய அனுமதி பெறப்படவுமில்லை.

இந்தச் சாகச நிகழ்வுக்கு வந்திருந்தவர்களில் அனேகர் பாடசாலை மாணவர்கள். அதிலும் பலர் பதின்ம வயதினர். அவர்களின் கண்முன்னால் கவர்ச்சியான பியர் ரின்கள் மலிவாக விற்பனையாகும் போது ஒரு வித உந்துதல் ஏற்பட்டு அவர்களும் அதனைப் பருகக் கூடிய சூழல் துரையப்பா விளையாட்டரங்கில் உருவாகியிருந்தது. விளையாட்டரங்க கட்டடத்துக்குப் பின்பாக சீருடையுடன் சில மாணவர்கள் பியர் ரின்களோடு ஒளிந்துநின்று பருகி மகிழ்ந்ததும் அங்கு நடக்கவே செய்தது.

"மூச்சுக்கு முன்னூறு தரம் கலாசாரச் சீரழிவு, மாணவர் நலன், சிறுவர் மேம்பாடு என்றெல்லாம் வாய்ப்பந்தல் போடும் நம்மவர்கள் கண்முன்னே எல்லாவற்றையும் சிதைக்கும் செயற்பாடுகள் நடக்கும் போது அதை ஏன் தட்டிக் கேட்பதில்லை?" என்று இதனைப் பார்த்து வேதனையுற்ற ஒருவர் புறுபுறுத்தபடி சென்றார். அவரின் புறுபுறுப்பு எனக்கு சரிபோலவே படுகிறது. உங்களுக்கு...?

ஓடுகாலி